Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 16/50

ஏப். 28 - மே 04, 2005

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 611

## பொதுக் கட்டமைப்பின் புதிய போக்கு

## உலகை உலுக்கிய தற்கொலைத் தாக்குதல்கள்

## மேல் கொத்மலையின் கீழ் வெடிப்புகள்

## புதிய நூற்றாண்டும் புகலிடமும்

## முஸ்லிம்கள் 3 ஆம் தரப்பா?



## கல்வியே செல்வம்

வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணமாக்கும். கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்ற ஒரு பழமொழி நாம் அனைவரும் அறிந்ததே. செல்வத்துள் எல்லாம் தலைசிறந்த செல்வம் கல்விச் செல்வம் நிலையானது; நிறைவானது.


கல்விக்குக் கரைகாண முடியாது என்று பல கற்ற விற்பன்னர்கள் சொல்லிவைத்துள்ளார்கள். நல்லவனாக்கவும் வல்லவனாக்கவும் கல்வி மூலதனமாகின்றது.

மதங்கள் பலவுள்ளன. இனங்களும் அப்படியே. எல்லா மதமும் இயம்புவது அன்பு, அறம், பண்பு, நீதி, நேர்மை, ஒழுக்கம், இறை அச்சம், உயிர்களிடத்து நேயம் ஆகியவற்றை ஏற்படுத்தி மனிதநேயம் படைத்த புனிதனாக வாழவேண்டும் என்பதையே இந்த மையக்கருத்துக் கொண்டவர்களாக இருப்பினும் நம்மில் பலர் சரியான கல்வியை முறையாகக் கற்காமையால் முறை தவறாகி, நிறைவான ஒளியை விட்டு இருளில் விழுந்துவிடுகின்றோம். மறைகளில் குறையில்லை. கறை படிந்த மனக்குகையில் எழும் வெறிகொண்ட மத உணர்வுகளால்தான் சரியான துறையை விட்டு சகதிச்சுழிக்குள் விழவேண்டியேற்படுகிறது.

இது எதனால்? சற்று நிதானமாக நாம் யோசிப்போமானால் நிச்சயம் ஆன்மீகக் கல்வியின் அறிவுக்குறைவு, வழிநடத்தும் ஆசானின் ஆளுமையை நாம் அடிவருடியது குறைவு, சரியான மத அனுஷ்டானங்களின் மகிமையை அறியமுடியாத ஆற்றல் குறைவு என்பதை அறிய முடியும். இவற்றையெல்லாம் தவிர்த்து நல்ல பல நூல்களைத் தேடிக் கற்று கற்றவர்களை மதித்து, நாட்டுக்கும் வீட்டுக்கும் நற்பணியாற்றி நல்ல மனிதனாக வாழ முயல்வோமாக!

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.

# ஆன்மீகம்



## என் இருதயத்தைக் காண்கிறவர்

"நீர் என்னைக் காண்கிற தேவன்" : ஆதி - 16:13.

சகோதரனே, சகோதரியே! நம்முடைய தேவன் எம்மைக் காண்கிறவராயிருக்கிறார். நாம் வெளிப்புறமாக மற்றவர்கள் பார்க்க சந்தோஷமாக இருக்கலாம். உள்ளமோ எரிமலையாகக் குமுறிக் கொண்டிருக்கும். ஆயிரம் பிரச்சினைகளை உள்ளே வைத்துக்கொண்டு வெளியே சொல்லமுடியாமல் அடக்கிக்கொண்டு இருப்போம்.

ஆனால், நம்முடைய தேவன் அவற்றையெல்லாம் காண்கிறவராயிருக்கிறார். மனுஷர்களிடத்தில் சொன்னால் பரிகாசம் பண்ணப்படுவோம். பிரச்சினைகளைத் தீர்க்கிற வரை மறந்து, பிரச்சினைகளையே நினைத்து நினைத்துத் தளர்ந்து போகிறோம்.

"உன்னை ஜெநிப்பித்த கன்மலையை நீ நினையாமல் போனாய்; உன்னைப் பெற்ற தேவனை மறந்தாய்!" உபாகமம் 32:18.

சகோதரனே, சகோதரியே! பிரச்சினைகள் வரும்போது நாம் எமது சுய முயற்சியிலேயே தீர்க்க முயற்சிப்பது இயற்கை. ஆனால் இனி என்னால் ஒன்றுமே ஆகாது; என் சக்தி, பெலன், பணம் எல்லாம் விரயமானது மாத்திரமே மிச்சம், என்று அதோடு உட்கார்ந்துவிடுகிறோம்; சோர்ந்துபோய்விடுகிறோம். ஆனாலும் உன்னுடைய தேவன் கேட்கிறார் "நான், நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்; சாகப்போகிற மனுஷனுக்கும், புல்லுக்கொப்பாகிற மனுப் புத்திரனுக்கும் பயப்படுகிறதற்கும், வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கும் நீ யார்?" ஏசா - 51:12.

சகோதரனே, சகோதரியே! உன்னைக் கர்த்தருக்குள் பெலப்படுத்திக்கொள். "என்னைக் காண்கிற தேவன் என்னோடு இருக்கிறார். என்னை ஜெநிப்பித்த கன்மலையே! வானத்தையும் பூமியையும் ஒரு வார்த்தையினால் உண்டாக்கினரே! என் பிரச்சினைகள் எல்லாவற்றையும் பட்சிக்கும் அக்கினியாகிய உமது வார்த்தைக்கு முன்னால் வைக்கிறேன் சுவாமி" என்று சொல்லுவோம். "நீதியினால் ஸ்திரப்பட்டிருப்பாய், கொடுமைக்குத் தூரமாவாய்; பயமில்லாதிருப்பாய்; திகிலுக்குத் தூரமாவாய், அது உன்னை அணுகுவதில்லை." ஏசாயா - 54:14. ஆமென்.

-போல் ஜோன், தெல்தெனிய.

## அண்ணல் நபியின் "ரபீயுல் அவ்வல்"

அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகின்றான் முஹம்மதே! அண்டங்கள் அனைத்துக்கும் ஓர் அருட் கொடையாகவேயன்றி வேறெவ்விதமும் நாம் உம்மை அனுப்பவில்லை என்று. அல்குர் ஆன் - 21:107.

அண்ணல் நபி அவர்கள் அகில மாந்தர்களை நல்வழிப் படுத்தவே அல்லாஹ்வினால் இப் புவிக்கு இறை தூதராக அனுப்பப்பட்டார்கள்.

நபியே! இன்னும் அல்லாஹ்வின் நேர்வழி நோக்கி அவன் கட்டளைப்படி மக்களை அழைப்பவராகவும், பிரகாசிக்கும் ஒரு விளக்காகவும் இருக்கின்றீர் என இறை தூதரைப் பற்றி இறைவன் இறைமறையில் கூறியுள்ளான்.

அல்குர் ஆன் - 33:46.

மேல் நாட்டுப் பேரறிஞர் ஜோர்ஜ் பெர்னாட்ஷா சொல்லுகின்றார் : "நான் முஹம்மது நபியின் வாழ்க்கைப் புத்தகத்தை படித்தேன். அவர் மனித இனத்தை அழிவிலிருந்து பாதுகாக்க வந்தவர்" என்று

வாழ்ந்தவர் வரலாற்றில் வாழ்பவருக்கு வேண்டிய படிப்பினைகள் உண்டு. ஆம்....ஆம்...அதனை நமக்கு நினைவுபடுத்துகிறது அண்ணல் நபி அவதரித்த "ரபீயுல் அவ்வல்".

-எம்.சீ.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.608



### அதைத்தானே செய்கிறார்கள்!

என்ன பொம்மைகளே
தலையையா
ஆட்டுகிறீர்கள்?
எங்கட
கூட்டமைப்புக்காரர்கள்
மட்டுமென்ன
அதைத்தானே
செய்கிறார்கள்!

*எஸ்.பி.பி.கணேஷ்,*
*கொழும்பு - 02.*

### பரிசுக்குரிய கவிதை

### "அரசியல் பொம்மை"

அரசியலும் ஆயுதமும்
அடிப்படைத் தேவையாகிவிட்ட
இக்காலத்தில்
"அரசியல் பொம்மை"யை வைத்து
மனிதன் விளையாடுகின்றானா?
மனிதனை வைத்து பொம்மை
விளையாடுகின்றதா?

*றெ.பி.மரியடினேசன், மன்னார்.*

### தெரியவில்லை?

இங்கே!
எது நிஜம்? எது
போலி?
எங்கள் தேசத்தின்
சமாதானமும்
சண்டையும் போல்!

*சீனிராசா எடிசன்,*
*கொழும்பு - 13.*

## கவிதைப் போட்டி இல.611



*எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 05.05.2005.*

கவிதைப் போட்டி இல.611
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### பொம்மை!

நீயும் பொம்மை
நானும் பொம்மை!
பேச முடியாத....
நம்மைப் போல
அப்பாவி(கள்) யாரும்
சுடப்பட்டால்...
அநியாயம் அட்டூழியம்.
என்ன கொடுமை?
எல்லாருமே பொம்மை!

*ஏ.வாஹிட் ஏ.குத்துஸ்*
*பதுளை.*

### கேட்பதும் கொடுப்பதும்

"சுனாமியில் தொலைந்துபோன
என் பெற்றோரைத் தா"
என்றழுகின்றேன்.
'மிக்கி'யைத் தருகின்றீர்களே
அது எனக்குப் பாலூட்டுமா?

*அ. சந்தியாகோ,*
*கண்டி.*

### பொம்மலாட்டம்

நானும் பொம்மை
நீயும் பொம்மை என்று
பொய் கூறி எல்லோரையும்
பொம்மைகளாக்கிவிட்டு
பொம்மலாட்டம் ஆடுகின்றனர்
அரசியல் தலைவர்கள்.

*ஏ.எஸ்.எம்.ரவூப்,*
*கொழும்பு - 15.*

### சிங்காரப் பொம்மைகள்

சிந்தித்துச் செயற்படத் தெரியாத
சிங்காரப் பொம்மைகள் நம் பிரதிநிதிகள்
திரைமறைவில் உள்ள சூத்திரதாரி
தினம் தினம் நூலை இழுத்து இயக்காவிடில்
நிம்மதியாத் துயில்வார் அவைதனிலே!

*சீ. தங்கவடிவேல்,*
*மட்டக்களப்பு.*

### ஏமாற்றம்

அழுத குழந்தையின்
தற்காலிக ஆறுதலாக்கும்
இந்தப் பொம்மை
தேர்தல் கால
வாக்குறுதிகளுக்கு
நல்ல உதாரணமன்றோ!

*சங்கம ஹிஷாம்,*
*திருகோணமலை.*

### உறங்கும் உண்மை

உண்மை உறங்குகிறது
பொய்மை
விழித்திருக்கிறது
தரணியில் நடைபெறும்
தற்போதைய நிகழ்வு
இதுவன்றோ!

*ஏ.எம்.அல்-அப்ஸர்,*
*ஏறாவூர் - 02*

### ஏக்கத்தோடு...

உன் அணைப்புக்குள்...
புழுங்கிப் புழுங்கி...
நான் வெந்தது போதும்...
அம்மாவின்...
அணைப்புக்கு...
ஞாயிற்றுக் கிழமை...
என்று வருமோ...?

*பாத்திமா சிபாரா, கண்டி.*

### ஆறுதல்

அழாதே குழந்தாய்!
உன் தாய்...
தொலைக் காட்சியில்
தொடர் நாடகம் பார்க்கிறாள்.
அது முடிந்த பின்தான்
உன் பசி போக்க
பால் தருவாள்!!

*சிஹ்னாஸ் தௌபீக்,*
*புத்தளம்.*




# வாசக[ர்] சாலை

## வாழ்க! வளர்க!!

'தினமுரசு' வாரமலரினை இரசித்து
வாசிக்கும் ஆயிரக்கணக்கான
வாசகர்களில்
நானும் ஒருவன். எனது கவிதைக்கு
முதலிடம் கொடுத்துப் பிரசுரித்த
'தினமுரசு'க்கு
எனது உளம் கனிந்த பாராட்டுக்கள்!
நன்றிகள்!!
உற்பத்திச் செலவுகள்
அதிகரித்திருப்பதால்
'தினமுரசு' வாரமலரின்
விலையை அதிகரிப்பது பற்றி
ஆராயப்படுவதாக அறிந்தேன்.
அது பற்றி நான் எந்தவிதமான
எதிர்ப்பையும் தெரிவிக்க மாட்டேன்.
விலை அதிகரிப்பு தவிர்க்கமுடியாதது.
என்னைப் பொறுத்தவரையில் எந்த
ஆட்சேபனையும் கிடையாது.

என்றும் பத்திரிகையின்
தரத்தில் நிரந்தரமாக முன் நிற்கும்
'தினமுரசு' வாரமலரின் பணிதொடர
எனது வாழ்த்துக்கள்.
தினமுரசு வாழ்க!
தினமுரசு வளர்க!!

*-ஏ.எஸ்.எம்.ரவூப், கொழும்பு - 15.*

## புகழ்வதில் மகிழ்ச்சி தினமுரசு

வண்ண வண்ணப் புதுமைகள் உன்னில்
கண்டேன்
வாரத்தில் ஒரு முறை பூக்கின்ற பூ
அல்லவா நீ!
அறியாத புதுப் புது விடயங்களை
அறிவதற்கும்
வாசகர் நெஞ்சங்களைக் கொள்ளை
கொள்வதற்கும் இம் மண்ணில் இயக்கிய
'தினமுரசு' ஆசிரியருக்கு மிக மிக நன்றி!
'தினமுரசு' உன்னைப் புகழ்வதில்
என்னில் ஏன் இந்த மகிழ்ச்சி - நீ
சொல்வாயா? இன்றுபோல் என்றும்
நிலைத்து நிற்க பல்லாண்டு வாழ
வாழ்த்துகிறேன்.

*-கே.எல்.ஹில்மி, சாய்ந்தமருது - 13.*

## உனக்கு யார் நிகர்?

உன்னதமான விடயத்தை
உரைக்கிறாய்......
நட்புக்கு நம்பிக்கை
ஊட்டுகிறாய்.....
ஆக்கத்துக்கு
ஊக்கமளிக்கிறாய்....
மூலைமுடுக்கில் நடப்பதை
எடுத்து
உரைக்கிறாய்......
புதுமையான விடயத்தைப்
புகட்டுகிறாய்....
மாணவனுக்கு
ஆசானாய் இருக்கிறாய்....
உனக்கு நிகராக
யார் உண்டு!....

*-எஸ்.எம்.ஜௌபர்.*

# உங்கள் பக்கம்

## பொத்துவிலில் தேய்பிறையாகின்ற சில கிராமங்கள்

ஆத்துமுனை, களப்புக்கட்டு இரு கிராமங்களும் களப்பை அன்றிய கிராமம். இந்த இடத்தில் வாழும் அனைவரும் தமிழ் பேசுகின்றவர்கள். மழை காலங்களில் வேறு கிராமங்களிலிருந்து வாய்க்கால் வழியாக நீர் வந்து, களப்பு நிரம்பி நீர் அதிகமாக அதனை அண்டி நிற்கும் கிராமங்களுக்குள் களப்பு நீர் பெருகி வருகின்றதனால் இக் கிராம மக்கள் இடம் பெயர்ந்து படும் கஷ்டங்களையும் துன்பங்களையும் சொல்ல முடியவில்லை. இந்த காலத்தில் வருகின்ற நீருக்கு களிமண் வீடும் ஏனைய குடியிருப்புகளும் நீருடன் தரை மார்க்க மாகின்றன. சிறுபிள்ளைகள் உயிர் இழந்ததையும் காணக்கிடைக்கின்றது. அணிந்த ஆடைக்கு மாற்று ஆடையில்லாமல் அனைத்தையும் இழந்துவிட்டும் பாதையோரங்களில் படுத்துறங்கும் பரிதாபமான காட்சியை நான் கண்டுள்ளேன்.

நீர் பெருக்கெடுத்து வருதல், அக்கிராமத்தில் அமைந்திருக்கும் இளம் பிஞ்சுகள் கல்வி கற்கும் அல் - அஸ்ரப் வித்தியாலயம் கூட, நீர் நிரம்பி வழியக் கண்டுள்ளேன். இந்த சூழ்நிலையில் மாதக் கணக்கில் இயங்க முடியாத சூழ்நிலையில் பாடசாலை மண்டபத்தில் நீர் படிந்திருந்தாலும் ஓரிரு நாட்களில் சுத்தப்படுத்தி, பல சிரமங்களை மேற்கொண்டு ஓரிரு நாட்களுக்குள் அதிபர் அப்துல் மஜிட் மற்றும் ஆசிரிய ஆசிரியைகள் மாணவர்களை அழைத்து பாதிக்கப்பட்ட மாணவிகளுக்கு உதவிகளைப் புரிந்து பாடசாலையை ஆரம்பம் செய்வார்கள். உண்மையில் இந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பின் தங்கிய இக் கிராமத்தை மாற்றியமைத்து சிறந்த சமுதாயத்தை, நற்பண்புகளை கொண்டு சமூகத்தின் மத்தியில் மறுமலர்ச்சியைக் கொண்டுவர வேண்டுமென புரிந்துணர்வுடனும், திட்டமிட்ட கொள்கையுடனும் அயராது கஷ்டப்படுகிறார்கள். இதற்கு பொறுப்பானவர்கள் கவனம் எடுப்பார்களா?

-ஏ.ஜீ.பாறூக், பொத்துவில் - 05.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -4-514282
தொலை நகல் (Fax):-4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணம் எங்கே?
## தமிழ்ச்செல்வனிடம் செஞ்சிலுவைச் சங்கம் கேள்வி

கடந்த இருபதாம் திகதி கொழும்பில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரி.ஜெயரட்ணம் புலிகளின் காவலில் உள்ளாராவென்று கேட்டு சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி, புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுக்குக் கடிதமொன்றினை அனுப்பிவைத்துள்ளது. தமிழில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இக் கடிதத்தில் ஜெயரட்ணம் தொடர்பாக ஏதாவது தகவல் தெரியுமாவென்றும் கேட்கப்பட்டுள்ளதாகச் செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டியின் கொழும்புக் கிளையின் தகவல் அதிகாரி எம்.இஷாத் தெரிவித்தார். மர்மமான முறையில் காணாமற் போன இந்த இன்ஸ்பெக்டரின் மனைவியான திருமதி சரளா ஜெயரட்ணம் கொழும்பில் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளைச் சந்தித்து, கடத்தப்பட்ட தனது கணவரை மீட்க உதவுமாறு கோரியதையடுத்தே மேற்படி கடிதம் எழுதப்பட்டதாகவும் இஷாத் தெரிவித்தார். சரளா ஜெயரட்ணத்தின் புகாரையடுத்து பொலிஸாரோடு தொடர்புகொண்டு விசாரித்ததாகவும் அவர் கூறினார். புளொட் இயக்க முன்னாள் உறுப்பினரும் புலிகளின் தற்போதைய புலனாய்வுப் பிரிவு அங்கத்தவருமான மனோ என்பவரின் அழைப்பையேற்று கொழும்பிலுள்ள மவுண்ட்லேவினியா ஹோட்டலுக்கு இரவு விருந்துபசாரத்துக்குச் சென்றிருந்தவர், பின்னர் வீடு திரும்பவில்லையெனப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனைவியுடனும் இரு பிள்ளைகளுடனும் அவர் விருந்துபசாரத்துக்குச் சென்றிருந்தார். விருந்தில் மதுபானம் பரிமாறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தனது குடும்பத்தவர்களை வீட்டுக்குச் செல்லுமாறு கூறிய ஜெயரட்ணம் வெள்ளை வானொன்றில் மனோவுடன் சென்றாரென்றும் அதன் பின்னர் அவர் வீடு திரும்பவில்லையென்றும் சரளா தனது புகாரில் குறிப்பிட்டிருந்தார். புலிகள் தொடர்பான புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணத்தைப் பத்து வருடங்களுக்கு மேலாகப் புலிகள் தேடி வந்தனரென்றும் தெரிவித்த திருமதி ஜெயரட்ணம், தனது கணவரைப் புலிகளே கடத்திச் சென்றுள்ளனரென்றும் குறிப்பிட்டிருக்கிறார். தமிழ்ச்செல்வனிடமிருந்து செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும் இஷாத் தெரிவித்தார்.


திருமதி சரளா ஜெயரட்ணம்

## விசாரணை தொடர்கிறது

புலிகளால் வன்னிக்குக் கபடத்தனமாகக் கடத்தப்பட்டு, சிறைவைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்ட லண்டன் பிரஜையான இராஜசிங்கம் ஜெயதேவன், ஜெனீவாவிலுள்ள சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டிக்கு எழுதிய கடிதம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருவதாகக் கொழும்பிலுள்ள செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டிப் பேச்சாளர் எம்.இஷாத் தெரிவித்தார். புலிகள் ஆட்களைக் கடத்திச் சிறைவைத்துச் சித்திரவதை செய்வதாகவும், இது குறித்து சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி விசாரணை நடத்த வேண்டுமென்றும், இவற்றைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் ஜெயதேவன் தனது முறைப்பாட்டில் கோரியிருந்தார்.





புத்தளம், தில்லையடி வின்னர் விளையாட்டுக் கழகத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்ற வின்னர் கழகத்துக்கு வெற்றிக் கிண்ணத்தை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பனை அபிவிருத்திச் சபையின் தலைவருமாகிய எஸ்.சிவதாசன் வழங்குகையில் எடுக்கப்பட்ட படம். ரத்மல்யாய கிராம சபைத் தலைவர் எம்.ஏ.ஜி.சபல்லாவும் படத்தில் காணப்படுகிறார். சுட்டுக் கொல்லப்பட்ட புத்தளம் ஈ.பி.டி.பி. அமைப்பாளர் தம்பித்துரை சிவகுமாரன் (பவான்) அவர்களின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான நிதியுதவியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கியிருந்தமை குறிப்பிடத் தக்கது. வெற்றியீட்டிய அணியின் உறுப்பினர்கள் கீழேயுள்ள படத்தில் காணப்படுகின்றனர்.

# அமைச்சர் டக்ளஸை கொலை செய்ய
## குண்டு நிரப்பப்பட்ட இரு வாகனங்கள் கொழும்பில்!

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கொலைசெய்வதற்குக் குண்டுகள் நிரப்பப்பட்ட இரண்டு வாகனங்களைப் புலிகள் கொழும்புக்கு அனுப்பி வைத்திருப்பதாகப் புலனாய்வுத் துறைக்கு நம்பகமான தகவல் கிடைத்துள்ளது. இதனை இலங்கைக்கு வருகை தந்து, நாடு திரும்பிய நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரடியாகவே தெரிவித்திருக்கிறார். கடந்த இருபதாம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான தூதுக்குழுவினருக்கும் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான நோர்வே தூதுக்குழுவினருக்குமிடையில் கொழும்பிலுள்ள அமைச்சில் நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த விபரம் தெரிவிக்கப்பட்டது. இலங்கையின் இன்றைய அரசியல் நிலை மற்றும் வடக்கு, கிழக்கில் நிலவும் சூழ்நிலைகள் பற்றியும் அமைச்சர் எடுத்து விளக்கினார். ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் உட்பட மாற்றுக் கருத்துக் கொண்டவர்களையும் பொது மக்களையும் புலிகள் சுட்டுக் கொல்வது பற்றியும் விளக்கிய அமைச்சர், புலிகள் இயக்கத்துக்குள் எழுந்துள்ள உள்முரண் பாடுகளைத் திசை திருப்பும் நோக்கிலும், புலிகள் மீது மக்கள் கொண்டிருக்கும் அவநம்பிக்கையை மூடிமறைப்பதற்கும் இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றன ரென்றும் சொன்னார். சுனாமி மற்றும் ஏனைய இடையூறுகளால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு உதவும் நோக்கில் ஈ.பி.டி.பி. அளித்துவரும் பங்களிப்புகளுக்கு இடையூறு ஏற்படுத்தவும், மக்கள் மத்தியில் ஈ.பி.டி.பி.க்கு ஏற்பட்டுவரும் பரந்துபட்ட ஆதரவைத் தடுத்து நிறுத்தவுமே புலிகள் கொலைகளைப் புரிவதாகவும் சொல்ஹெய்முக்கு எடுத்துக் கூறப்பட்டது. புலிகளின் வரி விதிப்பு, கப்பக் கோரிக்கை, ஆட்கடத்தல் ஆகியவற்றால் வடக்கு - கிழக்கு மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. சுனாமி நிவாரணமெனக் கூறி, அரச அதிகாரிகளிடமிருந்து பொய்க் கணக்குக் காட்டி பணம் அபகரிக்கும் புலிகளின் செயற்பாடுகள் குறித்தும் எடுத்துக் கூறப்பட்டது. மக்கள் ஆர்ப்பாட்டமென்ற பெயரில் சமூக விரோத சக்திகளைப் புலிகள் தூண்டிவிடுவது பற்றியும் அமைச்சர் விளக்கினார்.

வன்னிப் பகுதியிலுள்ள சுமார் நூற்றுக்கு மேற்பட்ட ஆலயங்களின் தர்மகர்த்தாக்கள் கொழும்பிலுள்ள இந்து சமய அமைச்சுக்கு வந்து இரண்டு கோடி ரூபா பணத்தை முதற் கட்ட நிதியாகப் பெற்றமையும் சொல்ஹெய்மிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

## தமிழையும் சைவத்தையும் வளர்க்க நடவடிக்கை

இந்து சமயத்தின் தொன்மையையும் மேன்மையையும் உலகளாவிய ரீதியில் பரப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்க இந்து சமய அலுவல்கள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா திட்டமிட்டுள்ளார். இதன் முதற் கட்டமாக வானொலியூடாகச் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த கலந்துரையாடலொன்று அண்மையில் அமைச்சில் இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் சைவசமயப் பிரமுகர்கள், புத்திஜீவிகள், அமைச்சின் ஆலோசகர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பொதுக்கட்டமைப்பை புலிகளிடம் கொடுக்காதீர்
### -ஆனந்தசங்கரி

"வெறுமனே சமாதானத்தின் பேரால் புலிகளைத் திருப்திப்படுத்தும் வேலைகளை விடுத்து வடக்கு, கிழக்கில் புலிகளின் அராஜக நடவடிக்கைகளால் மக்கள் படும் அவதிகளை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும். புலிகள் இயக்கத் போன்ற கொடூரமான பயங்கரவாத இயக்கம் உலகில் எதுவுமில்லை. இவர்களுக்குக் கீழ் அடிமைப்பட்டுச் சமாதானம் பற்றிப் பேசத் தமிழ் மக்கள் தயாரில்லை" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, இலங்கைக்கு விஜயம் செய்த நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்ரினா ரொக்கா ஆகியோரிடம் கையளித்த மகஜரொன்றில் குறிப்பிட்டுள்ளார். அரசுக்கும் புலிகளுக்குமிடையில் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தக் கூடாதென்று இவர்களிடம் வலியுறுத்தியிருக்கும் அவர், அதற்கான காரணங்களையும் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு அரசியல் கட்சிகள் இயங்கும் தெற்கில் இவ்வாறான பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படவில்லை. அதற்கான பேச்சும் இல்லை. வடக்கு, கிழக்கிலுள்ள எட்டு நிர்வாக மாவட்டங்களில் 73 பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளன. இவற்றில் 47 அரசின் பூரண கட்டுப்பாட்டிலுள்ளன. 15 பிரிவுகள் மட்டுமே புலிகளின் பூரண கட்டுப்பாட்டி லுள்ளன. மிகுதி பத்துப் பிரிவுகளும் அரசினதும் புலிகளினதும் கட்டுப்பாட்டிலுள்ளன. வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதிகளில் 60 சதவீதமானவை புலிக் கட்டுப்பாட்டிலுள்ளவை என்பது பொய். புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் சட்டபூர்வ அந்தஸ்தைப் பெற முனைகிறார்கள். அவர்கள் கொலைகாரர்களென்று தனது மகஜரில் குறிப்பிட்டிருக்கிறார் ஆனந்தசங்கரி.

## புதிய தலைவர்

மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.தவராஜா நியமிக்கப்பட்டுள்ளார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப் புதிய நியமனத்தை வழங்கியுள்ளார். முன்னர் இக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்த குணசேகரம் சங்கர் கடந்த இருபதாம் திகதி அப் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## மாணவர்களை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுத்த வேண்டாம்
### -டி.எஸ்.கல்லூரியின் முன்னாள் அதிபர்

தேசியப் பாடசாலைகளில் முதலாந்தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக எழுந்துள்ள ஊழல் குற்றச்சாட்டுகளையடுத்து மூன்று தேசியக் கல்லூரிகளின் அதிபர்கள் வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஆதரவாக நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களில் பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்துவது மிக அநாகரிகமான செயலென்று கொழும்பு டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரியின் முன்னாள் அதிபர் ஏ.சி.அலஸ் தெரிவித்தார். டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரியின் அதிபர் இரகசியப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டது தொடர்பாகவும், இந்த அதிபருக்கு ஆதரவாகப் பழைய மாணவர் சங்கம் நடத்திய ஆர்ப்பாட்டம் தொடர்பாகவும் கேட்டபோதே முன்னாள் அதிபர் மேற்கண்டவாறு கூறினார். ஜனாதிபதி நியமித்த விசாரணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையின் பேரிலேயே கொழும்பு ஆனந்தாக் கல்லூரி, டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி, கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி அதிபர்கள் நீக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தாம் நீக்கப்பட்டமை சட்டவிரோதமான செயலென்று கருதினால் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்து நீதி கோர முடியுமென்றும் அதிபர் கூறினார்.

## லண்டன் ஆலய அர்ச்சகரின் கார் தாக்கப்பட்டது

லண்டன் வெம்ளியிலுள்ள ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் அர்ச்சகரான குமார் என்பவரின் காரை புலிகளின் ஆதரவாளர்கள் மூவர் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளனரென்று பொலிஸில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. கபடத்தனமான முறையில் முன்னாள் புலிப் பிரசாரகர் ஜெயதேவனை வன்னிக்கு அழைத்து மிரட்டி, மேற்படி ஆலயத்தின் நிர்வாகப் பொறுப்புகள் மோசடியான முறையில் புலிகளின் முகவரான சீவரத்தினம் என்பவரின் சிவயோகம் அறக்கட்டளை நிதியத்துக்கு மாற்றப்பட்டது தெரிந்ததே. 59 நாட்கள் கைதியாகவிருந்த ஜெயதேவன் லண்டன் திரும்பியதும் ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாகம் சம்பந்தமான வழக்கு லண்டன் மேல் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு மீண்டும் ஆலய நிர்வாகம் ஜெயதேவனிடம் கையளிக்கப்பட்டது. மூன்று வார காலம் புலி முகவரிடம் மேற்படி ஆலய நிர்வாகம் இருந்தபோது ஆலய அர்ச்சகர்கள் பலர் வேலைநீக்கம் செய்யப்பட்டனர். அவர்களில் குமாரும் ஒருவர். மீண்டும் அவர் ஆலயக் கிரியைகள் நடத்த வந்தபோது இத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. குடிபோதையில் சென்ற புலி ஆதரவாளர்களான மூன்று தமிழ் இளைஞர்கள் ஆலய வளவுக்குள் புகுந்து ஆபாச வார்த்தைகளால் திட்டியதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராடாரில் அகப்படாத விமானங்கள் இல்லை

ராடாரில் அகப்படாத ஸ்ட்லேன் விமானங்கள் புலிகளிடம் இல்லையென்று விமானப்படையின் சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். கிளாலிக் கடலேரிக்கு மேலாகப் பறந்ததாகக் கூறப்படும் விமானங்கள் பற்றிக் கேட்டபோதே அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர். கிளாலிக்கு மேலாகப் பறந்ததாகக் கூறப்படும் விமானத்தை இராணுவ வீரர்களே கண்டனரென்று சொல்லப்படுகிறது. இச் சிறு விமானத்தின் நிறத்தைக் கூட அவர்களால் காண முடியவில்லையென்றும் அதிகாரிகள் கூறினர்.

## தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்குப் புதிய இயந்திரம்

மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ள தெல்லிப்பளை புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு புற்றுநோய் சிகிச்சையளிப்பதற்கான கொபால்ற் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. யுத்தத்தின் காரணமாக 22 வருடங்களுக்கு முன்னர் அங்கிருந்த கொபால்ற் இயந்திரம் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. சுமார் பத்துக் கோடியே எண்பது இலட்ச ரூபா பெறுமதியான இப் புதிய இயந்திரத்தை சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா வடக்கு, கிழக்கு சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் வி.ஜெகநாதனிடம் அண்மையில் கையளித்தார்.

## றொக்கா கூறியது

அமெரிக்காவில் புலிகள் இயக்கம் சுதந்திரமாக நிதி சேகரிக்க அமெரிக்க அரசாங்கம் அனுமதிக்கமாட்டாதென்று அந்த நாட்டின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா கல்முனையில் தெரிவித்தார். கடந்த 19ஆம் திகதி கல்முனை பாத்திமா வித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவத்தின் போது அவர் இவ்வாறு கூறினார். புலிகள் இயக்கத்துக்கு நேரடியாக நிதி வழங்கவும் தனது அரசாங்கம் தயாரில்லையென்றும் றொக்கா தெரிவித்தார்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# முரசம்

## உழைப்போரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வேண்டும்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

உழைத்து வாழும் ஒவ்வொருவரையும் இவ்வருடத்தின் உழைப்பாளர் தினத்தில் கௌரவத்தோடு நினைவு கூருகின்றோம். இதே சந்தர்ப்பத்தில் கடந்த டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமிப் பேரலைகளினால் இறந்துபோன தொழிலாளர்களுக்கும் எமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சுனாமிப் பேரலைகளினால் தொழில் வாய்ப்புகளையும், தொழில் ஸ்தாபனங்களையும் இழந்து நான்கு மாதங்களாகிவிட்ட நிலையிலும், மீண்டும் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த முடியாமல் - தொழில் நிறுவனங்களைப் புனரமைக்க அல்லது மீள அமைக்க முடியாமல், அகதி முகாம்களில் நிவாரணத்தை நம்பி வாழும் உயரிய தொழிலாளர்களின் நிர்க்கதியான நிலைமை மாற்றமடைய வேண்டும்.

வியர்வை சிந்தி உழைத்துக் கௌரவமாக வாழ்ந்தவர்கள், இப்போது அநாதரவாக அகதி முகாம்களில் வாழ்வது கொடுமையாகும். நிறுவ வாய்ப்பேயில்லாத பொதுக்கட்டமைப்பைப் பற்றிய வீணான கால தாமதத்தை விட்டுவிட்டு, மக்கள் தாமாக உழைத்துச் சொந்த வருமானத்தில் வாழ்கின்ற சூழல் உருவாக வேண்டும்.

இவற்றுக்காக அழுத்தம் கொடுக்கும் அதே வேளையில் அரச மற்றும் அரச சார்பற்ற ஊழியர்கள் படுகொலை செய்யப்படுவதும் கடும் கண்டனத்துக்குரியதாகும். கருத்து வேறுபாடுகளுக்காகவும், கப்பம் அல்லது வரி தர மறுப்பதற்காகவும், அல்லது முறைகேடான திட்டங்களுக்கு இணங்கிச் செயற்பட ஒத்துழைக்காததற்காகவும் மக்களின் சேவகர்களைச் சுட்டுக் கொல்லும் மிருகத்தனம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.
படுகொலைகள் புரியப்படும் விதத்தையும், குறிவைக்கப்படும் நபர்கள் குறித்த பின்னணியையும் கொண்டு இப் படுகொலைகளைப் புலிகளே செய்கின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றபோதும், அரசாங்கம் இவ் விடயத்தில் பாராமுகமாக இருந்துவிட முடியாது. குறைந்த பட்சம் அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலாவது ஒவ்வொரு இலங்கைப் பிரஜையின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும். இந்த உத்தரவாதத்தை அரசாங்கம் வலுவாக வழங்குகின்றபோதே அரச - அரச சார்பற்ற ஊழியர்கள் துணிச்சலோடு மக்களுக்குச் சேவையாற்ற முடியும். மக்களும் அமைதியான வாழ்க்கையை வாழவும் முடியும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பொதுக் கட்டமைப்பின் புதிய போக்கு

நாடு இடியப்பச் சிக்கல் போல் பல நெருக்கடிகளை எதிர்நோக்கி நிற்கிறது. அரசைக் கவிழ்த்துவிடுவதற்கான முஸ்தீபுகளில் பிரதான எதிர்க்கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சில முஸ்லிம் தரப்புகளும் தங்களால் இயன்ற சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றன. அரசைக் கவிழ்த்துவிட்டால் பாராளுமன்றத் தேர்தலைச் சந்திக்கலாம், அதனூடாக ஆட்சி லகானைப் பிடித்து விடலாமென்பது அவர்களின் கணிப்பு. எப்படியாவது அடுத்த வருட இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடக்குமென்பதும் அவர்களின் ஆக்ரோஷமான நடவடிக்கைகளுக்குக் காரணமாகும். அரசாங்கமோ இனப்பிரச்சினையை மையமாக வைத்து சர்வஜன வாக்கெடுப்பொன்றினை நடத்தி, சமஷ்டி முறையான தீர்வொன்றினை ஏற்படுத்துவதோடு செயலாற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையை ஒழிப்பதன் மூலம் பாராளுமன்றத்துக்கு அதிகாரத்தைக் கையளித்து, தொடர்ந்தும் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ளவும் முனைகிறது. இதற்கிடையில் பல்கலைக்கழகங்களை அரசு தனியார் மயப்படுத்தப் போவதாக எதிர்க்கட்சிகள் கூக்குரலிடுகின்றன. அரசோ அடித்து மறுத்து வருகிறது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் மின்சார சபையும் மற்றொரு பிரச்சினையில் மையம் கொண்டுள்ளன. தனியார் மயப்படுத்தலா? மறுசீரமைப்பா? என்ற வாதப் பிரதி வாதங்கள் எதிர்க்கட்சிக்கும் ஆளும் கட்சிக்குமிடையில் மட்டுமல்ல, ஆளும் கூட்டமைப்புக்குள் கூடப் பெரும் பிரச்சினையைக் கிளப்பிவிட்டிருக்கின்றன.

இந்த நிலையில்தான் வடக்கு, கிழக்கில் ‘சுனாமி’ நிவாரண, மீள் கட்டுமாணப் பணிகளை மேற்கொள்ள அரசும் புலிகளும் இணைந்து பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்த வேண்டுமென்ற யோசனை முத்தரப்புப் பிரச்சினையாக மாறியுள்ளது. நோர்வே, அமெரிக்கா போன்ற நாடுகள், அரசும் புலிகளும் இணைந்து இந்தப் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கோரி வருகின்றன. இது சமாதானத்துக்கான ஏறுபடியாக அமையுமென்பதும் அவர்களின் வாதம். உள்நாட்டைப் பொறுத்தவரையில் பொதுக்கட்டமைப்புக்கு எதிராகவும் ஆதரவாகவும் இரு முகாம்கள் கோஷமிடுகின்றன. பொதுக் கட்டமைப்பில் புலிகளை சட்ட ரீதியான அரசோடு சமபங்குதாரர்களாக இணைத்துக்கொள்ள வேண்டுமென்பது இந்தியா தவிர்ந்த சில வெளிநாடுகளின் விருப்பம். பொதுக் கட்டமைப்பு ஆளும் கூட்டமைப்புக்குள் கூடப் பாரிய பூசல்களைக் கிளப்பிவிட்டிருக்கிறது. ஜனாதிபதி பொதுக் கட்டமைப்புக்கு ஆதரவாகப் பேசி வருகிறார். சமாதானத்துக்கும் பொதுக் கட்டமைப்புக்குமெதிரானவர்கள் ‘மூளைப் பிசகானவர்கள்’ என்று ஜனாதிபதி சாடியுள்ளார். அரசும் புலிகளும் இணைந்து பொதுக்கட்டமைப்பொன்றினை ஏற்படுத்திய மறு நிமிடமே ஆட்சியிலிருந்து வெளியேறுவோமென்று பிரதம பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. எச்சரித்திருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியோ பொதுக் கட்டமைப்புக்கு ஆதரவாகக் குரலெழுப்பி வருகிறது. புலிகள் வழமை போலப் பொது கட்டமைப்பில் கூடுதல் பிரதிநிதித்துவமும் அதிகாரமும் கோரிக்கொண்டே, அரசாங்கம் இழுத்தடித்து வருவதாகவும் அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. எதிர்ப்பதாகவும் கூறிப் பழியை அரசின் மீது போட்டு வருகின்றனர். ஐரோப்பிய நாடுகளுக்கு ‘ரூர்’ போய்விட்டுத் திரும்பியிருக்கும் தமிழ்ச்செல்வனும் இதே கருத்தைத்தான் தெரிவித்திருக்கிறார். புலிகளின் பக்கவாத்தியக்காரர்களான ‘கள்ளவோட்டு’ப் புகழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் புலிகள் சொல்வதையே கிளிப்பிள்ளை போல் ஒப்புவித்து வருகின்றனர். முஸ்லிம் காங்கிரஸ் பல கூறுகளாகப் பிரிவுபட்டாலும் முஸ்லிம் காங்கிரஸே பொதுக்கட்டமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள வேண்டுமென்பது அக் கட்சியின் நிலைப்பாடு. அப்படியில்லாமல் ஏற்படுத்தப்படும் பொதுக் கட்டமைப்பு ‘செத்த வாத்து’க்குச் சமமென்கிறார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர். பிரிந்து நிற்கும் சகல முஸ்லிம் கட்சிகளும் ஒன்றுபட்டுப் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினையும் முஸ்லிம் சமாதான செயலகத்தையும் ஏற்படுத்தினாலும் பொதுக் கட்டமைப்புத் தொடர்பான ஒரு திட்டவட்டமான யோசனையை இதுவரை முன்வைக்கவில்லை. அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் தலைமையிலான ‘நுஆ’ என்றழைக்கப்படும் தேசிய ஐக்கிய முன்னணி, புலிகளோடு இணைந்து அரசு பொதுக் கட்டமைப்பொன்றினை அமைக்க வேண்டிய தேவையில்லையெனத் திட்டவட்டமாகவே கூறிவிட்டது. புலிகளுக்கு அதிக பிரதிநிதித்துவம் வழங்கும் பொதுக் கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு நியாயம் கிடைக்காதென அவர் தெரிவிக்கும் காரணத்தைத் தவறென யாரும் மறுத்துவிட முடியாது. சுமார் இரண்டு மணி நேர அவகாசத்தில் உடைமைகளெல்லாம் பறிக்கப்பட்டு வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட 75 ஆயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் மீளக்குடியேற இதுவரை புலிகள் எவ்வித ஒத்தாசையோ உதவியோ வழங்கவில்லையென அவர் தெரிவிக்கும் குற்றச்சாட்டும் சரியானதே.

வடக்கு, கிழக்கில் கணிசமான அடித்தளத்தையும் யாழ்ப்பாணத்தில் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் கொண்டிருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, பரந்த ஜனநாயகப் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கிய பொதுக் கட்டமைப்பொன்றினை வலியுறுத்துகிறது. கிழக்கில் கால்பதித்து நிற்கும் கருணா அணியும் பிரதிநிதித்துவம் கோருகிறது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மனோ கணேசனின் மேல் மாகாண மக்கள் முன்னணி, ஆகியன தேசியக் கட்சியென்ற வரையறைக்குள் வராத வடக்கு கிழக்குக்கு வெளியே பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கிற பிராந்தியக் கட்சிகளென்றபோதிலும் அரசும் புலிகளும் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகின்றன. இதில் இ.தொ.கா. பெருமளவு அக்கறைகாட்டாவிட்டாலும் மலை யக மக்களின் பிரச்சினைகளிலும் பார்க்க வடக்கு - கிழக்கு விவகாரங்களில் மூக்கை வலிந்து நுழைத்துவரும் மலையக மக்கள் முன்னணி, அரசோடு புலிகள் மட்டுமே பொதுக் கட்டமைப்பில் அங்கம் பெற வேண்டுமென்று கூறு கிறது. பிக்குகள் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவும் தேசப் பற்றுள்ள தேசிய இயக்கமென்ற வெகுஜன அமைப்பும் பொதுக் கட்டமைப்புப் பற்றி மட்டுமல்ல புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை கூட நடத்தக் கூடாதெனக் கூறிவருகின்றன.

‘இந்த நிலையில்தான் “நல்ல காலம் வருகுது, நல்ல காலம் வருகுது’ என்று சொல்லும் கிளி ஜோஸ்யக்காரன் போல சமாதானம் வருகுது, பொதுக்கட்டமைப்பு வருகுது” என்று சொல்லிக்கொண்டு நோர்வேயின் விசேட சமாதானப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு வந்து புலிகளுடனும் அரசுத் தலைவர்களுடனும் மற்றக் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்திவிட்டுத் திரும்பிப் போய்விட்டார். பொதுக் கட்டமைப்புத் தொடர்பான சகல அலுவல்களும் 99 சதவீதம் பூர்த்தியாகிவிட்டனவென்று கூறிக்கொண்டு இலங்கை வந்த எரிக் சொல்ஹெய்ம், திரும்பிப் போவதற்கு முன்னர் பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கு இன்னும் சில வாரங்கள் செல்லுமென்று கூறிவிட்டுச் சென்றுள்ளார். சில வேளைகளில் அந்த மிகுதி ஒரு சதவீதப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இன்னும் சில வாரங்கள் எடுக்குமோ அல்லது வழமை போல் வார்த்தைச் சிலம்பாட்டம் ஆடிவிட்டு சொல்ஹெய்ம் போய்விட்டாரென்பதோ இன்னும் சில வாரங்களில் தெரிந்துவிடும்.

**பொதுக் கட்டமைப்பு, சமாதானத்துக்கான ஏறுபடி என்று சொல்லிக்கொண்டு, காட்டுக்குள் வாழ்ந்துகொண்டிருக்கும் சு.ப. அன்ட் கம்பனியினருக்கு கோட்டும் சூட்டும் அணிவித்து ஐரோப்பிய நாடுகளுக்கு உல்லாசப் பயணத்துக்கு அழைத்துச் சென்றதுதான் மிச்சம். புலிகளுக்கு ‘ரை’ (Tie) கட்டிப் பார்க்க ஐரோப்பிய நாடுகள் ஏன்தான் முனைகின்றனவென்பது அவர்களுக்கே வெளிச்சம்.**

சுனாமியால் பாதிக்கப்பட்ட சுமார் பன்னிரண்டு நாடுகளில் மிக மோசமான அழிவுகளைச் சந்தித்தது இந்தோனேசியா. அதற்கு அடுத்தபடியாக உயிர், உடைமைகளைக் கடல் தாய்க்குக் காவு கொடுத்த நாடு இலங்கை. இலங்கையிலும் வடக்கு, கிழக்குப் பகுதியே கிட்டத்தட்ட அறுபது சதவீதப் பாதிப்புகளைச் சந்தித்த பிரதேசங்களென வர்ணிக்கப்படுகிறது. இந்த வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரை அறுபது சதவீத அழிவுகளைச் சந்தித்த பகுதியெனக் கிழக்கு மாகாணமே வர்ணிக்கப்படுகிறது. இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்டினா ரொக்காவும் கல்முனை, காத்தான்குடி போன்ற பகுதிகளுக்குச் சென்று அழிவுகளைப் பார்வையிட்டுவிட்டு அரசும் புலிகளும் சேர்ந்து பொதுக் கட்டமைப்பொன்றினை நிறுவ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திவிட்டுச் சென்றுவிட்டார்.

எரிக் சொல்ஹெய்மும் கிறிஸ்டினா ரொக்காவும் இலங்கையை விட்டு வெளியேறிய பின்னர், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் புதிய குண்டொன்றினைத் தூக்கிப் போட்டுள்ளார். பொதுக் கட்டமைப்புச் சாத்தியமாகப் போவதில்லையென்று அவர் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். வழமைபோன்று ஜனாதிபதியும் அரசும் இழுத்தடித்ததாலேயே பொதுக் கட்டமைப்புச் சாத்தியமில்லையென்ற வாய்ப்பாட்டைத் தாரக மந்திரம் போல மீண்டும் சொல்லியுள்ளார். இதில் வேடிக்கையென்னவென்றால் புலிகள் தமது யோசனைகளை அரசு ஏற்காதபட்சத்தில் பொதுக் கட்டமைப்புப் பற்றிய பேச்சுக்கே வரமாட்டோமென்று இழுத்தடித்துக்கொண்டே பழியை அரசு மீது போடுவதுதான்.

இது குறித்து இரு வாரங்களுக்கு முன்னரேயே இப் பகுதியில் குறிப்பிட்டிருந்தோம். “புலிகள் பொதுக் கட்டமைப்புப் பற்றிய பேச்சுக்கே வரமாட்டார்கள் அப்படி வந்தாலும் கூட்டைப் பிய்த்துக்கொண்டே ஓடிவிடுவார்களென்று” குறிப்பிட்டிருந்தோம். இந்தப் பழைய போக்கே மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. பொதுக் கட்டமைப்பு, சமாதானத்துக்கான ஏறுபடி என்று சொல்லிக்கொண்டு, காட்டுக்குள் வாழ்ந்துகொண்டிருக்கும் சு.ப. அன்ட் கம்பனியினருக்கு கோட்டும் சூட்டும் அணிவித்து ஐரோப்பிய நாடுகளுக்கு உல்லாசப் பயணத்துக்கு அழைத்துச் சென்றதுதான் மிச்சம். புலிகளுக்கு ‘ரை’(Tie) கட்டிப் பார்க்க ஐரோப்பிய நாடுகள் ஏன்தான் முனைகின்றனவென்பது அவர்களுக்கே வெளிச்சம்.

மேற்கத்திய நாடுகளில் புலிகளுக்கு வரவேற்பும் விருந்துபசாரமும் அளிக்கப்படும்போது இங்கே புலிகளுக்கெதிரானவர்கள் கடத்தப்படுகிறார்கள். சுட்டுத் தள்ளப்படுகிறார்கள். கொழும்பில் வைத்தே பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணம் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார். மிகக் கச்சிதமாகப் புலிகள் இந்தக் கடத்தல் வேலையை முடித்திருக்கிறார்கள். ஆளையும் முடித்திருப்பார்களென்ற பலத்த சந்தேகம் இப்போது பரவலாக நிலவுகிறது. லண்டனில் வாழும் முன்னாள் புளொட் உறுப்பினரான மனோ என்பவரை ஜெயரட்ணத்தோடு தொடர்புகளை ஏற்படுத்தச் செய்து லண்டனுக்கும் கொழும்புக்குமிடையில் காய்களை நகர்த்தி, கச்சிதமாகப் புலிகள் அவரைக் கடத்திச் சென்றுவிட்டனர். புலிகளின் கையாளாகவே இந்த முன்னாள் புளொட் உறுப்பினர் செயற்பட்டிருக்கிறாரென்பது வெள்ளிடைமலை. புலிகளைப் பற்றிப் புலனாய்வு நடத்திய ஓர் அரசாங்க ஊழியரைப் புலிகள் கடத்திச் சென்றமை குறித்து எந்தவொரு மேற்கத்திய நாடாவது கண்டனம் தெரிவிக்குமா? இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணத்தின் மனைவியான சரளா, தனது கணவரைக் கடத்தியவர்கள் புலிகளேயென்று திட்டவட்டமாகத் தெரிவித்திருப்பதோடு, தனது கணவரை உயிருடன் மீட்க உதவுமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கையெடுத்துக் கும்பிட்டிருக்கிறார். பொதுக் கட்டமைப்புக்காக அழுது வடியும் நோர்வேயும் அமெரிக்காவும் ஜெயரட்ணத்தின் விவகாரத்தில் உரத்துக் கண்டனம் தெரிவிக்குமா?

புலிகளைப் பொறுத்தவரை என்றுமே ‘பழைய குருடி கதவைத் திறவடி’ என்ற கதைதான். அவர்களிடமிருந்து பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக ஒன்றும் புதிதாக முளைத்துவிடப் போவதில்லை. ஆக, சு.ப.தலைமையில் புலிகளின் குழு மேற்கத்திய மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்கு ஒரு மாத கால சுற்றுப்பயணம் மேற்கொண்டதால் எவ்விதப் பயனும் ஏற்படப் போவதில்லை. ஏனெனில் புலி இயக்கத்தைப் பொறுத்தவரை அரசியல் வழிகாட்டல் எதுவும் கிடையாது. துப்பாக்கிகள் மட்டுமே அங்கு சர்வ அதிகாரமும் கொண்டவை. பிரபாகரனின் நாவசைந்தால் மட்டுமே புலி இயக்கம் அசையும். சு.ப.தமிழ்ச்செல்வன் அன்ட் கம்பனியினருக்கு வெளிநாடுகளில் குளுகுளு காட்சிகளைக் காண்பிப்பதால் ஒரு மாற்றமும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. பிரபாகரன் என்ற தனிநபருக்கு விசுவாசமாகச் சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டுமென்பதே புலிகள் இயக்கத்தில் சேர்ந்துகொள்ள வரும் எவருக்கும் வைக்கப்படும் முதல் நிபந்தனையாகும். முடிந்தால் பிரபாகரனுக்கு ‘ரை’ கட்டி கோட்டுச் சூட்டுப் போட்டு வெளிநாட்டு குளுகுளுக் காட்சிகளைக் காண்பித்துப் பாருங்கள். ஏதாவது புதிய போக்கு தென்படுகின்றதாவென்று பார்க்கலாம்.

சு.ப. தமிழ்ச்செல்வனையும் அவரது சகபாடிகளையும் வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் இலங்கையின் இறைமைக்கும் மக்களின் ஐக்கியத்துக்கும் குழி பறிக்கவே மேற்கு நாடுகள் முனைகின்றன என்று எழுப்பப்படும் குற்றச்சாட்டில் தவறில்லை. ஏனெனில் வெளிநாடுகளிலுள்ள தமது உறுப்பினர்களுடன் கலந்து பேசி, நிதி வசூலிப்பை அதிகரிக்கவும் அவர்களின் பிரசாரச் செயற்பாடுகளைப் புலம்பெயர்ந்த நாடுகளில் முடுக்கி விடவும் முயற்சியெடுக்கப்படும் என்பது உண்மைதானே. ■

# முஸ்லிம்கள் 3 ஆம் தரப்பா?

அலசுவது

**- மதியூகி -**

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதாக இருந்தாலும், இடைக்கால நிர்வாக சபையாக இருந்தாலும், தற்போது அமைக்கப்படுவதாகச் சொல்லப்படும் பொதுக் கட்டமைப்பாக இருந்தாலும் முஸ்லிம்களை ஓரம் கட்டிவிட முடியாது. தனியே சிங்களத்தரப்பும் - தமிழர் தரப்பும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் வழிவகைகளையிட்டு திட்டமிட்டாலும், இலங்கைத் தீவில் முஸ்லிம்கள் கணிசமான பங்கை வகிக்கும் சமூக அமைப்பினர் என்பதே உண்மையாகும்.

முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் புலிகளுடன் போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டு சமாதானத்துக்கான சமரசப் பேச்சுக்களை புலிகளுடன் வெளிநாடுகளில் நடத்தும் போது முஸ்லிம்களின் பிரதிநிதி ஒருவரும் தனியாக அப் பேச்சுவார்த்தையில் பங்கு கொள்ள வேண்டுமென முஸ்லிம் தரப்புகளிலிருந்து



பேரியல் அஷ்ரப்


கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அதைச் சமாளிப்பதற்காக, அரச தரப்பு பேச்சுவார்த்தைக் குழுவில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களை ஒரு பிரதிநிதியாக நியமித்தார்கள். அதுகூடத் தனித்தரப்பாக இல்லாமல் அரச தரப்பாகத்தான் ஹக்கீம் கலந்து கொண்டார்.

அந்தக் காலப்பகுதியில் முஸ்லிம் தரப்புகளின் பலமான அழுத்தம் ஹக்கீமை நோக்கிப் பாய்ந்தது. இந்தக் கோரிக்கையின் நியாயங்களைப் புலிகளின் கவனத்துக்கு ஹக்கீம் கொண்டு சென்றதன் விளைவாக, புலிகளின் தலைவரும் - ஹக்கீமும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்தனர். அதாவது சமாதானத்துக்கான இறுதித் தீர்வு குறித்த பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித் தரப்பு பங்கு கொள்ளலாம் என்று இந்த ஒப்பந்தமானது கைச்சாத்திடப்பட்ட ஒருசில வாரங்களில் ஐ.தே. முன்னணிக்கும் - புலிகளுக்குமிடையேயான பேச்சுவார்த்தைகள் முறிந்தன.

இதே காலகட்டத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் விளைவாக முஸ்லிம் காங்கிரஸிலிருந்து அதன் ஆரம்பகால உறுப்பினர்கள் பிரிந்து சென்றனர். அந்தச் சந்தர்ப்பத்தை புலிகள் பயன்படுத்தினர்.

அதாவது முஸ்லிம் காங்கிரஸ் உடைந்து விட்டதாகவும் - ஹக்கீம் தனித்து இருப்பதால் அவரை முஸ்லிம்களின் பிரதிநிதியாக தங்களால் கருதமுடியாது என்றும் காரணம் கூறியதோடு, அவருடன் செய்துகொண்ட உடன்படிக்கையும் செல்லுபடியாகாது என்று அறிக்கையையும் புலிகள் வெளியிட்டனர்.

முஸ்லிம்கள் தொடர்பில் புலிகள் ஆரம்பகாலம் தொட்டு கடைப்பிடித்துவரும் நேர்மையற்ற அணுகுமுறைக்கு இதுவும் ஒரு சான்றாக முஸ்லிம்களால் கருதப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து ஒரே இரவோடு முஸ்லிம்களை விரட்டியடித்தமை, கிழக்கு மாகாண எல்லைக் கிராமங்களில் வாழும் முஸ்லிம் மக்களை மிரட்டுவதும், கொலைசெய்வதுமான சம்பவங்கள், இவை எல்லாவற்றிற்கும் மேலாக காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களை வெட்டிக்கொலை செய்தமை போன்ற புலிகளின் நடவடிக்கையானது, சகோதர முஸ்லிம் மக்களை அரவணைத்துப்



ரவூப் ஹக்கீம்

போகும் நிலைப்பாட்டில் புலிகள் இல்லை என்பதையே மீண்டும் மீண்டும் நிருப்பிப்பதாக முஸ்லிம்கள் புலிகள் மீது சந்தேகம் கொள்ளக் காரணமாக அமைந்தது.

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேறி இடம் பெயர்ந்து வாழ்ந்தாலும், தம்மை வடக்கு முஸ்லிம்கள் என்றே அடையாளம் காட்டி வருகின்ற சூழலில் கிழக்கில் தமிழர்கள் முஸ்லிம்கள் சராசரி விகிதாசாரத்தில் வாழ்ந்துகொண்டிருக்கையில், இடைக்கால சபை வரைபிலும், பொதுக்கட்டமைப்பு வரைபிலும், நிறைவேற்று அதிகாரமிக்க பிரதிநிதித்துவத்தை புலிகள் கோரிநிற்பது - எவ்வகையிலும் நியாயமில்லாததாகும். தமிழ் மக்களுக்குள்ளேயே மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் பன்முகத்தன்மையை மதிக்கும் அல்லது ஆயுதத்தால் அடக்கும் புலிகளிடம் சகோதர முஸ்லிம் சமூகம் எவ்வகையான நீதியை, ஜனநாயக செயற்பாட்டை எதிர்பார்க்க முடியும் என்ற கேள்விகள் முஸ்லிம் மக்களிடம் எழாமல் இல்லை. இவற்றுக்குப் பதிலளிக்க முன்வராத புலிகள், முஸ்லிம்களையும் ஒரு தனி சமூக அமைப்பாக ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தைகளில் இணைத்துக் கொள்ள வேண்டும்.


அண்மையில் எரிக்சொல்ஹெய்ம் இலங்கைக்கு வருகை தந்து, முஸ்லிம் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுகின்ற சந்தர்ப்பத்தில் பொதுக்கட்டமைப்பின் இறுதிக்கட்ட வேலைத்திட்டத்தின் போது முஸ்லிம்களை பொருத்தமான இடத்தில் உள்வாங்க அரசும் புலிகளும் இணங்கியிருப்பதாகத் தெரிவித்திருந்தார். இக் கூற்றானது நேர்மையானதில்லை.

சுனாமிப் பேரலையின் தாக்கத்திற்கு கிழக்கிலும், தெற்கிலும் கணிசமான முஸ்லிம்கள் முகம் கொடுத்துள்ளனர். அதிலும், கிழக்கில் பாரிய அழிவுகளுக்கு முகம் கொடுத்துள்ள முஸ்லிம் மக்களின் பிரதிநிதி ஒருவர் வடக்கு - கிழக்கு மீள்கட்டுமாணப் பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்க முடியாதென்றால் - அல்லது முஸ்லிம்கள் எதிர்நோக்கியுள்ள சேத விபரங்கள் குறித்து பொதுக்கட்டமைப்பு வரைபின் ஆரம்பத்திலேயே உள்வாங்கப்படாமல் போனால் இறுதிக்கட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் என்று கூறுவது முஸ்லிம்களை ஏமாற்றும் ஒரு செயலாகவே இருக்கிறது.

அரசும் - புலிகளும் தமது சொந்த நலனில் நின்று பிரச்சினைகளை அனுகுவதில், பிரச்சினைகள் நீள்கின்றதென்றால் எப்படி முஸ்லிம்களின் பிரச்சினைகளை அத்தரப்புகளால் விவாதிக்கமுடியும்? ஆகவே இறுதியில் உள்வாங்கப்படுவீர்கள் என்ற சமாளிப்புகளை முஸ்லிம்கள் நிராகரிக்கவேண்டும். அதே வேளை வட-கிழக்கில் ஏற்படுத்த எத்தனிக்கப்படும் எந்தவொரு தீர்வாக இருந்தாலும், நிர்வாக அலகாக இருந்தாலும் மூன்றாவது சிறுபான்மைச் சமூகமாக முஸ்லிம்களை ஏற்றுக்கொண்டு செயலாற்றுவதே எதிர்காலத்தில் அமைதியைப் பாதுகாக்கப் பெரிதும் உதவும்.

> பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்க முடியாதென்றால் - அல்லது முஸ்லிம்கள் எதிர்நோக்கியுள்ள சேத விபரங்கள் குறித்து பொதுக்கட்டமைப்பு வரைபின் ஆரம்பத்திலேயே உள்வாங்கப்படாமல் போனால் இறுதிக்கட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் என்று கூறுவது முஸ்லிம்களை ஏமாற்றும் ஒரு செயலாகவே இருக்கிறது.

## அதிரடி அய்யாத்துரை



**போர்** நிறுத்தத்தை பொழுது போக்காகக் கண் காணிக்கிறம் எண்டு சொல்லிக் கொண்டு ரெண்டெழுத்தாருக்கும் அதிகாரத் தரப்பாருக்கும் இடையே ஒப்பிஸ் பியோன் வேலை பாக்கிறவை இருக்கினமெல்லோ. அவை ரெண்டெழுத்தார் விமானம் வச்சிருக்கினமா? எண்டதைப் பார்வையிட வேணுமெண்டு அனுமதி கேட்டு இதுவரைக்கும் ஆறு தடவை இரணைமடுவுக்குப் போனவையாம். ஆனால் ஆக்களை என்டர்பண்ண விடாமல் இரணைமடு செக்பொயிண்டிலயே திருப்பி விடுகினமாம். ஆறு தடவை திருப்பிவிட்டும் சூடு சொறணையில்லாமல் திரும்பத் திரும்ப பெமிஸன் கேட்டுக்கொண்டு நிக்கினமாம். இவையென்ன இவையின்ர அப்பன் வந்தாலும் பெடியள் விடாங்கள்.

**உப்பாறு** சம்பவத்திலை ரெண்டெழுத்தார் யுத்த நிறுத்தத்தை மீறியிருக்கினமெண்டு போரைக் கண்காணிச்சவை சொல்லிச்சினம். அது பிழையான தீர்ப்பெண்டும் தங்களுக்கு கடல் வலயத்தை வரையறை செய்து தரவேண்டும் எண்டும் திருவாண மலையில பொலிஸ் பொறுப்பாளரா இருக்கிற எழிலானவர் கேட்டிருக்கிறாராம். படைத்தரப்பிடம் இது பற்றிப் பேசுவதாக அவை இவருக்கு வாக்குறுதி கொடுத்தவையாம். இதுக்கெல்லாம் வாக்குறுதி கொடுக்கிறவை உந்த படுகொலையை நிறுத்தச் சொல்லி ஒரு வார்த்தையைத்தன்னும் உறுதியா சொல்லினமில்லையே.

**புலனாய்வுப்** பிரிவு அதிகாரி ஜெயரட்ணத்தை விருந்துக்கு வாங்கோ எண்டு கூப்பிட்டு மயக்க மருந்தப் போட்டு வன்னிக்கு பெக் பண்ணிப் போட்டினம் எண்டு அவரிண்ட மிஸிஸ் நம்பகரமாக சொல்லுறா. இல்ல, தெரியாமத்தான் கேக்கிறன். வெளிநாட்டில இருந்த வாரவனையும், கொழும்பில அவைக்கு வேண்டியவர்களையும் உப்பிடி கடத்தினமே. அதிகாரத்திலை இருக்கிறவை என்ன வெள்ளி பார்த்துக் கொண்டே இருக்கினம் எண்டு சனம் கேட்குது. இனிமேல் யாராச்சும் தெரிஞ்சவள் வந்தவன் கூப்பிடுறான் எண்டு ஏமாந்து போயிடாதேங்கோ. ஒரே தட்டிலை திண்டவனே உங்களுக்கு ஊசி போடுவான் ஜாக்கிரதை.

**பொதுக் கட்டமைப்புக்கான** ஏற்பாடுகள் தொண்ணூற்றி ஒன்பது வீதம் ஓகேயாயிட்டுது. மிச்சம் ஒரு வீதத்தை அதிகார அம்மணியும் பாமுவின்ர பெடியும் நாட்டில இறங்கின உடன் சரியாயிடும் எண்ட கணக்கா எரிக்கார் பரபரப்புக் காட்டினார். இப்ப என்னடாவெண்டால் கட்டமைப்பு கைச்சாத்தானால் சிவப்புச் சட்டைக்காரர் அதிகாரத்தில இருந்து விலகிவிடுவினம் எண்டினம் எண்டதால தாங்கள் உதில நம்பிக்கை இழந்திட்டம் எண்டு ரெண்டெழுத்தார் புதுக்கதை விடுகினம். ஆடத் தெரியாதவன் மேடை சரியில்லையெண்டு சொன்னமாதிரி - சிவப்புச் சட்டைக்காரர் ஓம் படுறதுகளுக்குத்தான் நாங்கள் ஒப்பமிடுவம் எண்டே இவை சொல்லிச்சினம் என்ன விதப்பட்டும் ஒதுங்கிறது எண்டு அவை உறுதியா நிக்கிணம் எண்டு வாத்தியார் வம்பு பேசுறாங்கோ......

**வெள்ளவத்தையில** பென்சன் எடுத்துப்போட்டு இருக்கிற பிரின்சுப்பல் ஒருவர் சித்திரைக்கு யாழ்ப்பாணத்துக்கு சொந்த ஊருக்குப் போயிருக்கிறார் அவரிண்ட மகனார் கனடாவில வரி கட்டுறவர் எண்ட கதையை சொல்லிக்கொண்டு ரெண்டுபேர் மாஸ்டரை அணுகியிருக்கினம். கதையோட கதையா அந்த பெடியளிட்டை மாஸ்டர் என்ன தம்பி போற போக்கைப் பார்த்தால் போர் வருமோ எண்டதுக்கு - பெடி உஷாராகி சொன்ன பதில் என்னண்டு தெரியுமோ அப்படி சண்டை வந்தால் கொழும்பில இருக்காதேங்கோ. முதலில கொழும்பு தரை மட்டமாகும் எண்டதுக்கான செட்டப் எல்லாம் செய்திச்சினமாம் பாத்தியளோ. பெடியளிண்ட ரெயினிங்கை. எப்படா சண்டை வருமெண்ட எதிர்பார்ப்புத்தான் அவைக்கு. சமாதானத்தைப் பற்றி அவைக்கு எந்த அக்கறையும் இல்லையெண்டு பிரின்சுபல் மகன் வரி கட்டிற தெம்பில கதைக்கொண்டு திரியிறாராம் எல்லாம் வரித் துணிவுதான்.

**மேல்** மாகாணத்தில் முன்னணி நடத்தி கணேசனானவர் மின்னிற நிகழ்ச்சியில கலந்துகொண்டு மலையகத்தில முன்னணி நடத்திறவரிண்ட பொலிரிக்சுகளைப் புட்டுப் புட்டு வச்ச விதம் சூப்பரோ சூப்பராம். அதிலேயும் ரெண்டெழுத்தாரை அடிக்கடி சந்திச்சுத் திரியிறதாலை. அவையை பின்னணியில வச்சுக் கொண்டு பிரச்சினைகளை எதிர் கொள்ளலாமெண்ட நினைப்புலதான் இவர் பொலிரிக்ஸ் செய்யுறார் எண்டு உண்மையை தொப்பெண்டு போட்டு உடைச்ச கணேசனாரிண்ட துணிச்சலை பாராட்டாம இருக்க ஏலாதெண்டு பரம்பரையா தொழில் கட்சி நடத்திற கட்சியின்ர பா.உ. ஒருவர் கொடுப்புக்குள்ள சிரிச்சாராம். உந்தக் குற்றச் சாட்டை ஒரு கற்பனை எண்டு மழுப்பிக் கொண்டு மறுக்க மண்வெட்டித் தலையார் பட்டபாடு நிகழ்ச்சி பாத்தவைக்கு தெரிஞ்சிருக்குமாம். கஷ்டப்பட்டாலும் கௌரவமாக வாழ வேணுமெண்டு நினைக்குற அந்த மக்களிண்ட நிம்மதியிலையும் புலிச்சாயம் பூசிப்பாக்குறாரே எண்டு அவர் கேக்கிறார். கணேசன் துணிச்சலுக்கு ஒரு சபாஷ்.

# புகலிடமும் புதிய நூற்றாண்டும்

28.04.05 திகதி இறந்தார் அமரர் உமாகாந்தன் இறந்து ஏழு மாதங்களின் பின் அவர் 'புகழிடமும் புதிய நூற்றாண்டும்' என்ற நூலுக்கு எழுதிய சில வரிகளை இப்போது தான் வாசிக்கத்தூண்டுகிறது.

தோழர் உமாகாந்தன் இலங்கையில் மனிதன் பத்திரிகைக் குழுவில் தனது சமூகப் பணியை ஆரம்பித்தவர், அவர் கால் நூற்றாண்டு காலத்திற்கு முன்னர் பிரான்ஸின் தலைநகர் பாரிசிற்கு வந்தவர். பிரெஞ்சு மொழியில் நல்ல பரிச்சயமுள்ளவர் தோழர் உமாகாந்தன். 1983 இற்குப் பின்னர் புகலிடம் தேடிச் சென்ற தமிழர்களுக்கு தன்னாலான உதவியைச் செய்தவர்.

தமிழ் முரசு, ஈழமுழக்கம், கண்ணோட்டம் ஆகிய ஈ.பி.ஆர்.எல்.எப் சார் பத்திரிகைகளிலும் தாயகம், உயிர்நிழல் உட்பட தன்னார்வ சஞ்சிகைகளிலும் அவர் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். அவரது விருப்பமான எழுத்து அனேகமாக சர்வதேச விடுதலை இயக்கங்கள் பற்றியனவாக இருந்தன.

புலம் பெயர்ந்த தளத்தில் தனக்கு வழமையான வாழ்க்கையைத் தேடிக் கொண்டவரல்ல உமாகாந்தன். தனது மனசாட்சி அழைத்த பாதையில் துன்பங்களினூடாகப் பயணித்தார்.

யுத்தம் நம்மவரில் பல்லாயிரமானோரை புலம் பெயர வைத்தது. தேசத்துக்குள் மட்டுமல்ல, தேசங்கள் தோறும் சிதறி வாழ வைத்தது. இந்தப் புலம் பெயர்தல், புலம் பெயர்ந்தோருக்கு வாழ்வைத் தந்ததா...? அல்லது வலியைத் தந்ததா என்ற கேள்விக்கான பதில் வாழ்வைத் தந்தது போலத் தோற்றமளித்தாலும் உண்மையிலேயே வலியைத்தான் தந்துகொண்டிருக்கிறது. புலம்பெயர்ந்த வாழ்வு தொடர்பான தமது பார்வைகள், அணுகுமுறைகள் மாறவில்லையென்றால் தொடர்ந்தும் வலியைத்தான் தரப்போகிறது.

ஈழத் தமிழ் மக்களின் புலம்பெயர் வாழ்வின் ஆரம்ப கட்டமல்ல இது. பல நாடுகளில் பல்லாயிரக்கணக்கான எம்மவர்கள் தமது காலடிகளை இறுக்கமாகவே ஊன்றிவிட்ட காலகட்டமிது. "நாட்டுப் பிரச்சினை கெதியிலை முடிஞ்சுவிடும். ஒரு ரெண்டு மூண்டு வருஷத்துக்கு உழைக்கிறதை உழைச்சுக் கொண்டு ஊரிலை போய் ஏதாவது முயற்சியைச் செய்வோம் என்ற நேற்றைய கதைகளை அடிபட்டபோது" நாட்டுப் பிரச்சினை எங்கை முடியப் போகுது. அப்பிடித்தான் முடிஞ்சாலும் எங்கடை பிள்ளையள் இங்கே படிக்கத் தொடங்கின. தொடங்கிவிட்டுதுகள் அதுகளை அங்கை கொண்டு போய் என்ன செய்கிறது? பிள்ளைகள் அங்கே இந்தப்பாஷையிலை படிக்க முடியுமா? அல்லது இங்கை பிறந்து வளர்ந்த இந்தப் பிள்ளைகளுக்கு அங்கத்தைய வெயில்தான் ஒத்துக்கொள்ளுமா? என்ற இன்றைய புதுக்கதை வந்து விட்டது.

நல்லது! அங்குமின்றி, இங்குமின்றி, ஆற்றிலொரு ..........நிலையைவிட ஒரு நிலைக்கு வாழ்க்கையைக் கொண்டு வருவது நல்லதுதான். ஆனால் எதிர்காலம் குறித்து வாழும் புகலிடங்கள் குறித்த தெளிவில்லாத பார்வைதான் இன்று புகலிடத்தில் நம்மவரின் வாழ்க்கையை மேலும் மேலும் பிரச்சினைகளுக்கு உள்ளாக்குகிறது. இன்று புகலிடத்தில் தொடர் சங்கிலியாய் நம்மவரைச் சுற்றிப் பல பிரச்சினைகள். அவற்றில் இன்று முதன்மையானதாக எழுந்து நிற்பது பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் சீர் குலைந்து வரும் குடும்ப உறவுகள் இடைவெளியாகும். இன்று புகலிடத்தில் இருக்கும் பெரும்பாலான எமது பிள்ளைகள் இங்கு பிறந்து வளர்ந்து படித்து வருபவர்கள் அல்லது சிறுவயதிலேயே இங்கு வந்து வளர்ந்து படித்து வருபவர்களாகும். இவர்களில் பெரும்பாலானோருக்கு நமது தேச வாழ்க்கை முறை தெரியாது. இன்னுமொரு குறிப்பிட்ட பங்கினர்க்கு தமிழ்மொழியே சரியாகத் தெரியாது. ஆனால் இவர்கள்தான் நமது எதிர்கால சந்ததி. மண்ணை இழந்து மக்களை இழந்து நிற்கும் எம்மிடம் இன்று இருக்கும் ஒரேயொரு நிலையான சொத்துக்கள். இவர்களைப் புரிந்துகொள்ள முடியாமல் எமது முடிவுகளை இவர்களிடத்தில் திணிப்பதாலோ அல்லது இவர்களோடு முரண்படுவதானாலேயோ அல்லது எல்லாமே முடிந்துவிட்டது எல்லாமே கைமீறிப் போய்விட்டது என்று ஒப்பாரி வைப்பதிலோ அர்த்தமேயில்லை. பிரச்சினைக்கான காரணங்களை ஆராய வேண்டும்.

இந்தப் பிரச்சினைக்கு மாத்திரமல்ல. இன்று புகலிடத்தில் நாம் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளுக்கும் நாமே காரணமாகவுள்ளோம். புகலிடத்தில் நாம் வாழுகின்ற நாடுகளின் மொழிகளோடு பரிச்சயம் ஏற்படுத்திக்கொள்ள முயலாமை, வாழுகின்ற நாடுகளின் மக்களின் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ளவோ அன்றி அவர்களுடன் நட்புறவு கொள்ளவோ முயலாமை. உலகில் நமது மொழி தான் உயர்ந்தது; நமது கலாச்சாரம்தான் சிறந்தது. நாம் தான் திறமையானவர்கள் என மற்றவர்கள் மட்டம் தட்டும் வறட்டு மனப்பான்மை அறிதலில் ஆர்வமற்ற அசமந்தப்போக்கு பொருள்மட்டும் இருந்தால் போதும் எதிர்காலத்தை நாம் எப்படியும் வென்றுவிடலாம் என்ற மூடத்தனமான சிந்தனை, இப்படிக் காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

புகலிட மொழிகளோடு பரிச்சயம் ஏற்படுத்திக் கொள்ளாத தன் காரணமாக புகலிடத்தில் எமக்கு ஏற்படும் இழப்புக்கள் ஏராளம். உன்னதமான வேற்றுமொழி எழுத்துக்கள், நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் கலைவடிவங்கள் நமக்கருகே இருந்தும் அவற்றை இரசிக்கும் வாய்ப்புக்களை இழக்கிறோம். வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில்நுட்பங்களை, நம்மைச் சுற்றி நடைபெறும் அரசியல் மாற்றங்களை அறியும் வாய்ப்புக்களை இழக்கிறோம். மொழியறிவு இல்லாததால் சுரண்டலுக்குப் பலியாகி தொடர்ந்து குறிப்பிட்ட வேலைகளுக்குள்ளேயே உழன்று மனவியல் ரீதியான பாதிப்புக்கு உள்ளாகிறோம். பிள்ளைகள் என்ன படிக்கிறார்கள். அவர்களது எதிர்காலம் எப்படி வடிவமைக்கப்பட்டால் சிறப்பாக இருக்கும் என்பவை குறித்த அறிவிழந்தவர்களாகிறோம். சிறுவகுப்புகளில் படிக்கும் பிள்ளைகளுக்குக்கூட கல்வியில் உதவி செய்ய முடியாத கையாலாகாத நிலை நமக்கு. புகலிட மொழியறிவற்ற பெற்றோரை தமது ஆசிரியர்களுக்கோ நண்பர்களுக்கோ அறிமுகப்படுத்த முடியாத தவிப்பு நிலை பிள்ளைகளுக்கு. இங்குதான் பெற்றோருக்கும், பிள்ளைகளுக்குமிடையிலான இடைவெளி ஆரம்பிக்கிறது. நேற்றைய வாழ்வை ஆயிரக்கணக்கான கிலோமீற்றர்களுக்கு அப்பால் இன்று புகலிடத்தில் நிலைநாட்ட விரும்பும் பெற்றோருக்கும், இன்றைய வாழ்வை மட்டுமே அறிந்து நாளை கனவில் மிதக்கும் அடுத்த சந்ததிக்குமிடையிலான முரண்பாடு வெடிக்கிறது. போர் தம்மை புகலிடத்திற்கு அனுப்பியது. ஆனால் புகலிடத்திலோ புரிந்து கொள்ளாமை ஒரு பெரும் மௌனப்போராக குளிர்யுத்தமாக வெடிக்கிறது.

நாங்கள் அகதிகள். நாங்கள் இங்கு வந்துபட்ட கஷ்டங்கள் தெரியுமா? இந்தக் கஷ்டத்துக்குள்ள பாஷையை எங்க படிக்கிறது? என்று பழங்கதை பேசிக் கொண்டிருப்பதில் பயன் எதுவுமேயில்லை....என்ன இருந்தாலும் எங்கடை மொழியைப் பண்பாட்டை விட்டுவிட முடியுமா? என வீரவசனம் பேசுவதில் அர்த்தம் எதுவுமே இல்லை. இன்னுமொரு மொழியை அறிந்து கொள்வதால் நமது மொழி அழியப் போவதில்லை. இன்னுமொரு பண்பாட்டை, வாழ்வியல் முறையைத் தெரிந்து கொள்வதால் நாம் நமது பண்பாட்டைக் கைவிடப் போவதில்லை. நாம் புதிய நூற்றாண்டுக்குள் நுழையப் போகும் ஒரு உன்னதமான காலகட்டத்தில் இருக்கிறோம். தேடுதலும், அறிதலும், புரிதலும் இல்லையென்றால் விரைந்து ஓடும் இந்தப் புகலிடத்தில் நாம் ஒரு நூற்றாண்டு பின் தள்ளப்பட்டு விடுவோம்.

இன்று எதுவுமே அறிய முடியாதோ பரிச்சயம் செய்து கொள்ள முடியாததோ, அல்லது சாதிக்க முடியாமதோ அல்ல. நாம் வாழும் புகலிடத்தில் அறிதலுக்கும், பரிச்சயம் செய்து கொள்வதற்கும் சாதிப்பதற்குமான சாதனங்கள் நிறைய உள்ளன. இந்த வசதிகள் எதுவுமில்லாமலே இலக்கியம் நேற்றைய தமிழ் அறிஞர்களின் கையில் இருந்து தேடுதல் செய்ய முற்பட்ட சாதாரண தமிழ் இளைஞர்களின் கைகளுக்கு மாற்றப்படவில்லையா? போராட்டம் பல இழப்புகளைத் தந்தாலும் போராட்டத்திலும் மலரும் நினைவுகள் உள்ளன. அற்புதமான போர்க்கால இலக்கியங்கள் படைக்கப்பட்டன. துப்பாக்கி மாத்திரமன்றி பேனாவும் போராட்டத்தில் பாத்திரமேற்றது.

தொடர்ச்சி 8ஆம் பக்கம்



இறப்புக்கு முன்பதாக அவரது பேனை பதிவு செய்த வாசகம் இதுதான்.

***"யுத்தம் யாருடனும் செய்யலாம்***
***புத்தகம் யாரும் வெளியிடலாம்***
***ஆனால் எழுத்து எந்த நேரமும்***
***இறுக்கமாக இதயத்தில் இருக்கும்"***
***எமது தோழர்கள் எமது நண்பர்கள் அப்படித்தான்.***

## எழுத்தாளர்களின் கவனத்திற்கு

**மலையகச் செய்திகள் எமக்கு அரசியல் சாயம் பூசி அனுப்பப்படுவதால் எமது தெரிவுக்குட்படுவதில்லை. எனவே சுதந்திரமாகவும், நியாயமாகவும் எவரையும் நேரடியாகக் குறிப்பிடாமலும் உண்மைச் செய்திகளை எழுதக் கூடியவர்கள் தாராளமாக எமக்கு எழுதலாம். செய்தியாகவோ / கட்டுரையாகவோ உங்கள் மன எண்ணங்களை எம்மோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

1. மலையகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் முறைப்பாடுகளைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஏற்கெனவே கவிதை, சிறுகதை என்பவற்றுடன் முரசின் வளர்ச்சியில் ஒன்றித்திருப்பவர்களுக்கு எமது சிரம் தாழ்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பி.கு.

துணிந்து உண்மைச் செய்திகளை நேர்மையாக எமக்கு எழுதக் கூடிய பிராந்தியச் செய்தியாளர்களின் பங்களிப்பும் வரவேற்கப்படுகிறது. வடக்குக் கிழக்குச் செய்திகளை விடவும், மலையகச் செய்திகள் தொடர்பிலும் முரசு கூடிய கவனம் செலுத்தவுள்ளதால் ஒத்தாசை புரிந்து செயலாற்றத் துடிப்பான எழுத்தாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

**நம்மால் முடிந்த சேவையை நம் சமூகத்திற்குச் செய்வோம். நமக்கு என்ன கிடைத்தது என்பதை விடவும் நாம் என்ன கிடைக்கச் செய்தோம் என்ற கேள்வியை நம்மை நோக்கி நாமே கேட்போம்.**

**நன்றி-**
**ஆ - ர்**

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

*இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:*


| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் **D.D. Enterprises** எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு **16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka** என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றும் வண்ணம் **'Manager Thinamurasu'** என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத் தபாலில் **Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06.** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: **(E-mail):- murasu@sltnet.lk**






**நல்லதே நினைப்போம்! நல்லதே செய்வோம்**
**46 வருடம் நிரூபிக்கும் மலையாள மாந்திரீகம்**


1. எனது 46 வருட அனுபவத்தைக் கொண்டு அனுதினமும் வரும் வாடிக்கையாளர்கள் என்னை நேரில் கலந்து ஆலோசனை பெற இங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
2. வெளிநாட்டவர்களுக்கும் என்னிடம் தொலைபேசியில் கலந்து பேச வாய்ப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அனைத்து தொலைபேசிகளுக்கும் C.L.I. வசதியுள்ளது.
3. ஜாதக, ஜாதகிகள் எதிர்கால வாழ்வு, ஆய்வு கண்ணோட்டம் பற்றி நேரில் வியக்கத்தக்க முறையில் என்னால் அருள் ஞானத்தால் கூறமுடியும். நடந்தது, நடக்கப் போவது, நடக்க இருப்பது, திருமணம் எப்போது எத்தனையாம் திகதி, நினைப்பது எப்போது நடக்கும் என்பதற்கெல்லாம் நேரில் வந்தால் என் அருள் ஞான சித்தத்தால் தெட்டத் தெளிவான பதில் கிடைக்கும்.
4. உங்கள் தேவைகளுக்கு நேரில் மட்டும் எந்த நாட்களும் முன் அறிவித்தல் இன்றி வருகை தரலாம்.
5. ஆணித்தரமாக கைரேகை பார்த்து பலன் தரும் சேவையும் உண்டு

உலக மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர் டாக்டர். தெய்வீக ஞான குரு P.K. சாமி ஐயாவின் பிரதான அனுசரணையுடன ஞாயிறுதோறும் சக்தி தொலைகாட்சியில் இரவு 7.00 மணிக்கு வேலன் தொடரை தொடர்ந்து பாருங்கள்

எனது P.K. Saamy Associate (Pvt) Ltd.
ஒருங்கமைப்புடன் செயல்படும் நிறுவனத்தில் ஒரு அங்கமே எனது மலையான மாந்திரீக உச்சாடன பீட பிரிவு.

பேராசிரியர், டாக்டர். P.K. சாமி (J.D.G.A.N) J.P.

**ஸ்ரீ துர்கா தேவி மாந்திரீக உச்சாடன பீடம்**
**இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.**
தொலைபேசி இலக்கங்கள் :
(CLI) Nos. 2342463, 2342464, 2344832, 4613124, 4613133. Fax : 2344831




# உலகை உலுக்கிய தற்கொலைத் தாக்குதல்கள்

**"தற்கொலைப் பயங்கரவாதம்! ஓர் உலகளாவிய அச்சுறுத்தல்" என்ற தலைப்பில் இலங்கையரான ரோஹன் குணரட்ன என்பவர் எழுதிய இந்த ஆய்வுக் கட்டுரை 'ஜேன்ஸ் டிபன்ஸ் வீக்லி' என்ற சஞ்சிகையில் பிரசுரமாகியிருந்தது. உலகிலேயே மிகக் கூடுதலான தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களைப் புலிகள் இயக்கம்தான் நடத்தியிருக்கிறதென்று அவர் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். புலிகள் இயக்கம் இதுவரை நடத்திய தற்கொலைத் தாக்குதல்களில் பயன்படுத்தப்பட்ட மனிதக் குண்டுதாரிகளில் முப்பது சதவீதமானவர்கள் பெண்களென்றும் அவர் குறிப்பிட்டார் இதுபற்றிய விரிவான அறிக்கை அடுத்தவாரம் வெளிவரும்.**

இஸ்ரேலில் இரண்டாயிரமாம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ஆம் திகதிக்கும் 23ஆம் திகதிக்குமிடையில் தற்கொலைப் பயங்கரவாதத்தை முறியடிப்பது தொடர்பான முதலாவது சர்வதேச மாநாடு நடைபெற்றது. மத்திய கிழக்கிலும் தெற்காசிய நாடுகளிலும் பயங்கரவாதக் குழுக்கள் நடத்திவரும் தற்கொலைத் தாக்குதல்களே இந்த மாநாட்டின் தொனிப் பொருளாக அமைந்திருந்தது. பல்வேறு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொலிஸ், இராணுவம், புலனாய்வுப் பிரிவு, பாதுகாப்புத் தரப்பு ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் எண்பது சிரேஷ்ட அதிகாரிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர். தற்கொலைத் தாக்குதல் என்பது அரசியல் இலக்கினையடைவதற்காக ஓர் இலக்கை அழிக்கும் நோக்கில் அல்லது அதற்கான முயற்சியில் ஒருவர் தனது உயிரைத் தியாகம் செய்வதாகும். உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் பயிற்சியளிக்கப்பட்ட பயங்கரவாதிகளின் நோக்கம், எதிரியின் இலக்கை அழிக்கும் அதே வேளை தனது உயிரை விடுவதுமாகும்.

1980களில் தற்கொலைப் பயங்கரவாதம் இலங்கை, லெபனான், குவைத் ஆகிய நாடுகளில் காணப்பட்டது. 1990களில் அது இந்தியா, இஸ்ரேல், பனாமா, அல்ஜீரியா, பாகிஸ்தான், ஆர்ஜென்டீனா, குரோஷியா, துருக்கி, தன்சானியா, கென்யா ஆகிய நாடுகளுக்கும் பரவியது. வெகுவிரைவில் மேற்கு ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெறக்கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன.

தம்து அரசாங்கத்துக்கோ அல்லது வேறு நாட்டு அரசாங்கங்களுக்கோ எதிராகத் தற்கொலைத் தாக்குதல்களை ஓர் உத்தியாக மேற்கொள்ளக்கூடிய பத்து சமயம் சார்ந்த பயங்கரவாதக் குழுக்களும் மதசார்பற்ற குழுக்களும் உள்ளன. இலங்கையின் புலிகள் இயக்கம் (எல்.ரி.ரி.ஈ.), துருக்கியின் குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி (பி.கே.கே.), ஆப்கானிஸ்தானில் ஒசாமா பின்லேடனின் அமைப்பு (அல்குவைதா) ஆகியவை இவற்றில் அடங்கும். 1980களில் தற்கொலைத் தாக்குதல்களை நடத்திய சிரிய சார்பு மற்றும் லெபனான், சிரிய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நான்கு பயங்கரவாதக் குழுக்களும் உள்ளன. ஆனால் இவை தற்போது செயலிழந்துள்ளன. இக் குழுக்கள் லெபனானில் சுமார் 25 தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. இத் தாக்குதல்கள் சிலவற்றுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்கள் உரிமை கோரியுள்ளன. இக் குழுக்கள் தமக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தலைத் தவிர்ப்பதற்காக ஒன்றுக்கு மேற்பட்டவை உரிமை கோரியிருக்கலாம். இத் தாக்குதல்களுக்குப் பொறுப்பான குழுக்களை இனம் காண்பது கஷ்டமான காரியமாகும். லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்புடன் சிரியாவின் நற்சேர்திற சோஷலிசக் கட்சி, சிரிய தேசியக் கட்சி, லெபனான் கம்யூனிஸ்ட் கட்சி, லெபனான் பாத் கட்சி ஆகியனவும் தற்கொலைத் தாக்குதல்களில் ஈடுபடுகின்றன.

இரு விதமான தற்கொலைத் தாக்குதல்கள் இடம் பெறுகின்றன. யுத்த களத்திலும், யுத்தகளத்துக்கு வெளியேயும் இத்தகைய இருவிதத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. யுத்தகள நடவடிக்கைகளின்போது தற்கொலைக் குண்டுதாரிகள், தாக்குதல் அணிகளோடு சேர்ந்து செயற்படுகின்றனர். யுத்தகள தற்கொலைத் தாக்குதல்களில் பெரும்பாலும் ஒரு குண்டுதாரியே சம்பந்தப்படுகிறார். புலிகள் இயக்கத்தையும் ஹமாஸ் இயக்கத்தையும் பொறுத்தவரை ஓராளுக்கு மேற்பட்ட தற்கொலைக் குண்டுதாரிகள் பயன்படுத்தப்பட்டுள்ளனர். அசையும், அசையாத இலக்குகள், உட்கட்டமைப்புக்கள், மனிதர்களெனப் பல குறிவைக்கப்படுகின்றன. தற்கொலைக் குண்டுதாரிகள் இராணுவ, அரசியல், பொருளாதார, கலாசார இலக்குகளைத் தாக்கியழித்துள்ளனர். பஸ்கள், சன நெருக்கடி மிக்க இடங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. அரசியல் மற்றும் இராணுவ முக்கியஸ்தர்களையும் தற்கொலைக் குண்டுதாரிகள் கொன்றுள்ளனர்.

### முக்கிய குணாம்சங்கள்

பல்வேறு குழுக்கள் மத்தியில் நடத்தப்பட்ட தற்கொலைப் பயங்கரவாதம் பற்றிய ஆய்வு, பயங்கரவாதக் குழுக்கள் பலமாக இருந்தபோதும் பலவீன நிலையிலிருந்தபோதும் தற்கொலைக் குண்டுதாரிகளைப் பயன்படுத்தியிருக்கின்றன என்பதை வெளிப்படுத்தியிருக்கிறது. இராணுவம் மற்றும் அரசியல் இலக்குகளைப் பொறுத்தவரை ஹமாஸ் இயக்கமும் புலிகள் இயக்கமுமே தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களைக் கூடியளவு நடத்தியுள்ள அமைப்புகளென முன்னிலையில் திகழ்கின்றன. மிக அதிகளவு தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியது புலிகள் இயக்கமே. இதற்கு அடுத்தபடியாக ஹிஸ்புல்லா, ஹமாஸ், பி.கே.கே. ஆகிய அமைப்புக்கள் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றன. சில குழுக்கள் மட்டுமே தமது பிரதேசங்களுக்கு அப்பால் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றன.

ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேலில் நடத்த முயன்ற சில தாக்குதல்கள் தோல்வியில் முடிந்தபோதும், ஆர்ஜன்டீனாவில் வெற்றிகரமாக தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியுள்ளது. புலிகள் இயக்கம் ஒரு தற்கொலைக் குண்டுத் தாக்குதலை இந்தியாவில் நடத்தியுள்ளது. இரு உலகத் தலைவர்களைக் கொன்ற ஒரேயொரு இயக்கமும் இதுவாகும். பெண் குண்டுதாரியொருவரையும் ஆண் குண்டுதாரியொருவரையும் பயன்படுத்தி இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியையும், இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவையும் இந்த இயக்கம் கொன்றொழித்தது.

எகிப்தியக் குழுக்கள் குரேஷியாவில் பொலிஸ் நிலையமொன்றின் மீதும், பாகிஸ்தானில் எகிப்தியத் தூதரகத்தின் மீதும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றன. அல்குவைதா 1998ஆம் ஆண்டு கிழக்கு ஆபிரிக்கத் தூதுவராலயக் குண்டுத் தாக்குதலின்போது ஆகக் குறைந்தது ஓர் எகிப்தியத் தற்கொலைக் குண்டுதாரியையாவது பயன்படுத்தியிருக்கிறது. தீவிரமாகச் செயற்படும் ஏனைய அனைத்து இயக்கங்களும் தமது பிரதேசங்களுக்குள்ளேயே தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. பெருந்தொகையான குர்திஷ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் ஜெர்மனியில் பி.கே.கே. என்றழைக்கப்படும் குர்திஷ் தொழிலாளர் கட்சி, தற்கொலைக் குண்டுத்தாக்குதலை நடத்தப் போவதாக மிரட்டியிருந்தது.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தும் சகல பயங்கரவாதக் குழுக்களுக்கும் ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் ஆதரவு வழங்கும் அமைப்புக்கள் இருக்கின்றன. இக் குழுக்களின் தலைவர்களும் அங்கத்தவர்களும் மேற்கு நாடுகளுக்குப் பயணம் செய்கின்றனர். ஐரோப்பாவிலோ அல்லது வட அமெரிக்காவிலோ வாழும் இயக்க முக்கியஸ்தர்கள் பிரசார பிரசுரங்களை விநியோகிக்கின்றனர். நிதி சேகரிக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்து மோதல்கள் இடம்பெறும் பல்வேறு பகுதிகளுக்குக் கப்பல்கள் மூலம் அனுப்பிவைக்கின்றனர்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்துவதற்கு சக்தி பெற்றிருக்கும் குழுக்களைப் பொறுத்தே, அந்த அமைப்பில், அளவில் திசைமார்க்கத்தில், கொண்டுள்ள இலக்கில், கிடைக்கும் ஆதரவு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் வேறுபடுகின்றன. தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தக்கூடிய குழுக்கள் பற்றி நடத்தப்பட்ட ஆய்வொன்று எந்தக் குழுவுமே குண்டு தயாரிக்கும் தொழில் நுட்பத்தைப் பெறவும் தாக்குதல்களை நடத்தவும் தயாராகவுள்ளன என்பதை எடுத்துக் காட்டுகிறது.

அல்-குவைதா, உலகளாவிய ரீதியில் பரந்துள்ள பல்வேறு குழுக்களின் இணைப்பாகும். ஆப்கானிஸ்தானிலிருந்து பின்லேடன் இந்த அமைப்புக்கு முற்றுமுழுதாக வழிநடத்துதலை வழங்குகிறார். அல்-குவைதாவின் முயற்சிகள் யாவும் முக்கியமாக அமெரிக்காவுக்கும் (பெரிய சாத்தான்) இஸ்ரேலுக்கும் (சிறிய சாத்தான்) அவற்றின் சகபாடிகளுக்கும் எதிராகவே மேற்கொள்ளப்படுகின்றன. மிக அண்மையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் பிரச்சினையாகத் திகழும் காஷ்மீர் பிரச்சினையை முன்வைத்து இரு தாக்குதல் முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. அமெரிக்காவில் அல்-குவைதாவின் ஆதரவுச் செயல்பாடுகளைச் சீர்குலைப் பதற்கு அமெரிக்கா தனது வளங்களைத் திருப்பியுள்ளது. 1998 ஆம் ஆண்டு கென்யாவிலும் தன்சானி யாவிலும் அமெரிக்கத் தூதரகங்கள் தாக்கப்பட்ட பின்னர் இது மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

இந்தியாவின் கிளர்ச்சித் தடுப்பு நிபுணரான கே.பி.எஸ்.கில் பஞ்சாபிலுள்ள சீக்கிய தீவிரவாதத்தின் முதுகெலும்பை முறித்துவிட்டார். சீக்கியர்கள் பெருமளவு வாழும் பஞ்சாபில் 'காலிஸ்தான்' என்னும் சுதந்திர இராஜ்யத்தைக் கோரி பி.கே.ஐ. என்ற சீக்கிய அமைப்பு தனிநாடு கோரி போராடி வருகிறது. அந்த அமைப்பு இலக்கு வைத்துப் போராடும் இந்தியாவில் குறைந்தளவு காலிஸ்தான் பிரிவினைவாதிகளே உள்ளனர். ஆனால், பிரிட்டன், கனடா போன்ற நாடுகளில் பெருமளவு சீக்கியப் பிரிவினைவாதிகள் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். 2000ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்த சீக்கிய அமைப்பு தனது இரண்டாவது தற்கொலைக் குண்டுத்தாக்குதலை நடத்தத் திட்டமிட்டுக்கொண்டிருந்தபோது, இந்திய பாதுகாப்புப் படையினர் தற்கொலைக் குண்டுதாரியைக் கைது செய்துவிட்டனர்.

அல்ஜீரியாவில் இஸ்லாமிய ராஜ்யமொன்றினை நிறுவப் போராடி வரும் ஜி.ஐ.ஏ. என்ற அமைப்பு தனது போராட்டத்தின் ஒரு பகுதியாக ஒரேயொரு தற்கொலைக் குண்டுத்தாக்குதலை மட்டுமே நடத்தியுள்ளது.

1983ஆம் ஆண்டு லெபனானிலுள்ள பிரெஞ்சு பராத் துருப்புகளின் தலைமையகத்தின் மீதும், அமெரிக்க கடற்படையினர் மீதும் குண்டுத் தாக்குதல்களை நடத்திய ஹிஸ்புல்லா அமைப்பு, தெற்கு லெபனானிலிருந்து இஸ்ரேலியர்களை விரட்டுவதற்காகப் போராடி வருகிறது. ஹிஸ்புல்லா அமைப்புக்கு ஈரான் ஆதரவு வழங்கி வருகிறது. தற்போது ஹிஸ்புல்லாவுக்கு உறுதியாக ஆதரவு வழங்கிவரும் நாடு ஈரானாகும். ஹிஸ்புல்லா அமைப்பு ஓர் அரசியல் கட்சியாகவும் விளங்குகிறது.

காஸா பள்ளத்தாக்கிலும் மேற்குக் கரையிலும் செயற்பட்டு வரும் ஹமாஸ் இயக்கமும் பி.ஐ.ஜே (பாலஸ்தீன இஸ்லாமிய ஜிகாத்) அமைப்பும் சியோனிஸ இஸ்ரேலிய இராஜ்யத்தை அழித்தொழிக்க உறுதி பூண்டுள்ளன. தற்போது பாலஸ்தீன அதிகாரசபையால் இந்த இயக்கங்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. ஆனால் 'சின்பெற்' என்ற இஸ்ரேலிய இராணுவ அமைப்பும், இஸ்ரேலின் வெளிநாட்டு உளவுப் பிரிவான 'மொசாட்'டும் இந்த இரு இயக்கங்களினதும் முக்கிய உறுப்பினர்களையும் இராணுவத் தலைவர்களையும் அப்புறப்படுத்தியதன் மூலம் அவற்றின் திறன்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளன.

'சின்பெற்' ஏஜண்டுகள் ஆழமாக ஊடுருவி நடத்திய தாக்குதலொன்றில், ஹமாஸ் இயக்கத்தின் தற்கொலைக் குண்டுகளைத் தயாரிப்பவரான யஹியா அய்யாஸ் என்பவரின் கையடக்கத் தொலைபேசிக்குள் நுண்ணிய வெடி கருவியொன்றினைப் பொருத்தி அவரைக் கொன்றுவிட்டனர். இஸ்ரேல் பொலிஸார், இராணுவத்தினர், புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் மேற்கொண்ட திறமையான எதிர்ப்பு நடவடிக்கைகளால் ஹமாஸ், பி.ஐ.ஜே. மற்றும் ஹிஸ்புல்லா இயக்கங்களால் நடத்தப்பட்ட தாக்குதல்களின் விளைவாகக் கொல்லப்படுபவர்கள், காயமடைபவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து விட்டது. கடந்த சில குண்டுத் தாக்குதல்களின்போது குண்டுதாரி மட்டுமே கொல்லப்பட்டிருக்கிறார். ஹமாஸ் இயக்கம் தனது இராணுவத் திறமையினைத் தொடர்ந்தும் பேணுகின்ற அதேவேளை, விரைவில் அரசியல் நீரோட்டத்துக்குள் இணைந்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. பி.ஐ.ஜே. இயக்கத்தின் இராணுவ மற்றும் அரசியல் தளபதியான ஷிக்காய் என்பவரை மால்டாவில் வைத்து 'மொசாட்' கொலைசெய்த பின்னர் அந்த இயக்கம் பலவீனப்பட்டுவிட்டது.

இரு எகிப்தியக் குழுக்களான ஐ.ஜி. என்ற இயக்கமும் இஸ்லாமிய ஜிஹாத் (ஈ.யு.) என்ற இயக்கமும் எகிப்திய இஸ்லாமிய ராஜ்யமொன்றினை நிறுவுவதற்காகப் போராடி வருகின்றன. ஈ.யு. என்ற இயக்கத்தின் தலைவரான டாக்டர் அய்மன் அல் தவகேரி ஆப்கானிஸ்தானில் வாழ்ந்து வருகிறார். இவருக்கு அல்-குவைதா அமைப்பின் தலைவர் பின் லேடனுடன் நெருங்கிய தொடர்புகள் உண்டு.

குர்திஷ் தொழில் கட்சி (பி.கே.கே.) யின் தலைவரான அப்துல்லா ஏகாலன் கைது செய்யப்படும்வரை மேற்படி இயக்கம் துருக்கியின் தென்பகுதியில் சுதந்திர குர்திஷ் அரசொன்றை நிறுவுவதற்காகப் போராடி வந்துள்ளது. தற்போது இந்த அமைப்பு சுயாட்சியையும் சமத்துவமான கலாசார உரிமைகளையும் கோரி வருகிறது.

*(தொடரும்)*

***(அடுத்த வாரம் புலிகள் இயக்கத்தின் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் பற்றிய விரிவான அறிக்கை வெளிவரும்)***

### 1980 - 2000 ஆண்டுவரை நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்கள்

| இயக்கம் | தாக்குதல்களின் எண்ணிக்கைகள் |
|---|---|
| புலிகள் இயக்கம் | 168 |
| ஹிஸ்புல்லாவும் சிரிய சார்புக் குழுக்களும் | 52 |
| இஸ்ரேலில் ஹமாஸ் இயக்கம் | 22 |
| துருக்கி தொழிலாளர் கட்சி | 15 |
| இஸ்ரேலில் பாலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் (பி.ஐ.ஜே.) | 08 |
| கிழக்கு ஆபிரிக்காவில் அல்-குவைதா | 02 |
| குரேஷியாவில் எகிப்திய இஸ்லாமிய ஜிஹாத் (ஈ.யு.) | 01 |
| பாகிஸ்தானில் இஸ்லாமியக் குழு (ஐ.ஜி.) | 01 |
| இந்தியாவில் பார்பார் கல்சா சர்வதேச அமைப்பு | 01 |
| அல்ஜீரியாவில் ஆயுத இஸ்லாமியக் குழு (ஜி.ஐ.ஏ.) | 01 |


# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

"காக்கைக் - கூட்டுக்குள் குயிலாகக் கூவித் திரியாமல், காலங் கழித்தவனேன்னு சொல்லியிருக்கீங்களே.. அது, என்ன அர்த்தத்திலே?"

கண்ணதாசன் இப்படிக் கேட்டதும் நான் விளக்கினேன்:

"அண்ணே! நீங்க குயில் முட்டை மாதிரி... குயில் முட்டையைக் காக்கைதான் அடைகாக்கும்கிறது



உங்களுக்குத் தெரியும்... ரெக்கை முளைச்சு குயில் குஞ்சு கூவிப் பறக்கிறபோதும்தான் - அது தன் குஞ்சல்லங்கிறது காக்கைக்குத் தெரியும்...! அமாதிரி, நீங்கள் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவங்க, சைவத்தையும் தெய்வத்தையும் ரெண்டு கண்களோ எண்ணுற சமூகம், உங்க சமூகம். இயல்பாக உங்களுக்குள்ளே இருக்கிற இறைப்பற்று வெளிப்படுற நேரம் வந்தவுடனே, நீங்களும் கழத்தை விட்டு வெளியே வந்துட்டீங்க... அதனாலதான், உங்களைக் குயில் குஞ்சுக்கு உவமையாச் சொன்னேன்....!"

கண்ணதாசன் ஒருவினாடி சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு நிதானமாகச் சொன்னார்:

"கடவுளை உணர்வதிலிருந்துதான், உண்மையான பகுத்தறிவே தொடங்குகிறது" என்றார்.

இதே கருத்தை ஒரு ஆங்கிலக் கவிஞன் பாடியிருப்பதையும் அவருக்கு நான் எடுத்துச் சொன்னேன்.

"நாம அடிக்கடி சந்திக்கலாம்....." என்று கவிஞர் சொன்னார்.

ஆனால் காலம் எங்கள் இருவரையும் எதிரெதிர் அணியில் நிறுத்தித் தொழில் புரிய வைத்தது. அதன் காரணமாக எங்களுக்கிடையே உள்ள இடைவெளியும் நீண்டு கொண்டே வந்தது.

எம்.ஜி.ஆர். ரசிகர் மன்ற மேடைகளில் நான் அவரது பாட்டுகளை விமர்சிப்பதும், காங்கிரஸ் மேடைகளில் அவர் என் பாட்டுகளை விமர்சிப்பது தவிர்க்க முடியாத விஷயங்களாகி விட்டன.

ஒரு முறை கண்ணதாசன், மெல்லிசை மன்னர் திரு.விஸ்வநாதனிடம், "விசு! நீ எவனெவேணும்னாலும் என்கரேஜ் பண்ணு. இந்த வாலியை மட்டும் என்கரேஜ் பண்ணாதே" என்று சொல்ல, அதற்கு அண்ணன் விசுவநாதன், ஏன்? அவன் பாப்பான்கறதுனாலயா?" என்று கேட்டிருக்கிறார்.

"சேச்சே! அந்த Feelings எல்லாம் எனக்குக் கிடையாது. மத்தவங்களே நீ என்கரேஜ் பண்ணா? எவனும் எனக்குப் போட்டியா வரமாட்டான்? இந்தப்பய அப்படியில்லே, விஷயம் உள்ளவன்..." என்று கவிஞர் சொல்லிவிட்டுக் குழந்தையைப்போல் வெகுளித்தனமாகச் சிரித்திருக்கிறார்.

இதைக் கேள்விப்பட்ட நான் விஸ்வனாத அண்ணனிடம் சொன்னேன்:

"அண்ணே! சினிமாவ்ல பாட்டு எழுதறதுங்கிறது வருமானம் சம்பந்தப்பட்ட விஷயம். என்னுடைய வளர்ச்சி, அவருடைய வருமானத்தைப் பாதிக்கலாம். அதான் அப்படி சொல்லியிருக்கிறாரு. அது நியாயம்கூட. ஏன்னா, எனக்கு ஒரே குழந்தை... அவருக்குப் பத்துப் பன்னிரண்டு குழந்தைங்க பொருளாதார ரீதியா, அவருடைய வருமானம், இன்னொருத்தர் வரவாலே பாதிக்கப்படுறதை அவர் கவனிக்காம இருக்க முடியமா? என்று நான் கவிஞரின் எண்ணத்தை நியாயப்படுத்திப் பேசினேன்.

ஆனால், 'மயக்கமா' கலக்கமா?' என்னும் அவரது பாடல்தான், என்னை சென்னையிலேயே தங்க வைத்தது என்பது அப்போத அவருக்குத் தெரியாது.

(தொடரும்.......)




---

# புகலிடமும் புதிய நூற்றாண்டும்

(6ஆம் பக்கத் தொடர்ச்சி......)

இறுக்கமான இராணுவக் காலடிகளின் கீழும் கூட இளைஞர்கள் கூட்டம் இரகசிய இடங்களில் சர்வதேச விடயங்களைத் தேடியது. அறிந்தது. விவாதித்தது. இதில் அரசியல் இருந்தது. இலக்கியம் இருந்தது. புரட்சி இருந்தது. யாழ்ப்பாணத்தின் வழமையான கல்வி எல்லைகளைக் கடந்து தேடுதல் விஸ்தீரணப்படுத்தப் பட்டது. தெரியாத தேசங்களும், தெரிந்திராத பிரச்சினைகளும் தேடல் புலன்களுக்குள் அகப்பட்டன. நமக்கும் இதற்கும் சம்பந்தமில்லையென்ற எண்ணப்பாடு தொலைந்து உலகம் முழுவதற்கும் எங்களுக்கும் சம்பந்தமிருக்கிறது என்ற உலக நேயம் வளர்ந்தது. பாலஸ்தீனத்தையும் தென்னாபிரிக்காவையும் நிக்ரகுவாவையும் புரிந்து கொண்டதால் அவர்களின் துயரங்களில் நாம் கலந்து கொண்டோம். அவர்களுடன் கையிணைத்தோம்.

ஆனால் இன்று புகலிடத்தில் என்ன நடக்கிறது? எத்தனை பேர் தேடுகின்றனர்? எத்தனை பேருக்கு அறிதலில் ஆர்வம்? நாம் வாழும் இந்த நூற்றாண்டு பல அதிசயங்களைப் பிரசவித்தது. எமக்கு முன்னைய தலைமுறையில் பேர்லின் சுவர் உடையும் என்று சொல்லியிருந்தால்....ஜேர்மனி ஒன்றாகும் என்று சொல்லியிருந்தால்.....பைத்தியம் எனப் பட்டம் சூட்டியிருப்பார்கள். கல்விக் கூடங்களிலோ கடற்கரைகளிலோ நகரங்களிலோ கறுப்பு இனத்தவரின் காலடி படக் கூடாது என நிறவாதம் ஆட்சி செய்த தென்னாபிரிக்காவில் ஒரு கறுப்பு மனிதன் நெல்சன் மண்டலா ஆட்சித் தலைவர் ஆவார் என்று நேற்று நாம் சொல்லியிருந்தால் நாம் பரிகசிக்கப்பட்டிருப்போம். ஹொங்ஹொங் கையளிப்பு, செவ்வாய்க் கிரகத்தில் சாதனை படைப்பு இவையும் இந்த நூற்றாண்டின் அதிசயங்கள் தானே. இவை மட்டுமல்ல, பொஸ்னியாவின் இனச் சுத்திகரிப்பு புறுண்டி, ருவாண்டா, ஸெயிர் போன்ற நாடுகளில் நடந்த இரத்தத்தை உறைய வைக்கும் இனப்படுகொலை போன்றவையும் இந்த நூற்றாண்டில் தானே நடந்தவை; ஆனால் அதிசயங்களாக இல்லை அவலங்களாக இத்தனை அரசியல் மாற்றங்களும், அதிசயங்களும், அவலங்களும் இந்த நூற்றாண்டில் நம்மைச் சுற்றி நடந்துள்ளன. அதுவும் இவை அனைத்துமே நமது அறிவுப் புலன்களுக்குச் சர்வதேச செய்தித் தொடர்புச் சாதனங்களால் எடுத்துத் தரப்பட்டுள்ளன. ஆனால் புகலிடத்தில் இவற்றில் ஆர்வம் கொண்டோர் எத்தனை பேர். இந்த வரலாற்றுச் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டுவிட்டு புகலிடத்தில் தொடர்ந்தும் தென்னிந்திய பொழுதுபோக்குச் சாதனங்களிலேயே மயங்கிக் கிடப்பது எமது எதிர்காலத்தை இருட்டாக்கிவிடும். அடுத்த நூற்றாண்டினுள் நாம் நுழைவது என்பது அர்த்தமற்ற பொழுதுபோக்குகளுடன் அல்ல.

நாம் இறுகப்பூட்டி வைத்திருக்கும் கதவுகள் யன்னல்களைத் திறந்து வைத்து புதியகாற்றை வீட்டுக்குள் பரவ விட வேண்டும். கண்களைத் திறந்து கைகளை விரித்து உவகை அன்புடன் வரவேற்க வேண்டும். நம்மைச் சுற்றி புகலிடத்தில் என்ன நடக்கிறது என்பதை அறிய முயலவேண்டும். அறிந்தவற்றை குடும்பத்தினருடன், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும். உலகில் ஏற்பட்டுவரும் புதிய அரசியல் மாற்றங்கள், மாறிவரும் பொருளாதாரச் சூழ்நிலைகள் வளர்ந்துவரும் கணனியின் தொழில்நுட்பம், உலகத்தை ஒரு குடைக்குக்கீழ் கொண்டு வந்துவிட்ட இன்டர்நெட் எனப்படும் சர்வதேச தகவல் வலைப்பின்னல், சோவியத்யூனியனின் உடைவுக்குப் பின்னர் உலக அரங்கில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்கள், போர்மீதும் வன்முறைக் கலாசாரத்தின் மீதும் வெறுப்படையும் உலக மக்கள், சுற்றுப்புறச் சூழலைப் பேணுதல். நல்ல நாவல்கள், நல்ல திரைப்படங்கள், நல்ல இசை இப்படி அறிய விவாதிக்க ஏராளமான விஷயங்கள் உள்ளன. காலத்தின் கட்டாயம் இன்று கட்டுப்பெட்டிகளாயிருந்த தென்னிந்திய சஞ்சிகைகளைக்கூட இன்டர்நெட் எனப்படும். சர்வதேச தொடர்வலைக்குள் கொண்டு வந்துவிட்டன. ஆனால் புகலிடத்தில் இன்டர்நெட் உம் கணனியும் எத்தனை பேருக்குப் பரிச்சயம்.

இவை நேற்றைய அதிசயங்களாக இருந்திருக்கலாம். ஆனால் இன்றைய அன்றாட வாழ்க்கையின் அவசியங்கள். இவற்றை அறிதலின் மூலம் எமது அறிதலின் எல்லைகளை அதிகரிக்கலாம். தடுமாறும் பிள்ளைகளின் கவனங்களை நேர்செய்யலாம்.

அடுத்த நூற்றாண்டுக்குப் போகும்போது அடுத்த தலைமுறையையும் நாம் அணைத்துச் செல்ல வேண்டும். இல்லையேல் அடுத்த தலைமுறை நம்மை இழுத்துச் செல்லும் நிலைதான் ஏற்படும். வெறுமனே குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டுவதிலும் பழங்கதை பேசிக்கொண்டிருப்பதிலும் பயன் எதுவுமேயில்லை. உலகம் குறித்த - எதிர்காலம் குறித்த விழிப்புணர்வு புகலிடத்தில் நம்மவரிடையே ஏற்படவேண்டும் என்பதில் புகலிடத்து சங்கங்களோ சஞ்சிகைகளோ ஆர்வம் காட்டவில்லை. புகலிடத்து இலக்கியமும் கூட பெரும்பாலும் விரக்தியையும், சோகத்தையும் தான் சுமந்து வருகிறது. எதிர்காலம் குறித்த நம்பிக்கையை ஊட்ட, அடுத்த தலைமுறையை கைகோர்த்து அழைத்துச் செல்ல இங்கு யாருமே தயாராக இல்லை. புகலிடத்தில் எமது மக்கள் நேற்றைய வரட்டுத்தனம் நிறைந்த வாழ்வு நிலையில் இருந்தால்தாள் இன்றைய எமது இருப்புக் காப்பாற்றப்படும் என்பதுதான் பல தரப்பினரது அபிலாசையாக இருக்கிறது.

விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி, கணனியியல்துறையின் விஸ்தரிப்பு, சர்வதேச கலை இலக்கியப் படைப்புக்கள் இவையெவையுமே வருத்தத்துக்குரியவகையில் புகலிடத்தில் நம்மில் பெரும்பாலானோரை அண்மிக்கவில்லை அல்லது நம்மவரின் பெரும்பாலானோரை அண்மிக்கவில்லை அல்லது நம்மவரின் பெரும்பாலானோர் இவற்றுடன் பரிச்சயம் செய்து கொள்ள விரும்பவில்லை. அற்புதமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தென்னிந்திய வீடியோக்கள் மூடிமறைத்து விடுகின்றன. உயர்ந்த வெளிநாட்டு இலக்கியங்கள் புகலிடத்தில் மலிந்து தென்னிந்திய இலக்கியங்களால் மறக்கடிக்கப்படுகின்றன. இங்கு கிரைண்டர்கள் மூலைக்குப் போய் அம்மிகள் தான் அரசோச்சுகின்றன. புகலிடத்தில் நம்மைச் சுற்றி நடக்கும் ஊர்வலங்கள், போராட்டங்கள், வேலைநிறுத்தங்கள், வேண்டுகோள்கள், அரசியல் மாற்றங்கள் அனைத்து குறித்தும் நாம் சம்பந்தமற்றவர்களாய், விழி, செவிப்புலன்கள் இல்லாதோராய்த்தான் நடந்து கொள்கிறோம். ஆனால் புகலிடத்தில் நாம் இப்படியே நெடுங்காலம் இருந்து விடமுடியாது.

நேற்று இப்படி இருந்ததால்தான் இன்று பிரச்சினைகள் வீட்டுக்கு வீடு வெவ்வேறு வடிவங்களில் விசுவரூபம் எடுத்திருக்கின்றது என்பதை மறந்துவிடக் கூடாது.

புகலிடத்தில் பிறந்தோ அல்லது வளர்ந்தோ படித்துவரும் எமது எதிர்கால சந்ததியின் திறமைகள் தட்டிக் கொடுக்கப்பட வேண்டும். அவர்களது ஆர்வங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அந்த திசையில் அவர்கள் முன்னேற வழிவகுக்கப்படவேண்டும். அவர்கள் தமது திறமைகளை வெளிக்கொணர அரங்கங்களை அமைத்துக்கொடுக்க வேண்டும். நமது இலக்கியத்தில் வெளிநாட்டு இலக்கியங்கள் நிறைய மொழிபெயர்க்கப்பட வேண்டும். அதுபோல நமது இலக்கியமும் புகலிடமொழிகளில் கொண்டு வரப்படவேண்டும். சோகமும், விரக்தியும் புரிந்துணர்வில்லாமையும், நட்பின்மையும், அடுத்த சந்ததியின் வாழ்வுப் பாதையை எப்போதுமே தடுமாற வைக்கும். நாளை குறித்த நம்பிக்கையை நாமும், தமது இலக்கியமும், கலைவடிவங்களும் அவர்களது மனங்களிலே இறுக்கமாகப் பதிக்க வேண்டும். உலக அரசியல், சர்வதேச இலக்கியங்கள், விளையாட்டுலகம், சுற்றுப்புறச் சூழல் பேணுகை, மனிதநேயம், எதிர்காலம் குறித்த நம்பிக்கை போன்றவற்றை அவர்கள் பெறச் செய்யவேண்டும்.

இவை எல்லாவற்றிற்கும் முன்னோடியாக நாம் எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். தேடுதலையும், அறிதலையும், புரிதலையும், நேசித்தலையும் நாம் மறுப்பின், கால ஓட்டத்தின் கடுமையான தண்டனையிலிருந்து நாம் தப்பமுடியாது. அடுத்த நூற்றாண்டு என்பது நமக்குச் சோதனை அல்ல, நாம் சாதிக்கவே என்ற நம்பிக்கையுடன் முன்செல்வோம்.

(முற்றும்)

---

இறப்புக்கு முன்பதாக அவரது பேனை பதிவு செய்த வாசகம் இதுதான்.

***"யுத்தம் யாருடனும் செய்யலாம்***
***புத்தகம் யாரும் வெளியிடலாம்***
***ஆனால் எழுத்து எந்த நேரமும்***
***இறுக்கமாக இதயத்தில் இருக்கும்"***
***எமது தோழர்கள் எமது நண்பர்கள் அப்படித்தான்.***

---

## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....




இந்த அமைப்பின் முக்கிய வேலைகளில் ஒன்று சோவியத் யூனியனுக்குப் பாதகமான செய்திகளை இருட்டடிப்புச் செய்வதாகும். 1984இல் மேஜர் கொலாலபோ என்ற ரஷ்ய தூதரக அதிகாரி நம்முடைய வெளியுறவு அமைச்சக அதிகாரிகளிடமிருந்து செய்திகளைச் சேகரிக்கும்போது கையுங்களவுமாகப் பிடிபட்டார். இந்தத் தகவலை பி.டி.ஐ., யூ.என்.ஐ. ஆகிய நமது செய்தி நிறுவனங்கள் வெளியிட்டும், டெல்லியில் இருந்து வெளியாகும் எந்தப் பத்திரிகையிலும் இந்தச் செய்தி இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

பி.என்.லேக்கியின் வாசகங்கள் நிஜ தகவல்களின் அடிப்படையில் அமைந்துள்ளவை என்பதை மறுக்க முடியாது.

சோவியத் நட்புறவுக் கழகங்கள், கலாசார அமைப்புகள், கலைப்பரிவர்த்தனைக் கழகங்கள் ஆகியவற்றின் மூலமாக கே.ஜி.பி. செயல்படுவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. சோவியத் யூனியனுக்கு ஆதரவான அபிப்பிராயத்தை உருவாக்குவதற்காக பல்வேறு அமைப்புகள் செயல்படுகின்றன. ரஷ்யாவுக்கெதிரான எந்தத் தகவல்கள் வெளியானாலும் அதை எதிர்த்து அபிப்பிராயத்தை உருவாக்க உள்ளூர் பத்திரிகைகள் கே.ஜி.பி.யால் தூண்டப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

### கே.ஜி.பி. (KGB) உருவான கதை :

சோவியத் யூனியனிலுள்ள இரகசிய பொலிஸ் இலாகாவின் தலைவராக பெரியா விளங்கினார். ஸ்டாலின் ஆட்சிக் காலத்தில் சர்வ சக்தி வாய்ந்த மனிதராகவும் ஸ்டாலினின் வலது கரம் போலவும் விளங்கியவர் பெரியா. ஸ்டாலின் மரணமடைந்த பிறகு சிறிதுகாலம் வரை மலங்கோவ், மல்ட்டோவ், பெரியா ஆகிய மும்மூர்த்திகளும் சக்திவாய்ந்த மனிதர்களாக ரஷ்யாவில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டு இருந்தார்கள்.

ஆனால், இவர்கள் மூவராலும் தலைமைப் பொறுப்பில் நிலைக்க முடியாமல் போயிற்று. இவர்கள் மூவரையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு குருஷ்சாவ் தலைமைப் பொறுப்பிற்கு வந்தார். அவருடைய காலத்தில்தான் கே.ஜி.பி.திட்டவட்டமான அமைப்பாக உருவாயிற்று.

கே.ஜி.பி.யில் பல பிரிவுகள் வேலை செய்கின்றன. தங்களுடைய உளவாளிகளைத் திருட்டுத்தனமாக வெளிநாட்டுப் பிரஜைகளாக ஆக்குவது ஒரு பிரிவினரின் வேலை. எந்த நாட்டில் சோவியத் உளவாளிகள் செயல்படவேண்டுமோ அந்த நாட்டுக்குள் நுழைந்து அங்குள்ள பிரஜை போலவே ஆகி, அதை நிரூபிக்கும் பொய்யான தஸ்தாவேஜுகளையும் தயார்செய்து வீடுவார்கள். அதற்காக கே.ஜி.பி. எடுத்துக்கொள்கின்ற முயற்சிகள் பிரமிக்கத் தக்கவை.

கனடாவிலுள்ள வேங்குவார் நகர அஞ்சலகத்தில் வீக்டர் ஸ்பென்சர் என்றொருவர் வேலை பார்த்து வந்தார். கே.ஜி.பி.யின் நிலையத் தலைவர் வீனோ பெர்டிகோ அவரைச் சரிப்படுத்தி கே.ஜி.பிக்கு வேவுகாரராக மாற்றினார். அவருக்கு கொடுக்கப்பட்ட வேலை எளிமையானது. வேங்குவாரைச் சுற்றியுள்ள கல்லறைகளுக்கு அவர் செல்லவேண்டும்.

(தொடரும்.......)

(நன்றி : நிர்மதா)

# சங்கர மடத்துக் கிங்கரர்கள்

16

**காஞ்சிபுரத்திலிருந்து**
**அருண் கண்ணன்**

கூலிப்படையினரின் வாள்வெட்டுக்கு கூலிக்கும்பலைச் சேர்ந்த ஆனந்தகுமார் இலக்கானான் என்பதே அத் திடுக்கிடும் தகவலாம்.

இராதாகிருஷ்ணன் வீட்டுக்குச் சென்ற கும்பல், அவரின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டுத் தாக்கிய விபரத்தையும், தவறுதலாகத் தான் வாள்வெட்டுக்கு இலக்கானமை குறித்தும் உடனடியாகவே சம்பவ இடத்தைவிட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டமை பற்றியும் ஆனந்தகுமார் விளக்கினான்.

கூலிப்படையில் சென்ற லக்ஷ்மணன் என்பவனே முதலில் வாளை வீசியதாகவும், அதனை வலது கையால் இராதாகிருஷ்ணன் தடுக்க முற்பட்டபோது அவருக்குக் காயம் ஏற்பட்டதாகவும், சத்தம் கேட்டு ஓடிவந்த இராதாகிருஷ்ணனின் மனைவிக்கு இடது கையில் வாள் வெட்டுக் காயம் ஏற்பட்டதாகவும், இராதாகிருஷ்ணனின் உதவியாளரான 'பாம்பே' கிருஷ்ணன் என்பவருக்கும் வாள் வெட்டு வீழ்ந்ததாகவும் கதிரவன் கூறினான்.

இதனையடுத்து ஆனந்தகுமாருக்குச் சிகிச்சையளித்த டாக்டரும் பொலிசாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். தாதா அப்பு கேட்டுக்கொண்டதன் பேரிலேயே தான் சிகிச்சையளித்ததாக அந்த டாக்டர் தெரிவித்தார். அப்புவைத் தனக்கு ஏற்கனவே தெரியுமெனவும் டாக்டர் கூறினார். இராதாகிருஷ்ணன் தாக்கப்படுவதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் இது சம்பந்தமான கூட்டம் சங்கரமடத்தில் ஜெயேந்திரர் முன்னிலையில் நடைபெற்றதாகக் கதிரவன் தெரிவித்தான். அதில் தன்னோடு இளைய மடாதிபதி விஜயேந்திரரின் தம்பி ரகுவும் கலந்து கொண்டதாகவும் அவன் தெரிவித்தான். இந்தக் கூட்டத்தில் இராதாகிருஷ்ணனின் புகைப்படத்தைக் கதிரவனுக்கு அடையாளம் காட்டியதே ரகுதானாம். தாக்குதல் சம்பவம் நடைபெற்று ஏழு மாதங்களின் பின்னர் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி இராதாகிருஷ்ணன், பொலிஸாருக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பியிருந்தார்.

இக் கடிதத்தின் பிரதியொன்றினை சங்கரமடத்தின் முக்கிய நிர்வாகியான 'ஸ்ரீகாரியம்' என்றழைக்கப்படும் திருநீலகண்டருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இராதாகிருஷ்ணன் தாக்கப்பட்டமைக்கு தொழில் ரீதியாக அவருக்குள்ள எதிரிகளே காரணமென்கின்றனர் சங்கரமடத்து விசுவாசிகள்.

இது ஒருபுறமிருக்க, சொர்ணமால்யாவுக்கு மிக நெருக்கமானவரென வர்ணிக்கப்பட்ட ரவி சுப்பிரமணியம் அரசு தரப்புச் சாட்சியாக மாறிவிட்ட பின்னர், ஜெயேந்திரர் தரப்பிலிருந்து தனக்கு மிரட்டல்களும் அழுத்தங்களும் மேற்கொள்ளப்பட்டதாக நீதிபதியிடமே அவர் புகார் தெரிவித்திருக்கிறார். அப்ரூவரான பிறகு ரவி சுப்பிரமணியத்தின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாமென்ற காரணத்துக்காகப் பாதுகாப்புக் கருதி அவர் காஞ்சிபுரம் கிளைச் சிறைக்கு மாற்றப்பட்டிருந்தார். அங்கு ஜெயிலர் சேகரன் என்பவர் ஜெயேந்திரருக்குச் சார்பாக நடந்துகொள்ளும்படி வற்புறுத்தியதாகவும் டி.எஸ்.பி. ராஜ்குமார் என்பவர் கிளைச் சிறைக்கே வந்து சங்கராமன் கொலைத் தொடர்பாகக் கொடுத்த வாக்குமூலத்தை வாபஸ் பெறும்படி வற்புறுத்தினாரென்றும் ரவி சுப்பிரமணியம் தனது புகாரில் தெரிவித்திருக்கிறார். இதன் உச்சக் கட்டமாக ஜெயேந்திரர் தரப்புப் பெண் வக்கீல்கள் இருவர், காஞ்சிபுரம் கிளைச் சிறைக்கு வந்து தனக்குக் கொலை மிரட்டல் விடுத்தனரென்று ரவி சுப்பிரமணியம் தெரிவித்த குற்றச்சாட்டு, வழக்கறிஞர்கள் மத்தியிலேயே பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது. சங்கரமடத்தின் வக்கீலான சண்முகத்தின் ஜூனியர்களான ரேவதி, நஸீரா பானு என்ற இரு பெண் வக்கீல்களும் சிறைக்கு வந்து தனக்குக் கொலை மிரட்டல் விடுத்தனரென்று அவர் கூறியிருக்கிறார்.

கடந்த பெப்ரவரி மாதம் பத்தாம் திகதி இளைய மடாதிபதியான விஜயேந்திரருக்கு உயர்நீதிமன்றம் ஜாமின் வழங்கியது அன்றைய தினம் பிற்பகல், அதே நீதிமன்றத்தில் ஆஜரான ரவி சுப்பிரமணியம், இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஒரு கடிதத்தை நீதிபதி உத்தமராஜிடம் கையளித்தார். அந்தக் கடிதத்தில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டுள்ளதாம்.

"சங்கராமன் கொலை வழக்கில் என் மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு அப்ரூவரான நான், எல்லா உண்மைகளையும் சொன்னேன். அரசுத் தரப்பின் முதல் சாட்சியான என் உயிருக்கு ஆபத்து வரலாம் என்று பொலிஸார் என்னைக் காஞ்சிபுரம் கிளைச் சிறையில் பாதுகாப்பாக வைத்துள்ளார்கள். ஆனால், நான் அங்கு பாதுகாப்பாக இல்லை. முதலில், ஜெயிலர்



ஆடிட்டர் ராதாகிருஷ்ணன்

சேகரன் என்னிடம் ஜெயேந்திரருக்கு ஆதரவாகப் பேச ஆரம்பித்தார். ஒரு நாள் என்னைக் கோர்ட்டுக்கு அழைத்துவரும் போது டி.எஸ்.பி.யான இளங்கோவிடம் நான் இதைச் சொன்னேன். சில நாட்களிலேயே சேகரன் மாற்றப்பட்டார். அதன் பிறகு ஒருநாள் டி.எஸ்.பி.யான ராஜ்குமாரும்,

சப்-இன்ஸ்பெக்டர் பட்டாபியும் என்னிடம் வந்தார்கள். ஒரு வாக்குமூலத்தை எழுதிக்கொண்டு வந்து, அதில் கையெழுத்திடச் சொன்னார்கள். பதினைந்து பக்கம் இருந்த அதில், நிர்ப்பந்தம் காரணமாகத்தான் ஜெயேந்திரருக்கு எதிராக நான் அப்ரூவர் ஆகிவிட்டதாக எழுதப்பட்டிருந்தது. பொலிஸ் சீருடையில் வந்திருந்த அவர்கள், பிரேம்குமார் எஸ்.பி. தான் தங்களை அனுப்பி வைத்ததாகவும், சில முக்கிய திருப்பங்கள் காரணமாக இப்படி ஒரு வாக்குமூலம் தேவைப்படுவதாகவும் கூறினார்கள். நான் நம்பவில்லை.

எஸ்.பி.க்கே போன் போட்டுத் தரச் சொன்னேன். அவர்கள் அதைச் செய்யவில்லை. திரும்பிப்போய் விட்டார்கள்" என்று அதில் எழுதப்பட்டிருக்கிறதாம், மேலும் தொடர்ந்து கீழ்க்கண்டவாறும் எழுதியுள்ளாராம்.

"அதன் பிறகு சிறைக்குள் வருபவர்கள் மீதெல்லாம் எனக்குச் சந்தேகம் வர ஆரம்பித்தது. மற்றக் கைதிகளைப் பார்க்க வருபவர்களும் என்னைக் கண்காணிக்க வந்திருப்பதாகவே அஞ்ச ஆரம்பித்தேன்.

பெப்ரவரி முதல் திகதி, சங்கரமட வக்கீலான சண்முகத்தின் ஜூனியர்கள் ரேவதி மற்றும் நஸீரா பானு இருவரும் என்னை வந்து பார்த்தார்கள். அப்ரூவர் ஆனதில் உங்கள் மனைவிக்கு விருப்பமில்லை. குடும்பத்தாரின் அபிமானத்தை மீண்டும் பெறும் வகையில் நீங்கள் மாறுவதே நல்லது என்றும் சொன்னார்கள். நான் இவர்களுக்குப் பிடி கொடுக்கவில்லை. போய்விட்டு இன்னொரு நாள் வந்தார்கள். 'நாங்கள் மனச்சாட்சி உள்ள பெண்கள். தவறான வழிகாட்டமாட்டோம்' என்றார்கள். அப்போதும் நான் இவர்கள் பேச்சைக் கேட்கவில்லை. இந்தச் சிறைக்குள்ளேயே என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் என்று கடைசியாக மிரட்டும் தொனியில் கூறிவிட்டுப் போனார்கள். எனவே நீதிபதி அவர்கள் என் உயிருக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் வகையில் உத்தரவிடவேண்டும்" என்று ரவி சுப்பிரமணியம் அக் கடிதத்தில் எழுதியுள்ளாராம்.

இக் கடித விபரங்கள் சிறையதிகாரிகளுக்கு நீதிமன்றத்தினால் அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து ஜெயிலர் சேகரன் இடமாற்றம் செய்யப்பட்டார். ஆனால், பெண் வக்கீல்கள் தன்னை மிரட்டியுள்ளார்கள் என்று ரவி சுப்பிரமணியம் தெரிவித்த புகாரினால் காஞ்சிபுரம் வழக்கறிஞர்கள் மத்தியில் பெரும் பரபரப்பேற்பட்டது. காஞ்சிபுரம் வழக்கறிஞர்கள், சங்கத் தலைவர் மதனகோபால் தலைமையில் கூடிய வழக்கறிஞர்கள் அப் புகார் பொய்யெனக் கடும் ஆட்சேபனை தெரிவித்தனர். அத்துடன் மூன்று நாட்களுக்குத் தொடர்ச்சியாக நீதிமன்றத்தைப் புறக்கணிக்கவும் செய்தனர். ஆனால் மற்றொரு வக்கீலான கே.பி.பிரேம்குமார் தலைமையில் கூடிய வக்கீல்கள் பலர், நீதிமன்றப் பகிஷ்கரிப்புக் கோரிக்கையை நிராகரித்து விட்டதோடு அவர்கள் நீதிமன்ற அலுவல்களிலும் பங்குபற்றினர்.

ரவி சுப்பிரமணியம் தன்னைப் பெண் வக்கீல்கள் மிரட்டினார்களென்று குறிப்பிட்ட தினத்தன்று ரேவதியும் நஸீரா பானுவும் காஞ்சிபுரம் கிளைச் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். அதற்கான பதிவுகள் அந்தச் சிறைச்சாலையில் இருக்கின்றன. ஆனால், இவர்கள் ரவி சுப்பிரமணியத்துடன் பேசினார்களென்றோ அல்லது அவரை மிரட்டினார்களென்றோ தெரிவிப்பதற்கு எந்தவித ஆதாரங்களும் கிடையாது.

ஆனால், ரவி சுப்பிரமணியம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த கடித விபரங்களைப்பற்றிக் கேள்விப்பட்ட ஜெயேந்திர் முகத்தைச் சுளித்துக் கொண்டாராம். "எனக்கு நல்லது பண்ணுறதா நினைச்சு ஆரம்பத்திலிருந்தே பலரும் கெடுதல்தான் பண்ணிக்கொண்டிருக்கா" என்று அழுது வடிந்தாராம் ஜெயேந்திரர்.

ரவி சுப்பிரமணியத்தின் இந்தப் புகாருக்குப் பின்னணியில் இருப்பது யாரென்று சரிவரத் தெரியவில்லை. ஜெயேந்திரரா அல்லது பொலிஸா என்பதை யாராலும் திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஆனால், ரவி சுப்பிரமணியம் அப்ரூவரான செய்தியறிந்ததும் அவரது புதல்வர்கள் இருவரும், காஞ்சிபுரம் கிளைச் சிறையில் தந்தையைச் சந்தித்து, ஜெயேந்திரருக்கு எதிராகச் சாட்சி சொல்ல வேண்டாமென்று கேட்க விரும்பினராம். இதற்காகச் சிறைச்சாலைக்குச் சென்ற இரு புதல்வர்களையும் தந்தையைச் சந்திப்பதற்கு சிறையதிகாரிகள் அனுமதிக்க மறுத்துவிட்டனர் என்றும் சொல்லப்படுகிறது.

**(தொடரும்.....)**

## கே.ஆர்.விஜயாவின் சகோதரிக்கும் உதவினான் 'அப்பு'

காஞ்சிபுரம் ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயத்தின் மேலாளராகப் பணியாற்றிய சங்கரராமனைக் கொல்வதற்குக் கூலிப்படையை ஏவியவன் 'அப்பு' என்றழைக்கப்படும் பிரபல தாதா என்பதே தனிப்படைப் பொலிஸாரின் கணிப்பு. கிருஷ்ணசாமி என்ற இயற்பெயர் கொண்ட இந்த 'அப்பு' மீது சுமார் பத்துக்கு மேற்பட்ட வழக்குகள் உள்ளன. நடிகை கே.ஆர்.விஜயாவின் தங்கையான வத்சலாவுக்குத் தமிழகம், கோட்டூர்புரத்தில் பதின்மூன்று ஏக்கர் நிலம் சொந்தமாக இருந்தது. இதில் 'கெமியா கெமிக்கல்ஸ்' என்ற பெயரில் இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்று செயல்பட்டு வந்தது. இந்த நிறுவன உரிமையாளர்களுக்கும் வத்சலாவுக்குமிடையில் தகராறு ஏற்பட்டபோது, வத்சலா சார்பில் பிரச்சினையில் தலையிட்ட அப்பு, ஒரு கோடி ரூபா பெறுமதியான பொருட்களை தனது அடியாட்களை வைத்து அபகரித்துச் சென்று விட்டான். இது தொடர்பாகவும் அவன் மீது வழக்கொன்று பதிவாகியிருக்கிறது. இதற்காக வத்சலாவிடமிருந்து அப்பு பத்து இலட்சம் ரூபாவைப் பெற்றுக்கொண்டதாகக் கூறப்படுகிறது.




## காஞ்சிமடத்தில் மற்றொரு கொலை

சங்கரராமன் கொலை காஞ்சி சங்கரமடத்தை உலுப்பிக்கொண்டிருந்த போது, அதே காஞ்சியிலுள்ள 'உத்தராதி' மடத்தில் மற்றொரு கொலை நடந்திருக்கிறது. உத்தராதி மடத்தின் நிர்வாகியான ஸ்ரீநிவாச்சாரி என்பவர் கடந்த ஜனவரி இருபதாம் திகதி மடத்துக்குள்ளேயே கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். கொலை நடந்த அன்றைய இரவு பக்கத்து அறையில் தங்கியிருந்த ஸ்ரீபெரம்புதூர் மடத்தின் நிர்வாகி ராமாயன்ஜியைப் பொலிஸார் கைது செய்தனர். மடத்து நிலங்களை நிர்வகிப்பது தொடர்பாக இருவருக்குமிடையே நிலவிய பிரச்சினையே கொலைக்குக் காரணமென விசாரணை நடத்திய பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர். வேறு சில சில்மிஷங்களும் கொலைக்குக் காரணமாக இருந்திருக்கலாமென்று சந்தேகிக்கிறது பொலிஸ். பீகார்காரரான ராமாயன்ஜியைக் கைது செய்துள்ளனர். ராமாயன்ஜி கொலைக் குற்றத்தை ஏற்றுக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கிறார். கொலை செய்வதென்று முன்கூட்டியே திட்டமிட்டே ராமாயன்ஜி, ஸ்ரீநிவாச்சாரியாரின் மடத்துக்குச் சென்று அங்கேயே இரவு தங்கியிருக்கிறார். ராமாயன்ஜி, பீகாரில் வேறு சில கொலைகளிலும் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்ற தகவலும் பொலிஸாருக்குக் கிட்டியுள்ளது.




பயனெண் ணாமல் உழைக்கச் சொன்னாள்,
பக்தி செய்து பிழைக்கச் சொன்னாள்;
துயரி லாதெனைச் செய்து விட்டாள்,
துன்ப மென்பதைக் கொய்து விட்டாள்.

-சுப்பிரமணிய பாரதியார்-




# இரும்பும் தங்கமும்

பாப்பா முரசு சிறுகதை



நகை வேலை நடைபெறுகின்ற பட்டறையில் இரும்பும் தங்கமும் இருந்தன.

இரண்டும் அருகருகே இருந்தன. ஜொலிக்கும் வண்ணம் நல்ல நிறத்தோடு இருக்கின்ற தங்கமானது தன் அருகே கருமையாக இருக்கும் இரும்பைப் பார்த்ததும் வெறுப்படைந்தது.

"இரும்பே! நீ என் அருகிலா இருக்கின்றாய்? உன் நிறத்தைப் பார்க்கின்ற வேளையில் எனக்கு அருவருப்பாக இருக்கின்றது! கருகருவென நிறம் கொண்டவனாக நீ இருக்கின்றாயே! கருமைநிறம் கொண்ட நீ அருகில் இருப்பதற்காக நான் வெட்கப்படுகிறேன்" என்றது தங்கம்.

"தங்கமே! இயற்கையிலே உன் படைப்பு மின்னும் நிறத்தைப் பெற்றுள்ளது. நானோ கருமையான நிறத்தைப் பெற்றுள்ளேன். இதற்காக வேண்டி நீ என்னை இழிவாகப் பேசுகிறாயே! இது உனக்கு நியாயமானதாகப் படுகிறதா?" என்று கேட்டது இரும்பு.

"இதோ பார்! இரும்பே! நான் உன்னிடம் பேசுகிறேன் என்று நீயும் என்னோடு சரிசமமாகப் பேசாதே! வாயை மூடிக்கொண்டு மௌனமாக இரு. என்னோடு சரிசமமாகப் பேச உனக்கு எந்தத் தகுதியும் கிடையாது. எனவே உன்னுடைய பேச்சை நிறுத்திக்கொண்டு நான் உன்னைப்பற்றிக் கூறுவதை மட்டும் காதில் வாங்கிக்கொள்" என்றது தங்கம்.

"தங்கமே! உனக்கு எந்த அளவுக்குப் பேச்சுச் சுதந்திரம் இருக்கின்றதோ அந்த அளவுக்கு எனக்கும் பேச்சுச் சுதந்திரம் இருக்கின்றது. நீ வீணாக என் மனதைப் போட்டு குழப்பிக் கொண்டிருக்காதே! உன்னைப் போன்று நானும் ஒரு உலோகம் தான். உனக்கு சரிநிகர் சமமாகத்தான் நானும் இருக்கிறேன். வீணாக நீ என்னிடம் வாக்குவாதம் செய்து கொண்டிருக்காதே" என்றது இரும்பு.

"இரும்பே! நீயும் ஒரு உலோகம் தான்! நானும் ஒரு உலோகம்தான். நான் இதனை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் பெண்கள் எல்லாம் என்னைத்தானே நகையாக அணிந்துள்ளார்கள்! உன்னை அவர்கள் நகையாக அணியவில்லையே! என்னை அணிந்துகொள்வதை அவர்கள் கௌரவமாக நினைக்கின்றார்கள். என்னை அணிந்தால்தான் அவர்கள் அழகாகவும் காட்சியளிக்கின்றார்கள். எனவே உனக்கு அந்தக் கொடுப்பினை இல்லை. எனவே நீ வாயை மூடிக்கொண்டு மௌனமாக இருந்து கொள்" என்றது தங்கம்.

'இந்தத் தங்கம் நம்மைத் தொடர்ந்து மட்டம் தட்டிப் பேசிக்கொண்டிருக்கிறது. நாம் அதற்குச் சரியான பதிலடியைக் கொடுக்க வேண்டும்' என்று நினைத்தது இரும்பு.

உடனே அது தங்கத்தைப் பார்த்து, "தங்கமே உன்னை பெண்கள் எல்லோரும் நகையாக அணிந்துகொள்வது உண்மைதான். ஆனால் அந்த நகைகளை எல்லாம் என்னால் ஆன இரும்புப் பெட்டியில் வைத்தல்லவா பூட்டிப் பாதுகாக்கின்றார்கள்! அதனால் உன்னையே பாதுகாக்கின்ற நான் உன்னைவிடப் பெருமையானவன் அல்லவா!" என்றது.

இரும்பு இவ்வாறு பேசியதைக் கண்டதும் தங்கம் ஆத்திரமடைந்தது.

"இரும்பே! நீ என்னதான் என்னிடம் நியாயங்களை எடுத்துரைத்தாலும் உன்னைவிட நானே பெரியவன் என்பதை ஒருபோதும் மறவாதே" என்றது.

'தங்கமே! நம்மில் யார் பெரியவர்? யார் சிறியவர் என்பதையெல்லாம் அப்புறமாகப் பார்த்துக் கொள்ளலாம்" என்று தங்கத்தின் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தது இரும்பு.

சிறிது நேரத்தில் பட்டறையின் உரிமையாளர் வந்தார். பட்டறையில் வேலைகளை எல்லாம் செய்து முடித்த பின்னர், தங்க நகைகளைப் பெட்டியின் உள்ளே வைத்து பெரிய இரும்புப் பூட்டினால் பூட்டிச் சென்றார்.

இதனைக் கண்ட தங்கமோ தன் தவறை உணர்ந்தது.

'நாம் என்னதான் அழகோடு ஜொலித்துக் கொண்டிருந்தாலும் அழகில்லாத இரும்புதானே நமக்குப் பாதுகாப்பாக இருக்கின்றது!

இந்த இரும்பாலான பூட்டு மட்டும் நம்மைப் பாதுகாக்க வில்லையென்றால் திருடர்கள் நம்மைத் திருடிச்சென்று விடுவார்களே! கண்டபடி பேசி இரும்பின் மனதைப் புண்படுத்தி விட்டோமே! இனிமேல் ஒருபோதும் இரும்பின் மனதை புண்படுத்தக் கூடாது. நமக்கு பாதுகாப்பாக இருப்போரை மதித்து போற்றி நடக்க வேண்டும்' என்று உணர்ந்தது.

# ஆத்திசூடி

## இளமையில் கல்

நீ சிறு பிராயத்திலேயே அறநெறிகளைக் கற்றுக்கொள்.


நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

# அதிசய உலகம்



தென் அமெரிக்காவில் பெரு நாட்டில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இன்கா இனப் பெண்கள் உடையணியும் அழகைத்தான் இந்தப் படத்தில் பார்க்கிறீர்கள். பிரபல ஸ்பெயின் தேசப் புள்ளியான பெட்ரோ டி சீஸா டி லியோன் 1553ஆம் ஆண்டிலேயே இதைப் பார்த்து வியந்து எழுதியிருக்கிறார். கஸ்கோ நகரப் (இன்கா இனத்தவர்களின் தலைநகர்) பெண்கள் அணிந்த உடைக்கு 'அக்சு' என்று அவர்கள் மொழியில் பெயர். அந்த மொழி க்யூசுவா (Quechva) எனப்பட்டது. இடையைச் சுற்றி இருக்கும் பெல்ட்டுக்கு ஸம்பி (Chumpi) என்று பெயர். மேலே சால்வை போலப் போர்த்திக் கொண்டிருப்பது லிக்லா (Llicla) அதன் இரு முனைகளையும் இணைத்து ஒரு பெரிய ஊசி குத்தப்பட்டிருக்கிறதே... அது துபு (Tupu) வெள்ளியால் ஆனது. தலையலங்காரம் பறவை இறகுகளால் ஆனது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04.05.2005.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 593
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 591

பரிசுக்குரியவர்:
செல்வி. ஏ.ஜே. பாத்திமா பஸ்னா,
173/5B, கந்தவத்த, மல்வானை.

### பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எப். மாசிபா, மவ்ஜூட், B14 1/7 சொய்சர் தொடர்மாடி, மொரட்டுவ. | ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை |
| துஷாயினி சுந்தரலிங்கம், வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம். | என். மாலிதி, 275, மாரியம்மன் கோயிலடி, மன்னார் வீதி, புத்தளம். |
| சா. ஸ்ரீஹஜனி, 'ஸ்ரீதேவி கோயில்' கொம்மாதுறை, செங்கலடி. | யோகராசா கலாரஞ்சினி, யா/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம், சரசாலை, சாவகச்சேரி. |
| க. சுகன்யா, ஸ்ரீ முத்துமாரியம்மன் தமிழ் மகா வித்தியாலயம், கம்பளை. | இ. இந்துஜா, 4, நகராட்சி மன்ற விடுதி, கண்டி வீதி, காந்தி நகர், திருகோணமலை. |
| வை. மதுஷாலினி, சித்ரா ஒழுங்கை, கொழும்பு 05. | என்.எப். நாசூஹா, தரம் 7B, தில்லையடி முஸ்லிம் மகா வித்தியாலயம், புத்தளம். |


# உங்கள் பொது அறிவு எப்படி?

## சிறப்புப் பெயர்கள்


| | |
|---|---|
| 1. இந்து சமுத்திரத்தின் முத்து | - இலங்கை. |
| 2. ஐரோப்பாவின் நோயாளி | - துருக்கி. |
| 3. சூரிய உதய நாடு | - ஜப்பான். |
| 4. நள்ளிரவு சூரிய உதயம் | - நோர்வே. |
| 5. இந்தியாவின் வாசல் | - பம்பாய் |
| 6. சீனாவில் துயரம் | - குவாங்கோ நதி |
| 7. புனித நாடு | - பாலஸ்தீனம். |
| 8. இருண்ட கண்டம் | - ஆபிரிக்கா. |
| 9. ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | - சுவிற்சர்லாந்து. |
| 10. ஆயிரம் வாவி நாடு | - பின்லாந்து. |





# பன்றி ஒலிம்பிக்




சீனாவின் ஷங்காய் நகரில் 'நகரப் பூங்கா'வில் வருடாந்தம் நடைபெறும் பன்றிகளின் ஒலிம்பிக் போட்டியின் ஒரு காட்சியே நீங்கள் இங்கு காண்பது. இந்த ஒலிம்பிக் விழாவில் பன்றிப் போட்டியாளர்கள் தடை தாண்டல், வளையத்தினுள் பாய்தல், சுழியோட்டம், நீச்சல் போட்டி போன்றவற்றில் வெளுத்து வாங்கிவிட்டார்கள்.



# இராஜ்ஜிய வீழ்ச்சி



**இது** இராஜ்ஜிய வீழ்ச்சி என்று சொன்னாலும் பொருந்தும். என்ன குழப்பமாக உள்ளதா? உண்மையில் கீழே விழுந்து மண்கவ்விக்கொண்டிருப்பவர் இலேசுப்பட்டவர் அல்ல. பிரிட்டிஷ் அரச வாரிசு வில்லியம்ஸ் இளவரசர். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட போலோ விளையாட்டில் பங்கேற்ற வில்லியம்ஸ் இளவரசர் எதிர்பாராத விதமாகச் சரிந்து விழுந்தார். அதிர்ஷ்டவசமாக அவரது தோள்பட்டையே நிலத்தில் பட்டுள்ளது. சற்றுப் பிசகித் தலை நிலத்தில் பட்டிருந்தால் பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கும் என்று பார்வையாளர்கள் தெரிவித்தனர்.



# விசித்திர சைக்கிள் சவாரி

**அ**மெரிக்க நியூயோர்க் வாசியான மேரி கர்லவேஜ் தனது செல்ல நாயாரையும் ஏற்றிக்கொண்டு சைக்கிளில் வலம் வந்த காட்சியே இது.

மேரியின் இச் செல்ல நாயின் பெயர் ஃப்ளூடோக் (Blue Dog). பாதுகாப்புப் பட்டிகளைப் பொருத்தி பலமான பாதுகாப்புடனேயே இவர் இவ்வாறு பயணம் செய்தார். இலகுவில் உணர்ச்சி வசப்படக்கூடிய பிராணி இனமான நாய்கள் இவ்வாறு உல்லாசமாக உலா வரும்போது உளப்பூர்வமான திருப்தியை அடைகின்றன என்று மிருக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# கடுகு சிறிசு

**அ**னுவாயுங்தங்கள் இன்று பல வகையிலும் பல வடிங்களிலும் தோன்றியுள்ளது அனைவரும் அறிந்ததே! ஆனால் இங்குள்ளது. உலகிலேயே மிகச் சிறிய அணு ஆயுதம் என்று பதிவு செய்யப்பட்ட ஒன்றே. இது 1960களில் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஆக 27 செ.மீ நீளம் உடையது. நிறை 23.13 கி.கி. ஆகும் ஆனால் இது வெடித்தால் சுற்றியுள்ள 25மி.மீ. பரப்பளவுடைய பிரதேசம் அழிவுக்கு உட்படுமாம். பார்த்தீர்களா, கடுகின் வேலையை.



# ரோபோ ஜாக்கி

**ம**த்திய கிழக்கு நாடுகளில் பிரபலமான 'ஒட்டக ரேஸ்'களுக்கு சிறுவர்களை ஜாக்கிகளாகப் பயன்படுத்துவதற்கு உலகளாவிய ரீதியில் பாரிய எதிர்ப்புக் கிளம்பியது. இக்காரணத்தினால் சிறுவர்களை இதில் ஈடுபடுத்தாமல் இருக்க மாற்று ஏற்பாடொன்று கண்டுபிடிக்க வேண்டியேற்பட்டது. மாற்றுச் சிந்தனையின் மாதிரிவடிவமாக உருவாக்கப்பட்ட ரோபோ ஜாக்கி இவர். பார்க்கும்போது தேறுவார் போலத்தான் இருக்கிறார் இந்த ஜாக்கி.



த்ரிஷா



கமல்
மும்பை எக்

மீண்டும் ரஜினிக்கு எதிராகப் பிரச்சினை கிளம்பிவிட்டது. தமிழ் பாதுகாப்பு இயக்கம் சார்பில் தமிழில் பேர் சூட்டவேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனும், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸும் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றனர்.

'சந்திரமுகி' என்பது வடமொழிச் சொல்தான். இந்தக் கதைக்கு அதுதான் பொருத்தமான டைட்டில். இதைத் தமிழ்ப்படுத்தினால் 'நிலா மூஞ்சி' என அர்த்தம் வரும். அந்தப் பெயரைப்போய் வைக்க முடியுமா? என வாலி கூறினார். இப்போது திருமாவளவன், சந்திரமுகிக்கும் தமிழ்ப்பெயர் வைக்கணும் என குரல் கொடுக்க ஆரம்பித்துவிட்டார். ரஜினியும் கமலும் தாங்களாகவே முன்வந்து பெயர்களை மாற்ற முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார் திருமாவளவன்.

காசியில் புகழ் பெற்ற ஜெயின் கோயில், அரண்மனை உள்ளிட்ட பல இடங்களில் 'அரக்கன்' படப்பிடிப்பு நடந்து வருகிறது. முரளி ஹீரோவாக நடிக்கும் இந்தப் படத்தில் மும்பை மோகினி சங்கீதா கபூர் கதாநாயகியாக நடிக்கிறார். இந்தப் படத்தின் ஹைலைட்டே மாஜி என்கிற பெண்தான். இதுபற்றி டைரக்டர் வடிவுடையானிடம் கேட்டோம்.

"இந்தப் படத்தில் வில்லத்தனமான ஒரு முக்கிய பாத்திரத்தில் ஒரு பெண்ணை நடிக்க வைக்க முடிவு செய்தேன். நாங்கள் கற்பனைசெய்து வைத்திருந்த உருவத்திற்கு ஏற்ப அமைந்தார் மாஜி. மாஜி வருகிற ஒவ்வொரு ஸீனும் சிலிர்ப்பாக இருக்கும்" என்கிறார் வடிவுடையான்.

'குஸ்தி' படத்திற்காகத் தொடர்ந்து 72 மணிநேரம் நீச்சல் குளத்திலேயே கவர்ச்சி ஆடையில் நனைந்துகொண்டிருந்தாராம் ஃப்ளோரா.

'காதல்' படத்தின் தெலுங்கு உரிமையைப் பிரபல தயாரிப்பாளர் என்.வி.பிரசாத் வாங்கியுள்ளார். ஏற்கனவே இங்கே சூப்பர் டுப்பர் ஹிட்டான 'ஆட்டோகிராப்' தெலுங்கில் ஓடவில்லை. இதற்குக் காரணம் நேடிவிட்டி தெலுங்கில் செட்டாகாததுதான். அதனால் 'காதல்' படத்தின் சில விஷயங்களை மாற்றம் செய்து வெளியிடவுள்ளார். கன்னட உரிமையை நடிகர் பிரகாஷ்ராஜ் வாங்கியுள்ளார்.

சிவாஜி பிலிம்ஸிற்கு இது பொன்விழா ஆண்டு. அதையொட்டி 'சந்திரமுகி' படம் பண்ணுகிறார் ரஜினி. இதேபோல் சத்யா மூவிஸிற்கும் பொன்விழா ஆண்டு வருகிறது. அதனால் ஆர்.எம். வீரப்பனுக்கும் ஒரு படம் பண்ணித் தருவார் என பேச்சு அடிபடுகிறது. அதேபோல் எடிட்டர் மோகனுக்கு ஒரு படம் பண்ணப்போவதாகவும் பேசிக்கொள்கிறார்கள்.

'சங்கராபரணம்' படத்தை தமிழில் எடுக்க முயற்சி மேற்கொண்டிருக்கிறார் டைரக்டர் ராஜகுமாரன். விக்ரமை ஹீரோவாக்க முயற்சிகள் நடக்கின்றன.

பாக்யராஜ் மகள் சரண்யா அறிமுகமாகும் 'பாரிஜாதம்' படத்திற்கு பாபு என்கிற இளைஞரை கதாநாயக னாக அறிமுகம் செய்கிறார் பாக்யராஜ்.

'சச்சின்' படத்தில் ஒரேயொரு பாட்டுக்கு ஆட ஸ்ரேயாவைக் கேட்டனர். ஆனால் இப்போது 'மழை' படத்தில் கதாநாயகியாக நடித்துவருவதால் மறுத்துவிட்டாராம் ஸ்ரேயா.



ரீச்சட் ~ சுபா

கேரளாவில் இப்போது மீன் கொடிதான் உச்சியில் பறக்கிறது. என்னது? கேரளாவில் மீன் கொடியா?.....என்று அதிராதீர்கள். மலையாளத் திரையுலகில் தன் கண்ணழகாலும் மோகன்லாலின் விடாப்பிடியான ரெகமெண்டேஷனாலும் அதிக மலையாளப் படங்களில் நடித்து வருகிறார் நம்ம ஊர்மிளா. தற்போது அதீப் என்ற கன்னட உச்ச நட்சத்திரம் இயக்கி நடிக்கும் 'ஆட்டோகிரா.'.ப்'பின் ரீமேக்கிலும் மீனா தான் ஹீரோயின்.

'சாணக்யா' படத்தில் சரத்துக்கு இரண்டு ஜோடிகள். கவர்ச்சியில் எட்டுக்கட்டை ஸ்ருதி வரை போடும் நமீதாவும் தெலுங்கில் குடும்பப் பாங்கான வேடங்களில் வெளுத்துக்கட்டும் லயாவும் நடிக்கின்றனர். சாணக்யாவில் இருவரையும் லவட்டும் ஹீரோ சரத், "அண்ணல் காந்தியடிகள்" ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ டிரைவராக நடிக்கிறார்.

'கற்க கசடற' படத்தை முழுக்க முடித்து விட்டார் இயக்குநர் ஆர்.வி.உதயகுமார். ரஜினிக்கு எஜமான், விஜயகாந்த்துக்கு சின்னக்கவுண்டர் என சூப்பர் ஹிட்டுகளைக் கொடுத்தவர் என்பதனால் "எனக்கும் நிச்சயம் லைப் உண்டு" என நம்பிக்கொண்டிருக்கிறார் ஹீரோ விக்ராந்த். ஹீரோவின் நம்பிக்கையைவிட இயக்குநரின் நம்பிக்கை இரண்டு மடங்கு அதிகம் என்று சொல்லலாம். காரணம்...என் படம் அருமையாக வந்திருக்கிறது. இப்பவே ரிலீஸ் செய்துவிடலாம்தான். ஆனால் 'சந்திரமுகி' ரிலீஸ் ஆகும்போதுதான் 'கற்க கசடற' படமும் ரிலீஸ் என்பதில் உறுதியாக இருக்கிறார் ஆர்.வி. எஜமானுடன் போட்டி!



ரவிகிருஷ்ணா ~ சோனியா அகர்வால்

பிரபல சேனலுக்காக வி.ஐ.பி.க்களை பேட்டி எடுக்கும் நிருபராக அவதாரம் எடுக்கிறார் காயத்ரி ஜெயராம்.

பிரமாண்டமாக ஆரம்பிக்கப்பட்ட 'ஆசாமி' படம் கிடப்பில் போடப்பட்டது. மறுபடி ஷூட்டிங் ஆரம்பித்தபோது கதாநாயகி நேகா தெலுங்கில் பிஸியாகிவிட்டார். அதனால் புதிய நாயகியைத் தேடி வருகிறார்கள்.

சமீபத்தில் கேரளா சென்றார் எஸ்.ஏ.சந்திரசேகரன். எதற்கு? மசாஜ்ஜிற்குத்தான். ரஜினி மசாஜ் செய்துகொண்ட இடத்தில் இவரும் மசாஜ் செய்துகொண்டு வந்திருக்கிறார்.

'கோடம்பாக்கம்' என்ற பெயரில் படம் எடுக்கிறீர்களே? சினிமா அவலங்களை போட்டுத் தாக்குவீர்களோ? "இப்படிக் கேட்டதும்.... "இல்லவே இல்லை" என மறுத்தார் டைரக்டர் ஜெகன். வேறென்ன விசேஷம்?"


சினிமாக்காரர்களை மட்டம் தட்டிய 'மகாநடிகனு'க்கு எதிராக சினிமா ஒரு உன்னதமான மீடியா என்பதைச் சொல்லப்போகிறாராம்!

குன்னூர் - கோத்தகிரி ரோட்டில் உள்ள வண்டிச்சோலை பகுதியில் எஸ்டேட் வாங்கிப் போட்டிருந்தார் சத்யராஜ். இப்போது அதை விற்றுவிட்டார்.

விவேக் காமெடி டிராக்கிலிருந்து ஒருபடி மேலேபோய் கதாநாயகனாக ட்ராக் போட்டிருக்கும் 'சொல்லி அடிப்பேன்' படத்தில் தேஜாஸ்ரீயும் சாயாசிங்கும் ஹீரோயின்களாக நடிக்கிறார்கள். இருவருமே ஆட்டத்தில் கால் தேர்ந்தவர்கள் என்றாலும் கூடவே ஆடுவதற்கு இன்னொரு கிளாமர் சரக்கையும் களமிறக்கியிருக்கின்றனர். வேறு யார்? 'திருடா திருடி' வண்டார்குழலியேதான். "சித்தாடை கட்டிக்கிடடு சிங்காரம் பண்ணிக்கிட்டு" என பழைய பாடலை ரீ-மிக்ஸ் போட்டு தாக்கி இருக்கின்றனர். இந்த மூன்றுபேரும் கோயில் திருவிழாக்களில் ஆடுவதுபோன்று ஏ.வி.எம்.மில் செட் போட்டு படமாக்கிய காட்சியைப் பார்க்க கண் கோடி வேண்டும்.



ஸ்ரே



மல்
க்ஸ்பிரஸ்

# சினி விசிட்

நயந்தாராவுக்கும் மீராஜாஸ்மினுக்கும் பிறந்து வளர்ந்த சொந்த ஊர் திருவில்லாதானாம். நயனும் மீரா மாதிரியே குறைவாகத்தான் பேசுவாராம். மீரா மாதிரியே....வேறு ஏதேனும் உண்டா என்று கேட்கிறீர்களா? அதெல்லாம் நமக்குத் தெரியாதப்பா.

'நளதமயந்தி' படத்தில் நடித்த கீதுமோகன்தாஸை ஞாபகமிருக்கிறதா? அம்மணி தமிழில்தான் தொடர்ந்து நடிக்கவில்லையே தவிர....கேரளாவில் கலக்கிக் கொண்டிருக்கிறார். இந்த வருடம் கீதுமோகனுக்குத்தான் தேசிய விருது என்கிறார்கள். கிடைக்கட்டும் முதலில் அதைச் சொல்லிய பெருமை நமக்குக் கிடைக்கட்டுமே!

கலைஞரின் 'கண்ணம்மா'வில் வாய்ப்பை இழந்த அபிதா.....பலத்த முயற்சிக்குப் பின் 'காதலோடு கலந்துவிடு' என்ற படத்தில் நாயகியாக நடித்து வருகிறார்.

கன்னடத்திலிருந்து தமிழுக்கு வரும் 'மோனலிஸா' படத்தை வெளியிடாமல் இருக்க நடிகை சதா எவ்வளவோ முயற்சி எடுத்தார். ஆனால் அவர் முயற்சி பலிக்கவில்லை. தான் நடித்த படத்திற்கு சதாவே தடைபோட என்ன காரணம்? இந்தப் படத்தில் புது முகம் திவானோடு சதா நடித்திருக்கிறார். சூடான படுக்கையறைக் காட்சிகள்தான். இது போதாதென்று 'புன்னகைப் பூவே' ரேகாவும் வெளுத்து வாங்கியிருக்கிறாராம் கவர்ச்சியில்.

நமீதாவை தென்னகத்தின் கவர்ச்சிக் குயினாகத்தான் இரசிகர்கள் நினைக்கிறார்கள். நமீதாவும் அப்படிப்பட்ட படங்களில்தான் நடித்து வருகிறார். ஆனால் நமீதாவை நடிப்புத் திலகமாக மாற்றுவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறார் புதுமுக இயக்குநர் - நடிகர் பத்ரி. "தலைப்புச்செய்தி படத்தில் நமீதா அக்ரஹாரத்துப் பெண்ணாக நடிக்கிறார். கவர்ச்சித் திலகமாக மட்டுமில்லாமல் நடிப்புத் திலகமாகவும் இந்தப் படத்தில் அவரை நான் வெளிக்காட்டப் போகிறேன்" என சவால் விடுகிறார். பத்ரிக்கு ஏன் இந்த வேண்டாத வேலை.


மதுமிதா

பல்வேறு சிக்கல்களில் சிக்கித் தவித்த ராஜ்கிரண் தற்போது அதிலிருந்தெல்லாம் விடுபட்டுவிட்டாராம். குறிப்பாக அந்த மனைவி விவகாரம்.....விவாகரத்து வாங்கிய கையோடு நிம்மதியாக 'தவமாய் தவமிருந்து' படத்தில் நடிக்கப் போயிருக்கிறார். 40 லகரம் சம்பளம் என்கிறார்கள். என்ன அதிகமா இருக்கே என்கிறீர்களா? முதல்முதலாக ஒருகோடியைத் தொட்ட ஹீரோவாச்சே!

பாவம் 'மன்மதன்' செய்த அதிகப்படியான செலவால் இப்போது இந்தியன் தியேட்டர்ஸ் திணறிக்கொண்டிருக்கிறது. 'சொல்லி அடிப்பேன்' படத்தில் அந்தப் பற்றாக்குறை எதிரொலிதான். பட்டுவாடா செய்யவேண்டிய சிலர் நடையாக நடந்துகொண்டிருக்கின்றனர். அப்படி இப்படி திணறினாலும் எப்படியோ சமாளித்து பட்டுவாடாச் செய்துகொண்டிருக்கின்றனர் இந்தியன் தியேட்டர்ஸார். காரணம் யாரோ? அனுப்பியது யாரோங்கிற கதையாக இருக்கிறது.

## ஜோடியில் விஜய் சிநேகா

நமீதாவின் வீட்டில் வளரும் நாய் சொல்வதைச் செய்யும் வேலையில் பயிற்சி பெற்றதாம். வீட்டில் "வேறுபக்கம் இருக்கும் நபரை அழைத்து வா" என்று கட்டளையிட்டால் போய் அவர்களை அழைத்து வருகிறது.

மலையாள இயக்குநர் ப்ளஸ்ஸி இயக்கத்தில் விக்ரம் நடிக்க கால்ஷீட் தந்திருந்தார். ஒருசில கமர்ஷியல் ஐட்டங்களை கலக்கச் சொன்னதால் நான் என் பெயரைக் கெடுத்துக்கொள்ள விரும்பவில்லை என்று சொல்லி பின்வாங்கிவிட்டாராம் இயக்குநர்.

"ஷக்கலக்க பேபி" என்று அடித்தொண்டையில் பாடி அசத்திய பேபி வசுந்தராதாஸுக்கு தொடர்ந்து டப்பாங்குத்து ஸ்டைலில் பாடவே வாய்ப்புகள் வருகிறதாம். ஸோ, டப்பாங்குத்து பாடல்கள் இனிப் பாடவே போவதில்லையாம். ஒன்லி ஸ்டைலிஷ் பாடல்கள்தான் பாடுவாராம்.

இசைவாரிசு யுவன்சங்கர்ராஜாவுக்கு விமானியாக ஆவதுதான் ஒரே ஆசையாக இருந்ததாம். வேறு வழியில்லாமல் தந்தையின் வழியிலேயே களமிறங்கினாராம். தற்போது இண்டர்நேஷனல் ஆல்பம் ஒன்றை வெளியிடும் முயற்சியில் தீவிரமாக இறங்கியிருக்கிறார் யுவன்.

பிரபல கேமராமேன், அதாவது இயக்குநர் எஸ்.ஏ.சி.யின் ஆஸ்தான கேமராமேன் கேசவன் தயாரிப்பில் பார்த்திபன் ஒரு படத்தில் நடிக்கவிருக்கிறார். இன்னும் பெயரிடப்படாத அந்தப் படத்தில் பிரணதி ஹீரோயினாக நடிக்கிறார்.

'ராம்' படத்தில் தனது யதார்த்தமான நகைச்சுவையால் வயிற்றைப் புண்ணாக்கியிருப்பவர் கஞ்சா கருப்பு. இவரது அசத்தலான நடிப்பைப் பார்த்துவிட்டு தனது அலுவலகத்திற்கு வரவழைத்த சூப்பர்குட் சௌத்ரி, அந்த நகைச்சுவை வேந்தனுக்கு "அருமையாக வருவாய்" என ஆசி வழங்கிய கையோடு கையில் கட்ட வாட்ச் ஒன்றையும் பரிசாக அளித்துள்ளார். கஞ்சா கருப்புக்கோ கஞ்சா அடித்த மயக்கம். பிறகென்ன...? அடுத்த பட வாய்ப்பையும் சேர்த்தே வழங்கியிருக்கிறார்.


சுஜிபாலா

'அந் நியன்' ரிலீசுக்குப் பிறகு டைரக்டர் ஷங்கரை தெலுங்குப் பக்கம் தூக்கிக்கொண்டுபோகத் திட்டமிட்டிருக்கிறார்கள் தெலுங்கு முன்னணி நடிகர்கள் பலர். அதில் சிரஞ்சீவி முக்கியமானவர்.


ரேயா

கவிதாலயா தயாரிப்பில் சரண் இயக்கும் படத்தில் 'ஜெயம்' ரவி நடிக்கிறார் அல்லவா? ஹீரோயின் தேடும் படலத்தில் இறங்கிய சரண் இறுதியாக மும்பையிலிருந்து காமனா என்ற புதிய அழகியைக் களமிறக்கியுள்ளார்.

ஏற்கனவே சிலம்புச் சண்டை கற்றுக்கொண்டு அதில் தேர்ந்துவிட்ட விந்தியா இப்போது மான்கொம்புச் சண்டைப் பயிற்சியும் பெற்றுவருகிறார்.


சினிமாக்களில் பிஸியாகிவிட்டாலும் தனது நாடக வாழ்க்கையை கெட்டியாகப் பிடித்து நடத்தி வருகிறார் ஒய்.ஜி.மகேந்திரன். 'காதலிக்க நேரமுண்டு' என்ற நாடகம் சமீபத்தில் ராணி சீதை ஹாலில் நடந்தபோது பார்க்க வந்திருந்த பார்த்திபன், கடைசிவரை இருந்து ரசித்ததோடு, விழுந்து விழுந்து சிரித்திருக்கிறார். பார்த்திபனே சிரிக்குமளவுக்கு அப்படியென்ன காமெடி என்கிறீர்களா? உதாரணத்திற்கு ஒரு சாம்பிள் சொல்லட்டுமா? "டேய்...காந்தியடிகளே தனது கடைசி நேரத்தில் ஒரு சினிமாவோட பெயரைச் சொல்லிட்டுத்தான் செத்திருக்கார்டா."
"அப்படியா?"
"ஆமா ஹேராம்"னு சொல்லிட்டுத்தான் செத்திருக்கார்.

சினிமாவில் எத்தனையோ நட்சத்திரங்கள் இரட்டை வேடம் போட்டிருக்கிறார்கள். முதல்முதலாக ரம்யாஸ்ரீ, ரமாஸ்ரீ என்கிற இரட்டை இளம் பெண்கள் கதாநாயகிகளாக நடிக்கிறார்கள். குறைந்தது ஆறு வித்தியாசம்கூட அவர்களிடம் கண்டுபிடிக்க முடியாது. படத்தின் பெயர் 'நினைக்காத நேரமில்லை'.

'நெறஞ்ச மனசு' நாயகி சூசன் நடிக்கும் படம் 'கி.மு. - கி.பி.' கிருஷ்ணாவைச் சந்திப்பதற்கு முன், கிருஷ்ணாவைச் சந்தித்த பின். இதுதான் தலைப்பின் விரிவாக்கம். கிருஷ்ணாவாக குணால் நடிக்கிறார்.


குருநாதரை கௌரவிப்பதற்கு நிறைய வழிகள் உண்டு. அதில் பிரகாஷ்ராஜ் வழி தனி வழி. டூயட் படத்தில் பாலசந்தரால் அறிமுகப்படுத்தப்பட்ட பிரகாஷ்ராஜ் தென்னிந்திய படவுலகில் தவிர்க்கவே முடியாத எதிர்மறை நாயகன். அதிகமாய் வில்லனாய் நடித்தாலும் அவருக்குள் ஒரு ஹீரோயிஸம் உண்டு. அது....நல்ல சினிமாவை தரவேண்டும் என்கிற ஆசை. ஆசைமட்டுமல்ல....வெறியும்கூட. அதன்படி நல்ல சினிமா பண்ணு என ஊருக்கு உபதேசம் பண்ணிக்கொண்டிருக்காமல் ஒரு உதாரண நட்சத்திரமாகவும் திகழ்கிறார் பிரகாஷ்ராஜ். தன் முதல் படமான "டூயட் பெயரிலேயே டூயட் மூவிஸ் என நிறுவனத்தை தொடங்கி 'அந்தப்புரம்', 'தயா', 'நாம்' என வித்தியாசமான படங்களைத் தந்து நஷ்டப்பட்டுப்போனார். ஆனாலும் அவரின் தொடர் முயற்சியாக 'அழகிய தீயே' படத்தை தயாரித்தார். சிறந்த படம் என்பதோடு ஓரளவு வெற்றியையும் பெற்றது. தொடர்ந்து மணிரத்னத்தின் உதவியாளரான ப்ரியா என்கிற பெண்மணியின் இயக்கத்தில் 'கண்ட நாள் முதல்' எனும் படத்தை தயாரித்து வருகிறார். அதோடு முற்றிலும் புதுமுகங்கள் நடிக்க, குருநாதர் கே.பாலசந்தர் இயக்கத்தில் புதிய படம் ஒன்றை மிகுந்த பொருட்செலவில் பிரமாண்டமாகத் தயாரிக்கிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு இம்மாதம் (ஏப்ரல்) துவங்கி தொடர்ந்து 60 நாட்கள் படமாக்கப்பட்டு ஆகஸ்ட் மாதம் வெளிவருகிறது.


இவன் யாரோ
தருண் - ரீமாசென்




## ரா(சோ)க ஆலாபனை



உன்னைப் பார்க்க
விழைந்தபொழுது
கொடுமையானதுதான்
என்னையறியாமல்
உறக்கம் வரும்
உன் வருகை அறியாமல்
உறங்கிப் போவேன்.
நீ வந்து என் கனவின்
கதவு தட்டுவாய்
ஏமமோ சாமமோ
உன்னைப் பார்க்க
விழைந்தபொழுது
கொடுமையானதுதான்
எக்ஸ்பிரஸ் ரயிலேறி
அவசரப் பயணம் போவேன்
ரயிலே கவனியாத
சிக்கலில் உன்
சிக்னல் விழும் எனக்குள்
உன்னைப் பார்க்க
விழைந்தபொழுது
கொடுமையானதுதான்.
இப்படியாக
தடைபட்டுப் போனதொரு
தடயங்களின்....
உச்சிக் கிளையில்
ஈனக் குரலில் ஓர் குருவி
தன் பேடு
தன்னை மறந்து
தாவிப் போனதொரு
அவலத்தினை
ஈனத்தோடு
பொறாமைக் குரலில்
குமுறிக்கொண்டிருக்கும்
நீ இன்னொருவனுக்கு
கழுத்தை நீட்டிக்கொண்டிருப்பாய்
உன்னைப் பார்க்க
விழைந்தபொழுது
ரொம்ப கொடுமையானதுதான்!

*–பெரியசாமி விக்னேஸ்வரன், ஹட்டன்.*

## சில நிமிடங்கள்

நீ
மல்லாந்து படுப்பதாக எண்ணி,
நான் குப்புறப் படுக்கின்றேன்.

நீ குப்புறப் படுப்பதாக எண்ணி,
மல்லாந்துபடுக்கின்றேன்.

நீ இடக்கையை
ஓரங்ஞ்சாய்ந்து படுப்பதாக எண்ணி,
நான்
வலக்கையை
ஓரஞ் சாய்ந்து படுக்கின்றேன்.

மூச்சின்
உட் சுவாசங்கள்
உணர்ச்சிகள் புதுப்பிக்க,
வெளிச் சுவாசங்கள்
மோதிக் கொள்கின்றன.

ஒற்றைப் போர்வைக்குள்
இருவரும் ஒளிகின்றோம்
மற்றவர் பார்வைகளுக்கு
நான் மட்டுமே.....
எனக்குள் நீ புகுந்து
யாருக்குத்தான் தெரியும்?!

சின்னக் குழந்தைகள்
கண்ட கனவுகள் மாதிரி
சொல்லப்படாமல் சோகங்கள்
தொடர்கின்றன....

இப்போது
எனக்கு மட்டுமன்றி
என் பார்வைக்கும்
பைத்தியம் பிடித்துள்ளது!
உன்
அணைப்புச் சங்கிலியால்
கட்டப்படும் வரை.....

*–வி.எஸ்.ஏ.ரவிசங்கர்,*
*ஆறுமுகத்தான் குடியிருப்பு.*

## காத்திருக்கிறேன்!

முன்பு தனிமை தந்த சுகம்
இன்று கொடுமை செய்கிறது.
ஏதேதோ நினைவுகள் வந்து
அலைக்கழிக்கிறது.

தூக்கம் தூர ஓட
உணவை உதறி எழ
உணர்வுகள் உருவெடுத்தாட
நானும் கொஞ்சம் உணர்ச்சி
வசப்படுகிறேன்.

இதயம் அவனுக்காகவும்
சேர்ந்து துடிக்கிறது.
இதென்ன பிதற்றலா?
எனக்குமா?
இல்லை என்று இருக்க
முடியவில்லை
ஆமாம் என்று அலட்ட
முடியவில்லை
பின் எதற்காக ஒவ்வொரு
நிமிஷமும்
ஒவ்வொரு யுகமாய் கழிகிறது?

காட்சிகள், பேச்சுக்கள்,
கேட்கும் குரல்கள்,
பார்க்கும் முகங்கள்,
கனவுகள்,
காத்திருப்புக்கள் கூட
எல்லாமே அவனாய்
அவனுக்காய்...

அவனுமா? என்னை,
இருக்குமா?
தெரியவில்லையே!
எப்படிக் கேட்பேன்,
அறிவேன்?
முடியவில்லை
முடிவைக்கேட்க.

நான் முந்தவா?
வேண்டாம்.
நீயே முந்தி வா.
எப்போதும்
காத்திருக்கிறேன்
அந்த நாளுக்காய்...!

*ஜே.ஜே.*
*யாழ்ப்பாணம்.*

## ஆயுதத்தின் ஓலம்

நானில்லையெனில் - உங்கள்
இனவாதமும், பிரதேசவாதமும்
புஷ்வாணமாகியிருக்கும்!
என்னிலட்சியமும்
சமரசத்தினைச் செதுக்கி
பிரிவினையையடைவதே!

ஜனநாயகம்
எனக்கெதிரி.
அதற்கெதிராக
நான் ஆயுள் முழுவதும்
போராடுவேன்.
அதற்காக
மனித உயிர்களைப் பறிப்பதில்
நான் கவலை
கொண்டதில்லை.
என் தேகமெங்கும்
பலிவாங்கும்
உணர்ச்சியே
ஊறிப்போயுள்ளது.

அமைதியை நோக்கிப்
புறப்பட்ட
சமாதானச் சிற்பிகளே
அந்தோ!
தெரிவதெல்லாம்
என் இராச்சியத்தில்
சாம்பலான மக்களின்
எலும்புகள்!
இன்னும் என்னிலக்கு
முற்றுப் பெறவில்லை.
மலர்ந்துள்ள அமைதிக்கு
மரணச் சடங்கு செய்ய
என் ஆத்மா துடிக்கிறது.
இதுவே
என் தொழில் தருமமும்கூட!

*எல். வஸீம் அக்ரம்,*
*கஹடகஸ்திகிலிய.*

## காத்திருப்பு

அந்த அரசோடு
வரும்
இந்த அரசோடு
வரும்
இந்திய இணைப்பில்
வரும்
நோர்வே துணைக்கு
வரும்
இதுவரை
காத்திருந்தோம்.
கவலைதான் வந்தது!
இனியாவது வராதா
இன்னல் தீர்க்குமோர்
இனிய வரன்?
நேற்று கால்
தெரியுது.
இன்று வால் தெரியுது
எங்களுக்கு
சமாதானம்?
அன்று தொட்டு
இன்று வரை
அதற்காகத்தான் நாம்
நாமாக
வ(வி)ழி பார்த்து....

*சி. அருண், கிரான்.*

## கொடுமை

அன்பே என்னை
என்னுடன்
நினைக்க
முடிகிறது
என்னை உன்னுடன்
இணைக்க
முடியவில்லை
ஏன் இந்தக்
கொடுமை?

*நஸீஹா சம்சபாத்*
*ஏத்தாலை.*

## வாழப் பிறந்தோம்...!

ஓ கடலே
கட்டுமரமாய் கரையொதுங்கும்
பிய்ந்துபோன பிணங்களின்
கதறி அழுவும் கண்ணீர்த் துளிகளின்
கதையைக் கொஞ்சம் கேள்.....

உயிராய் நேசித்த உறவுகள்
தெருக்களில் கிழிஞ்சல்களாய் கிடக்குது
பார்....
பிள்ளைகளை இழந்த பெற்றவரும்
பெற்றவரை இழந்த பிஞ்சுகளும்
வெள்ளைச் சேலைக்குள் முடங்கிவிட்ட
வீதியோர விதவைகளின்
வேதனைக் கூடாரங்களைப் பார்.....
கரு முடிச்சுக்குள்
வாழ்ந்த சொந்தங்கள்
தெரு மூலைக்குள் புதைந்து கிடப்பதைப்
பார்....

வாரி வாரிக் கொடுத்த கடலே
மொத்தமாய் - எங்களை
வாரிக் கொண்டு பிரளயத்தின்
வாழ்க்கைக்கு
முற்றுப்புள்ளி வைத்துவிட்டாய்....

இருந்தும்
செத்துப் போன உடலின் இரத்தம் கூட
உப்புக் கலந்திருக்கும்
உன் நன்றிக்கு சாட்சிகளாய்
பூமித்தாயே....
மீண்டுமொரு அதிர்வு வேண்டாம்
உயிர்களை உறுஞ்சிக் கொண்ட - உன்
சுனாமிக்கும் கொஞ்சம் சொல்லிவிடு
நாங்களெல்லாம் வாழப் பிறந்துவிட்டோம்
- கொஞ்சம்
வாழ்ந்துதான் பார்க்கிறோமே...!!

*–குமாரசாமி செல்வகுமார்,*
*டயகம கிழக்கு.*

## இயற்கையின் சீற்றமே!

இயற்கையின் சீற்றமே
எரிமலையாய் ஏன் வெடித்தாய்
மனித விருட்சங்களை வேரோடு
ஏன் தகர்த்தாய்?
கடுகதியாய் நீயும்
உயிர்களை காவு கொண்டாய்
தண்ணீரால் இம்மண்ணை
கண்ணீரில் ஏன் விட்டாய்?
இன மத வேறுபாடின்றி
இன்னலுக்குள்
சுனாமி ஒன்றினாலே சுற்றி
வளைத்தாயோ
போரலையும் பேரலையும்
போதுமினி
மண்ணிற்கு
மீண்டுமொரு பேரலைகள்
பாருக்கு வேண்டாமே.

*–தெ.லோஜனா,*
*கொழும்பு – 06.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்


[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

"கவிதை என்பது வாழ்க்கை வாழ்க்கையே ஒரு கவிதை. இதன் அர்த்தம் கவிதை பற்றியதும், வாழ்க்கை பற்றியதுமான தரிசனத்தில் தங்கியுள்ளது..."

"கவிதையை அதன் ரிஷிமூலமான இசையிடம் மீண்டும் செல்ல விடுங்கள்... பண்பாட்டுத்தளமான செவிவழி மரபிற்கே கவிதை சென்றுவிட வேண்டும்....." என்று கூறும் கவிஞர் என்.சண்முகலிங்கன், 'இதயரஞ்சனி'யின் பண்பாட்டுக் கோலங்களாகவும், மெல்லிசைப் பாடல்களாகவும் வானலை, ஊடகம் மூலம் பல்லாயிரம்பேரைப் பரவசப்படுத்திய கலைஞர். இசைத் தமிழை சந்தன மேடையில் ஏற்றிக் குளிரும் நிலவினிலே மனங்களை உருகவைத்தவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர், என். சண்முகலிங்கனின் 'சந்தன மேடை' தொகுப்பிலிருந்து நான்கு கவிதைகள்.



### இன்னந் துயிலுதியோ!

விடிந்திடுமோ.....
எங்கள்
குடிசையிலும்
வெளிச்சம்
விழுந்திடுமோ....

குப்பி விளக்கினது
ஒளி தூர்ந்து போகிறதோ
தப்பிதமோ...
வரலாறு
தவறாகிப் போய்விடுமோ....
இன்னந் துயிலுதியோ....

உன் விளக்கைத் தூண்டுதற்கு
யாரை நம்பி நீ கிடந்தாய்
இன்னந் துயிலுதியோ....

நம்பிக்கை குறைவதற்கு
ஞாயமில்லை
நீ எழுந்தால்
சூரியனைக் கண்டிடலாம்
எழு!

### மழை வாழையல்லவோ!

ஏன் நின்றாய் சிலைபோல....
உன் கையில் புத்தகம் எங்கே!
பறித்ததா? எறிந்ததா?
பசியின் கொடுமையா?

பாணும் சம்பலும்
தினங்களுக்குச் சாரமும்...
கண்ணா
எல்லாம்
கருணையினால் அல்ல!

பள்ளம் நிரப்பவும்
பாத்திகள் செய்யவும்
உன்னையல்லால் வேறே யார் கதி
உன்
புத்தகத்தைப் பறிக்காமல்
அவர்
காசுப் புத்தகத்தில் கனம் ஏது?
தம்பி,
புத்தியாய் நடந்துகொள்!
புத்தகத்தைப் பற்றிக்கொள்!
மலைவாழையல்லவோ கல்வி

### பன்றிக் கெய்த குளமும் சித்திரைப் பௌர்ணமி நிலவும்

பாடுகள் தாண்டி நமது பயணம்
பன்றிக் கெய்த குளம் அடையும்

நீட்டு வழிக் களைப்பு
நிலவிலே குளிரும்
நீட்டி நிமிர்ந்து
நிலவிலே தெருவோரம்
மண்ணில் படுக்கையில் தான்
அந்த மழலை அழும்

'அப்பா... பூசா... அப்பா... பூசா...'
மந்திரமா.....
அருகில்
மூன்று வயதுக் குழந்தையுடன்
முப்பது வயது அம்மா.

மூன்று மாதக் குழந்தையாய்
இருக்கையில்
தொலைந்த அப்பாவை
தேடும் பயணம்....
இது அம்மா சொன்ன கதை.

சித்திரைப் பௌர்ணமி நிலவும் சுடும்
இந்தப் பயணங்கள் என்று முடியும்....

### கனவுகளில்லாமல் காவியமில்லை....

ஆனந்தமான அர்த்தங்கள் தேடி
அலைகின்ற பயணங்கள் தொடரும்....
ஆனாலும் வாழ்வின் அர்த்தங்கள்
யாரும்
அறியாத பொருளாகி மறையும்....


ஆயிரமாயிரம் ஆசை மலர்கள்
ஆத்ம பூங்காவினில் அரும்பும்....
அத்தனையும் கனியாவதுமில்லை....
அழுதும் பயனேதுமில்லை....

கனவுகளிங்கே கனிந்த போதும்
கவலைகள் முடிவதுமில்லை....
நினைவுகளோடிணை
நிழலெனுந்துயர்க்கு
நீள்துயில் ஒன்றே எல்லை...


கற்பனைச் சிறகுகள் முறிகின்றபோது
காவியம் முடிவினைக் காணும்
வெற்றிகள் தோல்விகள் ஒன்றெனக்
காணும்
தத்துவ ராகங்கள் பிறக்கும்.

ஆனாலும் வாழ்வின் அர்த்தங்கள் தேடி
அலையும் பயணங்கள் தொடரும்....
கனவுகளே.... வாழ்வின்
சிறகுகளே.....

## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : எஸ். சுவேந்திரன்.
வயது : 22
முகவரி : P.O.Box 40209, Doha, Qatar.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பத்திரிகை.



பெயர் : டி.எம். நிகால்
வயது : 23
முகவரி : 23, அய்யன் கோயில் வீதி, கல்முனை.
பொழுதுபோக்கு : கிரிக்கெட், பத்திரிகை, வானொலி.



பெயர் : எம்.எச். அன்வர்.
வயது : 23
முகவரி : பட்டாவத்தை, மடுல்சீமை (பதுளை வீதி).
பொழுதுபோக்கு : வானொலி, பத்திரிகை, கலைத்துறை.



பெயர் : நிஷாந்தினி.
வயது : 19
முகவரி : நெடுந்தீவு மேற்கு, 2ஆம் வட்டாரம்.
பொழுதுபோக்கு : வழமையானவை.

# குழந்தை இப்போ வேண்டாமா...?

கர்ப்பத்தைத் தடை செய்வதாகச் சொல்லப்படுகிற மாத்திரைகள் ஈஸ்ட்ரோஜென் மற்றும் பிரோஜஸ்ட்ரோன் என இரண்டு விதமான பெண் ஹார்மோன்களை உள்ளடக்கியது.



இவை இரண்டும் வேறு வேறு விகிதங்களில் கலக்கப்பட்டு, வெவ்வேறு பெயர்களில் கருத்தடை மாத்திரைகளாக விற்கப்படுகின்றன.

**இந்த ஹார்மோன்கள் என்ன செய்யும்?** உங்கள் உடலில் மாதந்தோறும் உருவாகும் சினை முட்டையை சினைக்க விடாமல் தடுக்கும். அதன் விளைவாக உங்கள் கர்ப்பம் தடைப்படும். இந்த மாத்திரை கருத்தரிப்பதிலிருந்துதான் உங்களைக் காப்பற்றுமே தவிர, பால் வினை நோய்களிலிருந்து ஒரு சதவிகிதம் கூடக் காப்பாற்றாது.

இம்மாத்திரைகளை நாள் தவறாமல் எடுத்துக்கொள்பவர்களுக்குக் கட்டாயம் நூறு சதவிகிதம் பலன் நிச்சயம். ஆனால் நாள் தவறி எடுத்துக்கொண்டாலோ, ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு நேரத்தில் உட்கொண்டாலோ பலன் கிடைக்காமல் போகலாம். கருத்தடை மாத்திரை சாப்பிட நீங்கள் தினசரி அலாரம் வைத்துக்கொண்டால்தான் அதன் பலனை அனுபவிக்க முடியும்.


**பக்க விளைவுகளை உண்டாக்குமா கருத்தடை மாத்திரை?**

நீண்ட நாட்களுக்குக் கர்ப்பத்தைத் தள்ளிப்போட நினைக்கிற பெண்களுக்கு இம்மாத்திரைகள் சரியான சாய்ஸ் என்பது மகப்பேறு மருத்துவர்களின் பரவலான அபிப்பிராயம்.

ஆனாலும் இது உண்டாக்குகின்ற பக்க விளைவுகளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டுமே?

கருத்தடை மாத்திரை உட்கொள்கின்ற பெண்கள் தவறான ஆண்களின் தொடர்பில் சிக்க வாய்ப்புகள் அதிகம் என்கிறது ஒரு விசித்திர ஆராய்ச்சி. கருத்தரிக்கப் போவதில்லை என்கிற தைரியத்தில் வாழ்க்கைத் துணை தேவை என்பதை மீறி, செக்ஸ் உறவுக்குத் துணை தேவை என்கிற எண்ணமே பிரதானமாக இருக்கும் என்பதால் மாத்திரை உட்கொள்கின்ற பெண்களுக்குத் தகாத உறவு உண்டாக வாய்ப்புகள் அதிகமாம். இது எப்படி இருக்கு?

ஏற்கனவே உடலெங்கும் தேவையற்ற ரோம வளர்ச்சியால் பாதிக்கப்பட்டிருப்பவரா நீங்கள்? அப்படியானால் இந்த மாத்திரைகளை உட்கொள்வதால்



ரோம வளர்ச்சி மேலும் அதிகரிக்கலாம். எனவே இப்படிப்பட்ட பெண்கள் மருத்துவரின் ஆலோசனைக்கேற்ப வேறு மாத்திரைகளை உட்கொள்ளலாம்.

கருத்தடை மாத்திரைகள் உட்கொள்வதால் விட்டமின் சி, பி12, மற்றும் துத்தநாகச் சத்துக்கள் உடலிலிருந்து உறிஞ்சப்பட்டு விடுமாம். அவற்றை ஈடுகட்ட தினசரி உணவில் நிறைய பழங்கள் மற்றும் காய்கறிகள் உட்கொள்ள வேண்டியிருக்கும். அப்படி முடியாதவர்கள், விட்டமின் மாத்திரைகளையாவது கட்டாயம் உட்கொள்ள வேண்டும்.

செக்ஸ் உறவு வேண்டும். ஆனால் கர்ப்பம் கூடாது என்பதற்காகத்தானே இந்த மாத்திரைகளெல்லாம்! ஆனால் பல பெண்களுக்கு இம்மாத்திரைகள் சாப்பிடுவதால் செக்ஸ் உறவில் நாட்டம் குறைகிறதாம். அப்படி உணர்கிற பெண்கள், ஈஸ்ட்ரோஜென் அதிகமுள்ள மாத்திரையாகப் பார்த்துச் சாப்பிடுவது நல்லது.

பைசா பெறாத விஷயத்துக்கெல்லாம் எரிச்சல், அர்த்தமில்லாமல் கோபம் போன்றவை கூட இம்மாத்திரைகளின் பக்க விளைவுகளாக இருக்கலாம். கண் பார்வையில் கோளாறு உண்டாவதும் கூட இம் மாத்திரை உட்கொள்கின்ற சிலர் சந்திக்கின்ற பிரச்சினையே!

**மாத்திரையை எப்படித் தேர்ந்தெடுப்பது?**

உங்கள் உடலில் உள்ள கோளாறுகளை மருத்துவரிடம் மறைக்காமல் சொல்ல வேண்டும். அவர் அவற்றுக்கேற்ப சரியான மாத்திரையை உங்களுக்குப் பரிந்துரைப்பார். மாத்திரை உட்கொள்ள ஆரம்பித்த முதல் சில மாதங்களில் சில பக்க விளைவுகள் இருப்பது சகஜம். பிறகு அவை மறைய வேண்டும். அவை தொடர்கிற பட்சத்தில் குறைந்த டோஸ் கொண்ட மருந்துகளை உட்கொள்ளலாம்.

கருத்தடை மாத்திரை சாப்பிடுகிறவர்களுக்கு உடல் எடை பெருத்துவிடும் என்பது தவறான நம்பிக்கை. இது பசியைத் தூண்டும் என்பதால் கொழுப்பு தவிர்த்து, சரி விகித உணவை உட்கொள்ள வேண்டியது மிக முக்கியம்.

கருத்தடை மாத்திரை உட்கொள்கின்ற பெண்களுக்கு இடுப்பெலும்பு தொடர்பான தொற்று நோய் வர வாய்ப்பில்லையாம்.

சினைப்பையில் புற்றுநோய் உண்டாவதற்கான அபாயத்தையும் இம்மாத்திரைகள் குறைக்கிறதாம். மாத்திரைகளை நிறுத்திய பிறகும் பல வருடங்கள் இந்தப் பாதுகாப்புத் தொடருமாம்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* —ஷோபா—

## மஸ்றூம் றைஸ்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| பசுமதி அரிசி | - 1 சுண்டு. |
| நெய் | - 3 மே.க. |
| மிளகு | - 10. |
| கறுவா | - 4 துண்டு. |
| கராம்பு | - 10. |
| ஏலம் | - 10. |
| பம்பாய் வெங்காயம் | - 1. |
| போஞ்சி | - 50 கிறாம். |
| கரட் | - 50 கிறாம். |
| கோவா | - 50 கிறாம். |
| காளான் (மஸ்றூம்) | - 50 கிறாம். |

**செய்முறை:**

வெங்காயம், கரட், கோவா, போஞ்சி, காளான் என்பவற்றைத் துப்புரவு செய்து தனித்தனியாக அளவான சிறு துண்டுகளாக வெட்டி வைக்குக.

தாச்சியில் நெய்யைவிட்டு உருகியபின், அதனுள் மிளகு, கறுவா, கராம்பு, ஏலம் என்பவற்றையிட்டுப் பொரியவிடவும். அவை பொரிந்துவரும்போது வெங்காயம், கரட், போஞ்சி என்பவற்றையிட்டு வதங்க விடவும்.

பின்பு அரிசியைக் கழுவி வதங்கிய கலவையிலிட்டு நன்கு கிளறிச் சேர்த்துக்கொண்டபின் 2 தம்ளர் தண்ணீர்விட்டு கோவா, காளான், அளவிற்கு உப்பு என்பவற்றைச் சேர்த்து மூடி அவியவிட்டு, அரிசி அவிந்துவரும்போது இறக்கி வாயகன்ற பாத்திரத்தில் கொட்டிப் பரவி விடவும்.




# பெருத்த இடுப்பு - இருதய நோயின் அறிகுறி

நீங்கள் டாக்டர் சொல்வதைக் கேட்கவில்லை என்றால் டெய்லர் சொல்வதையாவது கேளுங்கள். மனிதர்களின் இடுப்பு அளவு 39 அங்குலத்திற்கு அதிகமாகப் போனால் இருதய நோய் ஆபத்து இருக்கிறது என்று அர்த்தம் என்று மருத்துவ நிபுணர்கள் சொல்கிறார்கள். 39 அங்குலம் மற்றும் அதற்கு அதிகமான நபர்களுக்கு இன்சுலின் எதிர்ப்புத் தன்மை விரும்பத்தகாத அளவுக்கு உருவெடுக்கும். குண்டான மனிதர்களுக் குத்தான் இம்மாதிரியாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஒல்லியான மனிதர்களுக்கும் கூட இப்பிரச்சினை ஏற்படலாம்.

நமது செல்களுக்குத் தேவையான ஆற்றல் அனைத்தும் சர்க்கரை மூலக்கூறுகள் எனப்படும் குளுக்கோசில் இருந்துதான் கிடைக்கிறது. இந்தக் குளுக்கோஸ் தேவையான அளவுக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமெனில் இன்சுலின் செயற்பாடு சரியாக இருக்க வேண்டும். அதன்மூலம் இரத்தத்தில் சேரும் குளுக்கோஸ் அளவு கட்டுப்படுத்தப்பட்டு செல்கள் சீராக இயங்க இயலும். ஆனால் சில சமயம் செல்களில் ஏற்படும் பிரச்சினை காரணமாக இன்சுலின் சுரப்பு பாதிக்கப்படுகிறது. இது மாதிரி நேரத்தில் இரத்தத்தில் குளுக்கோஸ் அளவு அதிகரித்து நீரிழிவு நோய் உண்டாகும். மேலே குறிப்பிட்ட தற்கு அதிகமாக இடுப்பு அளவு இருக்கும் பட்சத்தில் 50 சதவீதப் பேருக்கு நீரிழிவு நோய் சோதனைகள் பாசிட்டிவ்வாக இருக்க வாய்ப்பு உண்டு.

இன்சுலின் சுரப்பு குறைபாடு, அதைச் செல்கள் சரிவரப் பயன்படுத்திக்கொள்ளாத தன்மை ஆகியவை இருந்தால் அங்கு உண்மையான சிக்கல் இருதயத்துக்குத்தான். இன்சுலின் விஷயத்தில் ஏற்படும் இந்த எதிர்மறை விளைவை மெட்டாலிபோலிக் சின்ட்ரோம் என்று சொல்கிறோம். இம்மாதிரி நபர்களுக்கு டிரைகிளி சரைடுகள் என்ற ஆபத்தான கொழுப்பு அதிகமாகவும், எச்.டி.எல். என்ற நல்ல கொழுப்பு



குறைவாகவும் காணப்படும். அதே சமயம் எல்.டி.எல். எனப்படும் கெட்ட கொழுப்பும் அதிகமாக இருக்கும்.

ஆக, இடுப்பு அளவு பெருத்தால் அது நீரிழிவுக்கு மட்டுமல்ல, இருதய நோய்களுக்கும் அறிகுறியாக அமையும் என்பது குறிப்பிடத் தக்கது.

# ஊடல் வேண்டுமா?

கணவன் - மனைவிக்கு இடையே ஊடல் உருவாகலாம். அது ஆரோக்கியமானதாக ஒரு வரம்பிற்கு உட்பட்டு, அடுத்த நெருக்கத்துக்கு வழிகோலுவதாக இருந்தால் தப்பில்லை. அதனால் வாழ்வின் சுவையும் கூடும். ஆனால் சில நேரங்களில் சிறிய கருத்து வேறுபாடுகளும் பெரும் சர்ச்சைக்குக் காரணமாகி விடுவதோடு தீராத கசப்புணர்வையும் வளர்த்து வீடுகின்றன.

எந்தக் குடும்பத்திலும் கருத்து வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிரந்தரமாக நிலவ வேண்டுமென்றால் மனம் திறந்து





பேசக்கூடிய சூழ்நிலையும், கருத்து வேறுபாடுகளை நல்ல ஆரோக்கியமான வழிகளில் தீர்த்துக் கொள்ளும் மனப் பக்குவமும் இருக்க வேண்டும்.

மனதில் வைக்காமல் எதையும் கொட்டிவிடுவேன் என்று சிலர் தன்னிலை விளக்கம் அளிக்கிறார்கள். இவ்விதம் நடந்துகொள்வது மனித இயல்புதான் என்றாலும், அதனால் அடுத்தவர் காயப்படாமல் இருக்க வேண்டியது மிகவும் முக்கியம்.

ஆக, எந்தவொரு முடிவையும் காரண, காரியங்களின் அடிப்படையில் ஆராய்ந்து எடுத்தால் பிரச்சினை எழாது. அந்த மனப்பான்மை இருவரிடையே உள்ள பரஸ்பர நல்லெண்ணம், உறவு அடிப்படையில்தான் அமைகிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்து வாழ்க்கையை வளமிக்கதாக அமையுங்கள். உங்கள் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்.

# ஒரு தாய் மகள் 28

சென்ற வாரம்

பிராட், க்ளீவ்லாந்துக்குப் போகவில்லை என்பதும் தன்னை ஏமாற்றிவிட்டான் என்பதும் பேஜுக்கு ஆஸ்பத்திரியில் வைத்தே தெரிய வருகிறது. வீட்டிற்குச் சென்றதும் இருவருக்குமிடையே இது பற்றிய வாக்குவாதம் நடக்கிறது.

அவனுக்குத் தெரிந்துவிட்டது. அவனுக்குத் தெரியவேண்டிய அவசியமே இல்லை."

"அவருக்குத் தெரிய வேண்டாம். எனக்கு? நீங்கள் எங்கே போகிறீர்கள்? என்ன செய்கிறீர்கள்? என்று எனக்குத் தெரிய வேண்டாமா? மூளை கெட்ட முண்டமாக இத்தனை நாளும் நான் இருந்து வந்திருப்பது இப்போதல்லவா தெரிகிறது? எத்தனை தடவை இதுபோல நீங்கள் செய்திருக்கிறீர்களோ, யார் கண்டது?" என்றாள் பேஜ்". அவன் எங்கே போயிருந்தான் என்று அவளுக்குத் தெரியவில்லை. ஆனால் க்ளீவ்லந்துக்குப் போகவில்லை என்பது மட்டும் நிச்சயமாகத் தெரிந்தது.

பிராடு தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டான். எதையும் ஒப்புக்கொள்ள அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனால், வேறு வழியும் தெரியவில்லை.

"சரி, சரி, இப்போது அதல்ல பிரச்சினை" என்றான்.

"ஏன் பிரச்சினை இல்லை? இப்போது அதுதான் பிரச்சினை. அது ஒன்றுதான் பிரச்சினை. இந்த சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் நீங்கள் எங்கேயோ ஊர் மேய்ந்துவிட்டு வந்திருக்கிறீர்கள். எங்கே, யாருடன் சுற்றினீர்கள் என்பதைத் தெரிந்துகொள்ள எனக்கு உரிமை உண்டு. நீங்கள் விளையாடுவது என் வாழ்க்கையோடு! அதை மறக்காதீர்கள்! இஷ்டப்படி வெளியே ஜாலியாய்ச் சுற்றுவது நடுநடுவே இங்கே எட்டிப் பார்ப்பது என்று வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உண்டா இல்லையா

"பேசியே தீர வேண்டும். உங்களுடன் நான் கண்ணாமூச்சி விளையாடத் தயாராயில்லை, யார் அவள்?"

"புண்ணியமாய்ப் போகட்டும், பேஜ். இப்போது ஏன் அதெல்லாம் பேச வேண்டும்?"

"ஏனென்றால், இதெல்லாம் ஒத்திப் போடக்கூடிய விஷயமல்ல!" என்றாள் பேஜ். "விவகாரத்தை ஆரம்பித்தவர் நீங்கள். ஆகவே என்ன நடக்கிறது என்பதை நான் தெரிந்துகொண்டாக வேண்டும். சொல்லுங்கள். சீரியஸான விவகாரமா? ரொம்ப நாளாக நடந்துகொண்டிருக்கிறதா? எப்போது? ஏன்?" துயரத்தினால் அவள் குரல் கிசுகிசுப்பாக ஒலித்தது. அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள். "என்ன நேர்ந்தது? உங்கள் ரகசிய நடவடிக்கை ஏன் எனக்குத் தெரியாமலே போயிற்று?"

கண்ணிருந்தும் குருடியாக இருந்து விட்டோமே என்ற அவலம் அவள் நெஞ்சைப் பிழிந்தது. 'எப்போது எந்த இடத்தில் கோட்டை விட்டோம்? எதைக் காணத் தவறி விட்டோம்?' யோசித்து யோசித்துப் பார்த்தாள். அவன் மீது சந்தேகப்படும்படியாக எந்த விஷயமும் அவளுக்கு ஞாபகம் வரவில்லை.

பிராடு சங்கடத்துடன் அவளை வெறித்துப் பார்த்தான். பேஜுடன் சண்டை போடுவது என்றைக்குமே அவனுக்குப் பிடிக்காது. இப்போது அவளுடன் பேசிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் அவனுக்கு வெறுப்பாக இருந்தது. ஆனால் இனிமேல் தவிர்ப்பதோ தள்ளிப் போடுவதோ முடியாத காரியம் என்று அவனுக்குப் புரிந்தது. இதுவும் நல்லதற்குத்தான். என்றாவது ஒருநாள் அவள் தெரிந்துகொள்ளத்தான் போகிறாள். அது இன்றைக்குத் தெரிந்து விட்டுப் போகட்டும்...

தொண்டையைச் செருமிக் கொண்டான்.

"உன்னிடம் சொல்லலாமென்று கொஞ்ச நாள் முன்பு நினைத்தேன் பேஜ். ஆனால்... ஆனால்.... அது தொடராது, நீடிக்காது, உன்னிடம் சொல்ல வேண்டிய தேவையே ஏற்படாது என்று தோன்றியதால் சொல்லவில்லை...."

"அப்படியானால்.... சீரியஸா?"

வெகு நேரத்துக்கு அவன் பதில் கூறவில்லை. பிறகு நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவன் கண்களைப் பார்த்தபோது அவள் இதயத் துடிப்பு நின்று விட்டது. இது தற்செயலாக ஏற்பட்ட தற்காலிகமான சபலம் அல்ல என்று அவளுக்குப் புரிந்தது. இது சீரியஸான உறவு...

இனம் தெரியாத பீதியொன்று அவள் வயிற்றைக் கலக்கியது. ஓசைப் படாமல், எந்த முன்னறிவிப்பும் இல்லாமல், அவளுடைய மண வாழ்க்கை மடேலென்று முறிந்து விட்டாற்போல இருந்தது.

"அப்புறம்?" என்றாள். அவள் குரலும் கரகரவென்று உடைந்து விட்டது. "சொல்லுங்கள். அவ்வளவு சீரியஸான உறவா என்று கேட்கிறேனே, சொல்லுங்கள்"

"இதுவரை இல்லை... இப்போது சீரியஸாகி விடும் போல இருக்கிறது" என்றபோது அவன் பேச்சில் குழப்பம் கூத்தாடியது.

"எனக்கு எதுவும் புரியவில்லை பேஜ். அதனால் தான் உன்னிடம் சொல்லாமல் இருந்தேன்."

"எத்தனை நாளாக இது!" என்றாள் பேஜ். எத்தனை நாளாக நாம் குருடியாக இருந் திருக்கிறோம், எத்தனை நாளாக நாம் முட்டாளாக்கப்பட்டு வந்திருக்கிறோம் என்பதை அறிந்துகொள்ளும் வெறி அவளுக்கு ஏற்பட்டிருந்தது. கண்ணீரை விழுங்கிக்கொண்டு அவன் பதிலுக்குக் காத்திருந்தாள்.

"எட்டு மாதமாய்" என்றான் பிராடு. "அவள் பெயர் ஸ்டிபானி. என் கம்பெனியில் விளம்பரப் பிரிவில் வேலை பார்க்கிறாள். ஒரு வாடிக்கையாளருக்குப் பரிசு கொடுப்பதற்காக நானும் அவளும் சேர்ந்து நியூயார்க்கிற்குப் போனோம்..."



உண்மையைச் சொல்லுங்கள் பிராடு, உண்மையைச் சொல்லுங்கள்!" சினத்தினால் அவள் தேகம் தடதடவென்று ஆடியது.

பிராடுக்குக் குற்ற உணர்ச்சி குறைந்து கோபம் மேலிட்டது.

"தெரிந்து கொண்டாயிற்று அல்லவா? அப்புறம் என்ன? என் வாயால் எதற்காகச் சொல்ல வேண்டும்?" என்று அவன் சொன்னதைக் கேட்டதும்

பேஜின் இதயம் இரண்டாக விண்டது. ஒரே ஞாயிற்றுக்கிழமைக்குள் எத்தனை பூகம்பங்களைத்தான் இந்த உள்ளம் தாங்கிக் கொள்ளும்! அவன் சொன்னதனைத்தையும் அவன் முழு மூச்சாக மறுக்க வேண்டும், எதுவுமே உண்மையில்லை என்று சொல்ல வேண்டும் என அவள் ஏங்கினாள். அப்படியல்ல, அவள் அச்சமெல்லாம் உண்மைதான் என்று இப்போது புலப்பட்டு விட்டது.

"இந்தத் துரோகம் இப்போதுதான் ஆரம்பித்ததா அல்லது ரொம்ப நாளாக நடக்கிறதா?" என்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டாள்.

ஆனால் பதில் கூற அவன் விரும்பவில்லை.

"இந்த விஷயத்தைப் பற்றி நான் உன்னுடன் பேசப் போவதில்லை, பேஜ்" என்றான்.



எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்


"எப்படி இருப்பாள் அந்தப் பெண்?" என்றாள் பேஜ். அப்படிக் கேட்பதே அவளுக்குக் குமட்டியது. ஆனால் சகலத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும்... அதுவும் இப்போதே தெரிந்துகொள்ள வேண்டும். அவள் துடித்தாள்.

'எட்டு மாதமாக! எட்டு மாதமாக! கடவுளே! எப்படிப்பட்ட முட்டாளாக நான் இருந்து விட்டேன்!'

(தாய் தொடர்வாள்.....)

# 2ஆவது அருளப்பர் சின்னப்பர்



ரோமன் கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் நீண்ட காலம் பாப்பரசராக இருந்த மூன்றாமவர் போப் 2ஆவது ஜோன் போல். 1920 மே 18இல் போலந்து நாட்டில் வாதோவிஸ் என்ற இடத்தில் பிறந்த இவரது இயற்பெயர் கரோல் ஜோசப் வோஜிலா.

இத்தாலியர் அல்லாத பாப்பரசரான இவர் 1978 ஒக்டோபர் 16 இல் பாப்பரசராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதுவரை 104 முறை வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டு 129 நாடுகளுக்குச் சென்றிருக்கிறார். இந்தப் பயணங்களில் 40 கோடி மக்கள் இவரைத் தரிசித்துள்ளனர்.

500 பேரை கார்டினல்களாகவும் பிஷப்புகளாகவும் நியமித்தார். அன்னை தெரேசா உட்பட 482 பேருக்கு 'புனிதர்' பட்டம் வழங்க நடவடிக்கை எடுத்தார். கிறிஸ்தவ சமயத்தின் 2 ஆயிரம் ஆண்டுகால வரலாற்றில் இழைக்கப்பட்ட பாவங்களுக்காகவும், நிகழ்ந்த தவறுகளுக்காகவும் புத்தாயிரம் ஆண்டின் துவக்கத்தில் மன்னிப்புக் கோரியவர் இவர்.

அமைதியையும் அன்பையும் உலக மக்களிடையே பரப்பி எளிமையின் சின்னமாக விளங்கியவர். தனது தார்மீக வலிமையைக் கடைசிவரை இழக்காத மாபெரும் புனித நேயர்தான் 'போப் 2ஆவது ஜோன் போல்'.

புதிய பாப்பரசர் தேர்ந்தெடுக்கப்பட்டதும் வாக்குச் சீட்டுக்கள், அது தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் வைக்கோலுடன் சேர்த்து உடனடியாக எரிக்கப்படும். அதன் புகை வெள்ளை நிறத்தில் வெளிவரும்போது, புதிய போப் தேர்ந்தெடுக்கப்பட்ட தகவலை மக்கள் அறிந்து கொள்வார்கள்.

# 16ஆவது ஆசீர்வாதப்பர்



பரிசுத்த பாப்பரசர் 2ஆம் அருளப்பர் சின்னப்பர் இறையடி சேர்ந்த பின், புதிய பாப்பரசரை அதாவது 265வது பாப்பரசரைத் தெரிவுசெய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதில் கர்தினால்கள் ஒன்றுகூடித் தெரிவு செய்யும் குழுவாக இருப்பர். அவர்களை 'கொன்கிளேவ்' கூட்டம் என்பர். இவர்கள் கூடி முடிவெடுக்கும் இடத்தை 'சிஸ்டைன்' என்பர்.

பாப்பரசரின் மறைவுக்குப் பின் அவர் அணிந்திருந்த மோதிரமும், அதன் முத்திரையும் அழிக்கப்பட்டன. இதற்கு இரு காரணங்கள் உண்டு. கத்தோலிக்க தேவாலயம் மீதான பழைய பாப்பரசரின் ஆதிக்கம் முடிவடைந்துவிட்டதைக் குறிப்பதும், அவரின் மறைவுக்குப்பின் அவரது முத்திரை தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதுமே ஆகும். தற்போது வத்திக்கானில் நிர்வாக விடயங்களுக்குப் பொறுப்பாக உள்ள கர்தினல் கமெர்லங்கோ அவர்களாலேயே அந்த மோதிரம் அழிக்கப்பட்டது. அதன் பின்னரே 'கொன்கிளேவ்' கூடியது. புதிதாகத் தெரிவுசெய்யப்படும் பாப்பரசருக்குத் தங்க மோதிரம் ஒன்று அணிவிக்கப்படுவது வழக்கம். அந்த வகையில் புதிதாதத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் 16ஆவது ஆசீர்வாதப்பருக்குத் தயாரிக்கப்படும் மோதிரத்தில் முதலாவது பாப்பரசரான சென். பீற்றரின் உருவமும் இலட்சனையும் பொறிக்கப்பட்டுள்ளன.

புதிய பாப்பரசராக 16ஆவது ஆசீர்வாதப்பர் தெரிவுசெய்யப்பட்டதும், சென். பீற்றர்ஸ் பசிலிக்காவின் பல்கனியில் தோன்றிய அவர், அங்கு திரண்டிருந்த பெருந்திரளான மக்கள் முன் பேசினார்.

உலகை தனக்காகப் பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக்கொண்டதோடு, உங்களுடைய பிரார்த்தனைகளுக்கு என்னை ஒப்புவிக்கிறேன் எனத் தெரிவித்தார். பின்னர் தனது ஆசிகளை தெரிவித்த அவர், தன்னை இறைவனின் திராட்சைத் தோட்டத்தின் சாதாரண பணியாளன் என்றும், மறைந்த பாப்பரசரைத் தொடர்ந்து உங்களுக்காகப் பணியாற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்டவன் என்றும் கூறினார்.

இதுவரை பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் எட்டாவது ஜேர்மனியர் இவர் என்பது குறிப்பிடத் தக்கது.

மேற்படி சம்பிரதாயங்களுக்குப் பிறகு 18-04-2005ஆம் திகதி ஆறு கண்டங்களைச் சேர்ந்த 52 நாடுகளின் 115 கர்தினால்கள் கூடிய கென்கிளேவ் புதிய பாப்பரசரைத் தெரிவு செய்யும்.

தேர்தல் தொடங்கியதும் கர்தினால்கள் புதிய பாப்பரசரின் பெயரை வாக்குச் சீட்டில் எழுதிப்போட வேண்டும். பாப்பரசராகத் தெரிவாக ஒருவர் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறவேண்டும். ஏகபோகமாகவும் தெரிவு செய்யலாம்.

# "ஏற்கனவே புலிகளால் எமக்கு அச்சுறுத்தல் இருந்தது"



திருமதி சரளா ஜெயரட்ணம்

**ப**யங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரியான இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணம் புலிகளால் கடத்தப்பட்டுள்ளதாக அவரது மனைவி திருமதி சரளா ஆணித்தரமாகக் கூறுகிறார். அவரை மீட்டுத் தருமாறு இலங்கை அரசாங்கத்திற்கும் காவல் துறைக்கும் மனுக்களை அனுப்பி வைத்துள்ள அவர், முக்கிய வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் குறிப்பாக நோர்வேக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும், மனித உரிமை ஆணைக்குழுவிற்கும் வேண்டுகோள்களைச் சமர்ப்பித்துள்ளார். இவை தவிரவும், தனது இரு மகன்களினதும், எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டு மனிதாபிமான ரீதியில் தனது கணவனை விடுவிக்குமாறு புலிகளுக்கும் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணத்தின் கடத்தல் தொடர்பாக ஊடகங்கள் பலவாறான செய்திகளை வெளியிட்டு வருகின்றன. அவற்றில் உண்மைக்குப் புறம்பான - உண்மையை மறைக்கின்ற விதத்தில் சம்பவம் திரிபுபடுத்தப்படுவதை அவதானிக்க முடிகிறது. ஆகவே, 'முரசு' சார்பில் திருமதி சரளா அவர்களை சம்பவம் குறித்துக் கேட்டபோது.....

***கே :- ஜெயரட்ணத்தைக் கடத்தியவராகக் கருதப்படும் மனோவைப் பற்றிக் கூறமுடியுமா ?***

ப :- வவுனியாவில் தேவாலயமொன்றிற்கான காணி விவகாரம் தொடர்பில் 'புளொட்' அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டபோதே, தன்னை புளொட் உறுப்பினரெனவும், தனது பெயர் மனோ என்றும் அறிமுகமாகினார். அதன் பின்னர், புலிகளின் பிடியிலிருந்து தப்பி, கொழும்புக்கு ஓடி வந்ததாகவும், ஜெயரட்ணம் அவர்களின் உதவியை நாடி நிற்பதாகவும் தெரிவித்தார்.

***கே :- இப்படியாகத் தொடர்புக்கு வந்தவருடன் விருந்தொன்றுக்குப் போகுமளவுக்கு எப்படி நெருக்கம் ஏற்பட்டது?***

ப :- நீண்ட நாட்களாக, சுமார் 2 வருடங்களாக அவர் கணவருடன் தொடர்பில் இருந்துள்ளார். கடைசி நான்கு, ஐந்து மாதங்களுக்குமுன் வீட்டுக்கு வந்தார். அந்தக் காலப்பகுதியில் கணவனின் உடைகளைக் கூட மாற்றி உடுக்கவும், உணவு வேளையில் ஒரே மேசையிலிருந்து சாப்பிடவும்கூடச் செய்தார். எனது கணவர் 'புத்தா' என்று அவரை அன்பாக அழைக்கவும் செய்தார். இதுவே அவர் மீது அதீத நம்பிக்கை வைக்கக் காரணமாகிவிட்டது.

**கே :- சம்பவத்தன்று உண்மையில் என்ன நடந்தது?**

ப :- அன்றிரவு வீட்டுக்கு வந்த மனோ, தனது நண்பரொருவர் லண்டனிலிருந்து கல்கிசையில் உள்ள ஆடம்பர விடுதி ஒன்றுக்கு வந்திருப்பதாகவும் அவருடன் இரவுச் சாப்பாடொன்றுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் கூறினார். ஏற்கனவே புலிகளின் அச்சுறுத்தல் உள்ளபடியினால் எங்களது வாழ்க்கை ஒரு குறுகிய வட்டத்துக்குள்ளேயே இருந்தாலும், இவரின் அழைப்பின் பேரில் சிறிய சந்தோசத்திற்காகச் சென்றிருந்தோம். எனது கணவருக்கு வாகனமில்லாதபடியினால் மனோ ஏற்பாடு செய்திருந்த டொல்பின் ரக வேனில் எங்களை வீட்டுக்குச் செல்லுமாறும் தான் நேரடியாக ஸ்டேசனுக்குச் செல்வதாகவும் கணவர் தெரிவித்தார். நம்பிக்கைக் குரியவராக மனோ இருந்ததால் கணவருடன் கூடவே செல்லுமாறு சொல்லிவிட்டு, நானும் பிள்ளைகளும் வீட்டுக்குச் சென்றுவிட்டோம். அடுத்த நாள் காலையில் அலுவலகத்திற்குத் தொடர்பு கொண்டு கணவரை விசாரித்த போது அவர் அங்கில்லை என்று தெரியவந்தது. நான் மனோவின் கையடைக்கத் தொலைபேசிக்கு தொடர்பு கொண்டேன். தொடர்பு கிடைக்கவில்லை. பின்னர்தான் நிலைமை புரிந்தது.

***கே :- இக் கடத்தல் தொடர்பாக யார் யாரிடம் முறைப்பாடுகள் செய்துள்ளீர்கள்? ஒரு அரசாங்க அதிகாரி என்ற வகையில் குறிப்பாக அரசாங்கத் தரப்பிலிருந்து எவ்வகையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. உங்களுக்கு என்ன பதில் வழங்கப்பட்டிருக்கிறது?***

ப :- நான் காவல் துறையிடமும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் ஆகிய இடங்களிலும் முறைப்பாடு செய்துள்ளேன். அரசாங்கத் தரப்பைப் பொறுத்தவரையில் விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள். எனக்கு அதில் திருப்தியில்லை. ஏனென்றால், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் எனது கணவர் கடத்தப்பட்டிருப்பதால் அரசாங்கத் தரப்பு எதையும் செய்ய முடியாத நிலையில் இருப்பதை உணர்கிறேன். எனவே இவ் விடயத்தில் சர்வதேச நாடுகளினதும் அமைப்புகளினதும் உதவியை நாடி நிற்கிறேன்.

***கே :- புலிகள்தான் உங்கள் கணவரைக் கடத்தியுள்ளார்கள் என்பதை இவ்வளவு உறுதியாகக் கூறுவதற்கு வேறு ஏதாவது விசேட காரணங்கள் உள்ளனவா?***

ப :- உள்ளன. கடந்த இரு வருடங்களுக்கு முன்பிருந்தே புலிகள் தொலைபேசி வாயிலாக எம்மை அச்சுறுத்தி வந்தார்கள். அப்போதெல்லாம் எனது கணவரை வேலையைக் கைவிட்டு விலத்திச் செல்லுமாறும், முடிந்தால் நாட்டைவிட்டு ஓடி தப்புமாறும் எச்சரித்தார்கள். மிக அண்மைக்காலத்தில் கொழும்பில் என்னைச் சந்தித்த புலி உறுப்பினரொருவர் இதே மாதிரியான அச்சுறுத்தலையே விடுத்தார். இவை குறித்து நான் எனது கணவருக்கும், கணவருடன் நெருக்கமான பொலிஸ் அதிகாரிகளுக்கும் முறைப்பாடு செய்திருந்தேன். தவிரவும், எனது கணவரைக் கடத்திய விதமும் மனோ என்பவர் புளொட் அமைப்பிலிருந்து விலகி புலிகளின் கையாளாக இருந்துள்ளார் என்பதையும், அவர் குறித்து தற்போது கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆகவே புலிகளைத் தவிர நான் அறிய எங்களுக்கு யாரும் எதிரிகள் இல்லை என்பதை என்னால் உறுதியாகச் சொல்லமுடியும்.



***கே :- காவல்துறை சார்ந்த அதிகாரி என்பதால் விசேடமாக காவல் துறையினரிடமிருந்து உங்களுக்கு ஏதாவது தகவல்கள் கிடைத்துள்ளனவா?***

ப :- கிடைத்தன. நாங்கள் உணவருந்திய விடுதியில் பொருத்தப்பட்டிருக்கும் பாதுகாப்புப் புகைப்படக் கருவியில் போதையில் இருக்கும் ஒருவரை இரண்டுபேர் கைத்தாங்கலாக வாகனமொன்றுக்குள் ஏற்றுவதைப் போல் படம் பிடிக்கப்பட்டுள்ளது என்பதை உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் எனக்குக் காண்பித்தார். அது விசாரணைகளுக்கு உதவும் என்று நம்பிக்கை தெரிவித்தார். தவிரவும் தந்தையைக் காணாமல் தவிக்கும் என் பிள்ளைகளுக்கும் எனக்கும் காவல்துறையின் அனுகுமுறைகள் ஆறுதலாக உள்ளன.

***கே :- புலிகளால் கடத்தப்பட்ட உங்கள் கணவரின் விடுதலை குறித்து நேரடியாக புலிகளிடம் வேண்டுகோள்களை விடுத்திருக்கிறீர்களா?***



ப :- விடுத்திருக்கிறேன். எனது கணவர் கடமையின் நிமித்தம் நேர்மையாக நடந்து கொண்டுள்ளார் என்பதை புலிகள் புரிந்துகொள்ள வேண்டும். அதே போல் எங்களின் இரண்டு பிள்ளைகள், மூத்த மகன் - போல் 7 வயது, இரண்டாவது மகன் - லூக் 5 வயது, இவ்விருவரின் எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டு எனது கணவரை விடுவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தவிரவும் எனது கணவர் சிறுநீரகக் கோளாறு, இரத்த அழுத்தம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். நோய்வாய்ப்பட்ட நிலையில் மருத்துவப் பரிசோதனைகளுக்கும் உட்பட வேண்டி உள்ளதால் மனிதாபிமான அடிப்படையில் அவரை விடுதலை செய்து எங்களிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்..... என்று கூறி அழுத திருமதி சரளாவிடம் மேலும் கேள்விகளைக் கேட்க முடியாது நாம் விடைபெற்றுக் கொண்டோம்.

# உரிமை மடல்... 7

*மலை தடை கடந்து*
*புயலிடை எழுந்து*
*உங்களுக்காக*
*ஓர் உரிமை மடல்!*

*உண்மை எதுவென உரத்த குரலெடுத்து*
*உன்னத வழிகாட்டி எழுதும்*
*உரிமை மடல்!*

*இது*
*செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா*
*அவர்கள்*
*இடர் படும் எம் தேசத்து மக்களுக்காக எழுதும்*
*தொடர் மடல்!...*

## அன்பான எம் தேசத்து மக்களே!

உங்களுக்கு எனது வணக்கம்!....

எமது கட்சியின் பிரதான ஆயுதம் என்பது நாம் கொண்டிருக்கும் கருத்துக்கள் மட்டுமே! எமது உரிமைப் போராட்டத்தில் பிரதான பாத்திரம் மக்களாகிய நீங்கள் மட்டும்தான்!

மாற்றுக் கருத்தும் மறுப்புச் சிந்தனையும் ஜனநாயகப் பண்புகளாக ஏற்றுக்கொள்ளப்படாமல்.... மாற்றுக் கருத்துக்கள் மீது மறுபடி மறுபடி மரண அச்சுறுத்தல் விட்டுக்கொண்டிருக்கும் ஒரு அபாயகரமான சூழலில்....

மக்களாகிய உங்களோடு மறுபடியும் ஒரு உரிமை மடல் ஊடாக நான் மனம் திறந்து பேச வருகின்றேன்!

இன்று மக்களாகிய நீங்கள் தேடிக்கொண்டிருந்த உரிமையை இன்னமும் தூரத்தள்ளிவிட்டு, இருந்த நிம்மதியையும் தொலைத்துவிட்டு துன்பங்களோடும் துயரங்களோடும் வாழ்ந்து கொண்டிருப்பதற்கான காரணம் என்ன?

இதைத் தான் நீங்கள் சிந்திக்கவேண்டும்!

இந்த இடத்தில் நான் உங்களோடு பேச வேண்டிய விடயங்கள் இன்னமும் நிறையவே உண்டு! ஆனாலும் தேசத்தின் விடியலுக்காக நாம் தீ மிதித்து நடந்து வந்த பாதையினை மறுபடியும் ஒரு முறை திரும்பிப் பார்க்க வேண்டிய தருணம் இது!

ஆம்! பத்தொன்பது வருடங்கள் நான் பின்நோக்கி திரும்பிப் பார்க்கிறேன்! 1986 சித்திரை மாதத்தின் இறுதிப் பகுதியான இதே தினங்கள் எமது தேசத்தின் தெருக்களில் - எமது வாழ்விடங்களில் பெரும் இரத்த ஆறு பெருகி ஓடியது!

இந்த இரத்த வேள்வி நடத்தப்பட்டது யாரால் என்பதை நீங்கள் சிந்திக்கவேண்டும்!

இந்த இரத்த வேள்வி நாம் யாருக்கு எதிராகப் போராடினோமோ அவர்களால் நடத்தப்பட்ட ஒன்றல்ல!

யாரை பேரினவாதிகள் என்றும் கொன்றொழிக்கும் கூட்டம் என்றும் நாம் எண்ணியிருந்தோமோ அவர்களால் நடத்தப்பட்ட ஒன்றல்ல!

ஒன்றாய் இருந்து... ஒன்றாய் உண்டு... சகோதரர்களாகி... நண்பர்களாகி தோளிலே கை போட்டவர்கள்...

எங்களது முதுகிலே குத்தியதால் வழிந்தோடிய இரத்த ஆறு அது!

ஆம், அந்த நாட்களை நான் எண்ணிப்பார்க்கிறேன்!

அன்று நான் முழுமையான ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்திற்குப் பொறுப்பாக இருந்த காலமது.

தேசத்தின் விடுதலைக்காக, மக்களின் உரிமைக்காக துப்பாக்கிகளை தோள்களில் சுமந்து கொண்டு மக்களாகிய உங்களின் வாழ்விடங்களை நோக்கி படையினர் வந்துவிடக் கூடாது என்று கண் விழித்து காத்திருந்த ரெலோ இயக்கப் போராளிகள், புலிகளினால் கோழைத்தனமாக கொன்றொழிக்கப்பட்ட நாட்கள் அவை!

சகோதரர்களாக, நண்பர்கள் போல் அருகில் இருந்த புலிகள்..... அருகில் இருந்த ரெலோ இயக்கப் போராளிகளின் முகாம்களைச் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்திய நாட்கள் அவை!

ரெலோ இயக்கப் போராளிகள் எதிர்பாராத தாக்குதலினால் சிதறி ஓடினார்கள்! கிழக்கிலிருந்தும் வன்னியிலிருந்தும் யாழ்ப்பாணத்தில் வந்து தங்கியிருந்த பல போராளிகள் வழி தெரியாது திகைத்து நின்ற நாட்கள் அவை!

விடுதலைக்கான கனவுகளோடு நின்றிருந்த ரெலோ இயக்கப் போராளிகள் தலைமை வெறிபிடித்த புலிகளால் தெருக்களில் சுட்டுச் சரிக்கப்பட்ட நாட்கள் அவை!

சுட்டுச் சரிக்கப்பட்ட போராளிகள் பலர் குற்றுயிரும் குறையுயிருமாக நடுத்தெருக்களில் புலிகளால் பெற்றோல் ஊற்றி கொளுத்தப்பட்ட நாட்கள் அவை!

பொது மக்கள் பலர் பார்த்திருக்க பெற்றோலில் எரியும் நெருப்பில் ரெலோ இயக்கப் போராளிகள் துடிதுடித்து மாண்டனர்!

அந்தக் கொடிய நிகழ்வுகளை நான் நினைத்துப் பார்க்கிறேன்! இரத்தம் தோய்ந்த அந்த வரலாற்றின் வடுக்களை என்னால் நினைத்துப்பார்க்காமல் இருக்க முடியவில்லை!

தாம் மட்டும் ஆள வேண்டும் என்ற தலைமை வெறியில்.... மொத்தப் போராட்டத்தையும் போரிடும் எங்கள் தேசத்தையும் குத்தகைக்கு எடுக்க நினைத்தனர் புலிகள்!

ஒருதாய் மக்கள் பெற்ற பிள்ளைகள் போல் ஒரே இலட்சியத்திற்காக ஒரே களத்தில் நின்றிருந்த போராளிகளை ஒரே நாளில் கொன்றொழித்தது புலித் தலைமை!

நூற்றுக்கணக்கான போராளிகளைக் கொன்றொழித்ததன் மூலம் புலிகள் ரெலோ இயக்கப் போராளிகளின் குருதியில் தங்களது கைகளை நனைத்துக்கொண்டு அந்த இயக்கத்தைத் தடை செய்வதாக அறிவித்திருந்தனர்.

பயங்கரவாதத் தடை என்று பேரினவாதம் பிரகடனப்படுத்திய சட்டம் கூட ஜனநாயக ரீதியிலான அமைப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது!

ஆனால் பேரினவாதத்திற்கு எதிராகப் போராடுவதாகக் கூறும் புலிகளின் பிற இயக்கங்கள் மீதான தடைச்சட்டம் ஜனநாயக வெகுஜன அமைப்புகளை கூட மிச்சம் வைத்திருக்கவில்லை!

இந்த இடத்தில் காலப்பொருத்தமான ஒரு விடயத்தை நான் கூற விரும்புகிறேன்! ரெலோ இயக்கம் தடை செய்யப்பட்ட சில தினங்களில் தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் 'துக்ளக்' சஞ்சிகை ஒரு செய்தியினை வெளியிட்டிருந்தது,

அது ஒரு விவரணச்சித்திரம்! அப்போது சிறி லங்காவின் ஜனாதிபதியாக இருந்தவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்கள்! பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் லலித் அத்துலத் முதலி அவர்கள்!

லலித் அத்துலத் முதலி அவர்கள் தமிழ்ப் பயங்கரவாதிகளை ஒழிப்பதற்காக நிதி ஒதுக்கித்தருமாறு ஜனாதிபதியிடம் கேட்பதாகவும்!

அதற்கு... அந்த ஒழிப்பு வேலையை பிரபாகரனிடம் தான் ஒப்படைத்து விட்டதாக ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் பதிலளிப்பதாகவும் செய்தி வெளியிட்டிருந்தது 'துக்ளக்' சஞ்சிகை!

அது மட்டுமல்ல, படையினரால் ஒரு பயங்கரவாதியைக் கூட ஒழுங்காக ஒழித்துக்கட்ட முடியாது என்றும், ஆனால் பிரபாகரனால் ஒரே நாளில் நூற்றுக்கணக்கான பயங்கரவாதிகளை ஒழித்துக்கட்ட முடிந்திருக்கிறது; அதாவது பயங்கரவாதிகளே பயங்கரவாதிகளை ஒழிக்கின்றனர் என்றும் ஜே. ஆர். குறிப்பிட்டதாக அந்த துக்ளக் சஞ்சிகை செய்தி வெளியிட்டிருந்தது!

அன்று சிறி லங்கா அரசு பயங்கரவாதிகள் என்று குறிப்பிட்டிருந்தது எமது போராளிகளைத்தான்!

மக்களாகிய நீங்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும்! இன அழிப்பு வேலையில் ஈடுபட்டது யார் என்று நீங்கள் சிந்திக்க வேண்டும்!

புலிகள் மக்களாகிய உங்களது உரிமைகளுக்காகப் போராடுகின்றார்களா?

அல்லது தங்களது தலைமை வெறிக்காகப் போராடுகின்றார்களா?

சொந்த இனத்தின் விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு அதே சொந்த இனத்தையே கொன்றொழிக்கும் இனச்சுத்திகரிப்பு வேலையில் புலிகள்தான் ஈடுபட்டிருந்தனர்.

இவைகள் வரலாற்றில் முன்பொரு தடவை நடந்த வடுக்கள் என்று கருதி இதை நாம் மறந்துவிட முடியாது!

ஏனென்றால் அந்தக் கறை படிந்த வரலாற்றின் வடுக்கள்தான் இன்று வரை தொடர்கின்றது! ஆகவேதான் இன்னமும் அந்தக் கோர நிகழ்வுகளை நாம் நினைத்துப் பார்க்க முடிகிறது!

அந்த நிகழ்வுகள்தான்...... நாம் பேரினவாதத்திற்கு எதிராகப் போராடுவதா? அல்லது தமிழ்ப் பாசிசத்திற்கு எதிராகப் போராடுவதா? என்று எம்மைச் சிந்திக்க வைத்தது!

அந்த வடுக்கள்தான்...... நடந்து கொண்டிருப்பது நீதியான போராட்டமா? அல்லது

அநீதியான போராட்டமா என்று எம்மைச் சிந்திக்க வைத்தது!

எம் இனிய தமிழ் பேசும் மக்களே!

அன்று ரெலோ இயக்கப் போராளிகள் மீது புலிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட பலியெடுப்பு நடவடிக்கை இன்று வரை தொடர்ந்தவண்ணம் உள்ளது!

அன்று ரெலோ இயக்கப் போராளிகளின் குருதியைக் குடித்த புலிகளின் சகோதரப் படுகொலை இன்று வரை தொடர்கின்றது!

இதுதான் எமது விடுதலைக்கு இன்று வரை தடைக்கல்லாக இருக்கின்றது!

ஒரு ஆரோக்கியமான அரசியல் தீர்வுக்கு புலிகளின் சகோதரப் படுகொலைகள்தான் முட்டுக்கட்டைகளாக இருக்கின்றன!

இந்த இடத்தில் ஒன்றை மட்டும் நான் உறுதியாகக் கூறி வைக்க விரும்புகிறேன்!

ரெலோ இயக்கப் போராளிகள் மீது பலியெடுப்பு நடத்தி இன்று பத்தொன்பது ஆண்டுகள் ஆகின்றன!

ஆனாலும் மாற்றுக் கருத்துக்கள் இன்னமும் அழிக்கப்படவில்லை! இன்னமும் அது வாழ்ந்து கொண்டுதான் உள்ளது!

ஏனென்றால் கருத்துக்களை ஒரு போதும் கருவி கொண்டு அழித்துவிட முடியாது! ஒருவர் மடிய இன்னொருவர் எழுந்து.... விழ... விழ.... எழுந்து குருதி துடைத்து மாற்றுக் கருத்தின் பயணம் தொடர்ந்த வண்ணமே இருக்கும்!

பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்பு இன்றைய இதே தினங்களில் கொன்றொழிக்கப்பட ரெலோ இயக்கப் போராளிகளின் இலட்சியக் கனவுகளையும், எமது தோள்களில் சுமந்துகொண்டு இறுதி வரை எமது பயணம் தொடரும்! அவர்கள் ஆற்றிய தியாகங்களுக்கு நான் தலை வணங்குகிறேன்! அவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறேன்!

எமது தேசத்தின் விடியலுக்காக......... மக்களாகிய உங்களது நிரந்தர மகிழ்ச்சிக்காக இந்த மண்ணில் ரெலோ இயக்கப் போராளிகளின் குருதியும் சிந்தப்பட்டிருக்கிறது!

அதற்கு இந்த மண் சாட்சி!.... மக்களாகிய நீங்கள் சாட்சி!...... ஈழப் போராட்ட வரலாற்றிலிருந்து அன்று புலிகளால் கொல்லப்பட்ட ரெலோ இயக்கப் போராளின் தியாகங்களை.... அர்ப்பண உணர்வுகளை எவராலும் பிரித்துப்பார்க்க முடியாது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்!

புலிகளின் சகோதரப் படுகொலைக்கு இலக்காகி பலியாகிப்போன அந்த வீரமிகு போராளிகளுக்கு எங்கள் வீர மரியாதையைச் செலுத்து கிறோம்!

தொடர்ந்தும்

நாம் நடத்தும் இந்த தர்மயுத்தத்தில் மக்களாகிய நீங்களும் எழுச்சியுற்று வரவேண்டும்! நீங்கள் மௌன யுத்தம் நடத்தினால் மக்களாகிய உங்களது தர்ம யுத்தம் வெற்றியடையப் போவதில்லை!

நான் மக்களின் நலன்களில் இருந்து கொண்டு நேர்மையோடு மட்டும்தான் புலிகளை விமர்சிக்கின்றேன்! சந்தர்ப்பவாதிகளின் கூட்டத்தில் இணைந்துகொள்ள நான் தயாரில்லை!

புலிகளை முகமூடி அணிந்து காட்டிக்கொடுத்தவர்கள் இன்று புலிகளின் பக்கம் நிற்கிறார்கள்!

நாங்கள் முகமூடி அணியாமல் முகத்திற்கு முன்னால் முகம் காட்டி முகமுயர்த்தி நின்று கருத்துச் சொல்கின்றோம்!

ஆகவே மக்களே!....மக்களாகிய நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்!

ஜனநாயகத்தின் பக்கம் அணிதிரள்வது!
சகோதரப் படுகொலைகளை நிராகரிப்பது!...
கொலைக் கலாசாரத்திற்கு எதிராகப் போராடுவது!....
இவைகள்தான்!.....அப்போதுதான் உங்கள் உரிமை உங்கள் வசமாகும்!
புலிகளை உங்கள் பக்கம் திருப்புங்கள்!
இனி வரும் சந்தர்ப்பங்களில்
உரிமைகளை அடைவதற்கு நாம் கொண்டிருக்கும் திட்டங்கள் குறித்து உங்களுடன் உரையாடுவேன்!

*திட்டங்கள் எங்களது!..... தீர்மானம்*
*உங்களது!.....*
*தேசத்திற்காகத் தியாகங்களை ஏற்போம்!...*
*என்றும் நாம் மக்களுக்காக!....*
*பிரியமுடன்*
*செயலாளர் நாயகம்*

**தோழர் டக்ளஸ் தேவானந்தா...**

நன்றி :- இதய வீணை

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## கைதிகள் சிறைவாசத்திலிருந்து வனவாசம் புகுந்தனர்

தமிழ் இளைஞர்கள் நீர்மூழ்கிக் கப்பல் மூலம் இந்தியாவுக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்களென்று பத்திரிகையொன்று வெளியிட்ட செய்தி படு பொய்யாகும். ஆனால், தமிழீழ இயக்கங்களிடம் நீர்மூழ்கிக் கப்பல் உள்ளதென்று மக்கள் மத்தியில் பரபரப்பாகப் பேசப்பட்டது. இந்தப் பொய்ச் செய்தி, பரபரப்பைக் கிளப்பி விட்டிருந்த, வேளை தப்பிய இளைஞர்கள் எவருமே இந்தியா சென்றடையவில்லை. இந்திய அரசுதான் தமிழ் இளைஞர்களை நீர்மூழ்கிக் கப்பல் மூலம் இந்தியாவுக்கு அழைத்துச் சென்றிருக்கிறதென்றும் சிலர் சந்தேகப்பட்டனர்.

## 109 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

தப்பிச் சென்ற இளைஞர்களைக் கைதுசெய்வது தொடர்பாக ஜனாதிபதி ஜெயவர்த்தன முப்படைத் தளபதிகளுடனும் பொலிஸ்மா அதிபருடனும் யோசனை நடத்தினார். ஆனால் தமிழ் இளைஞர்கள் மூன்று பிரிவுகளாக வெவ்வேறு பாதைகளில் தப்பிச் சென்றனர். பனாகொடை மகேஸ்வரன், வரதராஜப் பெருமாள், அழகிரி ஆகியோர் வாவியூடாகப் படகில் தப்பினர். இரு வாகனங்களில் ஒன்றாகவே தப்பிச் சென்ற ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்களும் புளொட் உறுப்பினர்களும் காட்டுப் பகுதிக்குள் சென்றதும் இரு வேறு மார்க்கங்களில் பிரிந்து போனார்கள். சிறையிலிருந்து தப்பியவர்களின் பெயர்கள் வருமாறு:-

(1) கே.என்.டக்ளஸ் தேவானந்தா (2) வரதராஜப் பெருமாள் (3) பனாகொடை மகேஸ்வரன் (4) புளொட் மாணிக்கராசன் (5) அ. டேவிற் (6) இராமநாதன் (7) மகேஸ்வரராஜா (8) எஸ். பேரின்பராஜா (9) எஸ். சிவலிங்கம் (10) எஸ். சிறீஸ்கந்தராஜா (11) எஸ். பிரேமானந்தன் (12) எஸ். கோணேஸ்வரன் (13) ஜி. பத்மநாதன் (14) வி. சண்முகநாதசிவம் (15) வி. சுந்தரலிங்கம் (16) ரி. விஜயகுமார் (17) தட்சணாமூர்த்தி தனபால் (18) வி. மகேந்திரன் (19) பி. பவானந்தன் (20) எஸ். யோகராஜா (21) த. ஜெயக்கொடி (22) வி. சுப்பிரமணியம் (23) சண்முகம் சந்திரபாலன் (24) எஸ். கணேசலிங்கம் (25) எஸ். சிறிதரன் (26) பரந்தன் ராஜன் (27) அந்தோனிப்பிள்ளை (அழகிரி) (28) அகஸ்டின் போல் (29) சின்னராஜா (30) எஸ்.

**சுமார் மூன்று வாரங்களாக இலங்கைப் படையினருக்கும் பொலிசாருக்கும் 'தண்ணி' காட்டிய இளைஞர்கள், தமிழகம் சென்றடைந்த செய்தி இலங்கையின் அரசு தரப்பினரை அதிர்ச்சியில் உறைய வைத்தது. சிறையிலிருந்து தப்பிய தமிழ் இளைஞர்கள் கடல் வழியாகத் தமிழகம் தப்பிச் செல்ல முயற்சிப்பார்கள் என் பதைத் தெரிந்துகொண்ட கடற்படையினர், கடற்பரப்பில் தமது ரோந்து நடவடிக்கைளை அதிகரித்திருந்தபோதிலும், அவர்களுக்கு 'தண்ணி' காட்டிவிட்டுத் தப்பிச்சென்றமை மகத்தான சங்கதி தான்.**

ஜெயப்பிரகாசம் (31) எஸ். இராஜாஜி (32) மு. நித்தியானந்தன் (33) ஜெயதிலகராஜா (34) ஜெயகுலராஜா (35) தங்க மகேந்திரன் (36) வாமதேவன் (37) பரமதேவா (38) ஞானவேல் (39) ரி. மரியநாயகம் (40) எஸ். நகுலேஸ்வரன் (41) எஸ். மகேஸ்வரன் (42) ரி. ஜெகதீசன் (43) பாலேந்திரா (44) கேந்திரன் (45) குகதாசன் (46) திருச்செல்வம் (47) மகேந்திரன் (48) பகீரதன் (49) ஹென்றி (50) வடிவேல்.

*(அரசியல் தொடர்)*

தப்பிச் சென்ற 61 தமிழ்க் கைதிகளில் இவர்கள் மட்டுமே அரசியல் கைதிகளாவர்.

இதற்கிடையில் வரதராஜப் பெருமாள், அழகிரி ஆகியோர் மட்டக்களப்பிலிருந்து வாகனம் மூலம் யாழ்ப்பாணத்துக்குத் தப்பிச்சென்று படகுகள் மூலம் இந்தியா போய்ச் சேர்ந்து விட்டார்கள். பனாகொடை மகேஸ்வரன், டேவிற் ஐயா போன்றவர்களும் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றனர். சிறையில் இருந்து தப்பியவர்களில் முதலில் தமிழகத்துக்குச் சென்றவர்கள் இவர்கள்தான்.

காந்தீய இயக்கத்துக்குச் சொந்தமான இரு வாகனங்களிலும் பயணம் செய்த இளைஞர்கள் படையினரின் கண்களில் படாமல் புளியந்தீவுக்கு வந்துசேர்ந்து, அங்கிருந்து முகத்துவாரத்தைச் சென்றடைந்தனர். முகத்துவாரத்திலிருந்து இரு படகுகள் மூலம் பயணத்தைத் தொடர இளைஞர்கள் திட்டமிட்டனர். இரு படகுகளிலும் அதிகளவு இளைஞர்கள் இருந்ததால் படகுகள் ஆட்டம் காணத் தொடங்கின. படகோட்டிகளும் இவர்களைப் பனிச்சங்கேணியில் இறக்கிவிட்டுப் போய்விட்டார்கள். பனிச்சங்கேணியிலிருந்து காட்டுப் பாதைகளூடாக இளைஞர்கள் பயணத்தைத் தொடர்ந்தனர். தப்பிய இளைஞர்களைப் பிடிப்பதற்கு அரசு இயந்திரம் மும்முரமாகச் செயற்பட்டதால், மிகக் கவனமாகவே அவர்கள் நடந்து செல்ல வேண்டியதாயிற்று. உணவுக்கும் பெரும் கஷ்டம். காட்டிலுள்ள பழவகைகளை உண்டதோடு, மாடுகள், எருமைகளைப் பிடித்து அவற்றையும் உணவாகச் சமைத்துச் சாப்பிட்டனர்.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

தமிழ் இளைஞர்கள் காட்டுக்குள் அலைந்து திரிவது சிங்களக் கிராமவாசிகளுக்குத் தெரிந்து விட்டால் படையினருக்குத் தகவல் பறந்து போய் விடும் என்ற பயமும் இவர்களை வாட்டிக் கொண்டிருந்தது. காட்டுப் பகுதிக்குக் கிராமங்களில் வசிக்கும் தமிழ் மக்களின் வழிகாட்டலுடன் சிங்களக் கிராமங்களைத் தவிர்ப்பதற்காகச் சுற்றிச் சுற்றி அவர்கள் நடந்து முன்னேறிக் கொண்டிருந்தனர். சில இடங்களில் இவர்கள் மூன்று, நான்கு நாட்கள் தங்கவேண்டியுமிருந்தது.

காட்டுப் பகுதியூடாக சேருவில, தம்பலகாமம் வரை வந்து சேர்ந்த போது புளொட் அமைப்பைச் சேர்ந்தவர்கள் வேறு பாதை வழியாகப் பிரிந்து செல்லத் தீர்மானித்தார்கள். தம்பலகாமத்திலிருந்து புறப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எப். இளைஞர்கள் மூதூருக்குச் சென்றடைவதற்கு முன்னாள் எம்.பி. தங்கத்துரையின் அண்ணன் வழி காட்டினார். இவ்வாறு சுமார் பதினெட்டு நாட்களைக் காடுகளில் கழித்த பின்னர் நடந்து சல்லியை வந்தடைந்தனர். சல்லி என்ற இடத்திலிருந்து படகுகள் மூலம் யாழ்ப்பாணம் செல்ல இளைஞர்கள் திட்டமிட்டபோதும் அவ்வாறு செல்ல அவர்களால் முடியவில்லை. படகோட்டிகள் இவர்களை முல்லைத்தீவிலுள்ள புலிபாய்ந்த கல் என்னுமிடத்தில் இறக்கிவிட்டனர். புலிபாய்ந்த கல் காட்டுப் பகுதியில் ஒன்றரை நாட்களைக் கழித்துவிட்டு நடையாக வெற்றிலைக்கேணியை வந்தடைந்தனர். வெற்றிலைக்கேணியிலிருந்து வாகனங்கள் மூலம் யாழ்ப்பாணத்தின் மயிலிட்டிக் கரையோரப் பகுதியை வந்தடைந்த இளைஞர்கள், ஏற்கனவே தயாராக வைக்கப்பட்டிருந்த வள்ளங்கள் மூலம் பாக்கு நீரிணையைக் கடந்து தமிழகத்தின் வேதாரணியக் கரைப் பகுதியைச் சென்றடைந்தனர்.

சுமார் மூன்று வாரங்களாக இலங்கைப் படையினருக்கும் பொலிசாருக்கும் 'தண்ணி' காட்டிய இளைஞர்கள், தமிழகம் சென்றடைந்த செய்தி இலங்கையின் அரசு தரப்பினரை அதிர்ச்சியில் உறைய வைத்தது. சிறையிலிருந்து தப்பிய தமிழ் இளைஞர்கள் கடல் வழியாகத் தமிழகம் தப்பிச் செல்ல முயற்சிப்பார்கள் என் பதைத் தெரிந்துகொண்ட கடற்படையினர், கடற்பரப்பில் தமது ரோந்து நடவடிக்கைளை அதிகரித்திருந்தபோதிலும், அவர்களுக்கு 'தண்ணி' காட்டிவிட்டுத் தப்பிச்சென்றமை மகத்தான சங்கதி தான்.

டக்ளஸ் தேவானந்தா, வரதராஜப் பெருமாள், பனாகொடை மகேஸ்வரன், பரந்தன் ராஜன், புளொட் மாணிக்கதாசன் உட்பட சிறையிலிருந்து தப்பிய தமிழ் இளைஞர்கள் தமிழகம் வந்து சேர்ந்த செய்தி, தமிழகப் பத்திரிகைகளில் வெளிவந்தன.

**(தொடர்ந்து வடியும்....)**

# மேல் கொத்மலையின் கீழ் வெடிப்புக்கள்

தேர்தலுக்கான சாத்தியங்கள் இருப்பதாக அரசியல் கட்சிகள் மத்தியில் நம்பிக்கைகள் ஏற்பட்டுள்ளதால் மேல்கொத்மலைத் திட்டம் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. போதாக்குறைக்கு இலங்கை மின்சாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்றன தொடர்பான அரசின்



ஆறுமுகன்


உத்தேச நடவடிக்கைகளும் மேல் கொத்மலை நீர் மின்சாரத் திட்டம், புத்தளம் அனல் மின்சாரத்திட்டம் தொடர்பான சர்ச்சைகளையும் சூடுபிடிக்க வைத்துள்ளது. இத் திட்டங்களை அமுல்படுத்தப்போவதாக அரசாங்கம் சூளுரைத்துள்ளது. இருந்தாலும் மேல்கொத்மலைத் திட்டத்தையும் நுரைச்சோலை அனல் மின்திட்டத்தையும் எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. மலையகத்தில் மேல் கொத்மலைத்திட்டத்துக்கு எதிராக அரசியல் கட்சிகள் "மக்கள் இயக்கம்" என்ற பெயரில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இ.தொ.கா. மலையக மக்கள் முன்னணி போன்ற பிரதான கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவிக்கின்ற போதிலும், புதிய ஜனநாயகக் கட்சி' என்ற ஒரு சிறுகட்சியே மலையகத்தில் எதிர்ப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளன. இதற்கு மாறாக நுரைச்சோலைத் திட்டத்துக்கு சமய அமைப்புகளும் சூழல் பாதுகாப்பு அமைப்புகளுமே முன்னின்று எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இலங்கை மின்சார சபையினாலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினாலும் வருடாந்தம் மூவாயிரம் கோடி ரூபா நஷ்டமேற்படுவதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிக்கிறார். அதாவது நாளாந்தம் எட்டுக் கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டமேற்படுகிறது. நீர்சக்தி மின் திட்டத்தின் மூலம் ஒரு யுனிற் மின்சாரத்தை உருவாக்க 3 ரூபா 50 சதம் செலவாகுமென்றும் அனல் மின்சாரத்தைப் பொறுத்தவரை யுனிற் ஒன்றுக்கு 4 ரூபா 50 சதம் செலவாகிறதென்றும் அவர் தெரிவிக்கிறார். இலங்கையின் மின்சாரத்தேவை வருடாந்தம் 100 முதல் 150 மெகாவாட்டுகளால் அதிகரித்து வருவதாகவும் தற்போது நீர்மின்திட்டங்களின் மூலம் ஆயிரம் மெகாவாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதாகவும் அனல் மின்திட்டங்கள் மூலம் 650 மெகாவாட்ஸே உற்பத்தி செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிடுகிறார். சர்வதேச சந்தையில் பெற்றோலியப் பொருட்களின் விலைகள் உயர்ந்து செல்வதால் அதற்கு ஈடுகொடுக்கக் கூடியதாக மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பது நியாயமே. மின்சார உற்பத்திக்கு எரிபொருள் பயன்படுத்தப்படுவதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும்.

மேல் கொத்மலைத் திட்டத்தை இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி உட்பட அனைத்து மலையக அரசியல் கட்சிகளும் எதிர்க்கின்றன. இ.தொ.கா. கடந்த ஆட்சிக்காலத்திலும் வன்மையாக எதிர்த்தது. தற்போதும் எதிர்க்கின்ற போதிலும் இது தொடர்பான மாற்றுத்திட்டமொன்றினை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது. அரசாங்கத்தோடு இணைந்து அமைச்சர் பதவிகளை பெறுவதற்கு முன்னதாகச் சமர்ப்பித்த பதினான்கு அம்சத் திட்டத்தில் மேல் கொத்மலைத்திட்டம், சென்ற் கிளேயர் நீர்வீழ்ச்சியை மையமாக வைத்தே மேற்கொள்ளப்பட வேண்டுமென்று நிபந்தனை விதித்திருந்தது.

ஆனாலும் மேல்கொத்மலைத் திட்டம் தொடர்பான முன்னைய டென்டர் கோரிக்கையை அரசு முன்னெடுத்துச் செல்வதாகக் குற்றஞ்சாட்டிய இ.தொ.கா., அரசை விட்டு வெளியேறப் போவதாகவும் எச்சரித்திருந்தது. அரசும் பின்வாங்கிக் கொண்டது. திரும்பவும் சென்ற்கிளேயர், நீர்வீழ்ச்சியை மையமாக வைத்து மேல்கொத்மலைத் திட்டத்தை மேற்கொள்வதானால் மீண்டும் அது தொடர்பாகப் புதிய சாத்திய அறிக்கைகளைப் பெற வேண்டியிருக்கும். அதற்குச் சில காலம் பிடிக்கும். ஜப்பானிய அரசின் நிதியுதவியுடனேயே இத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. எனவே இத் திட்டம் தொடர்ந்தும் இழுபறிப்பட்டுக் கொண்டு போகுமேயானால் ஜப்பானிய நிதியுதவி இல்லாமல் போய்விடக்கூடிய ஆபத்தும் உள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி அரசில் இ.தொ.கா.வும் மலையக மக்கள் முன்னணியும் சுமார் இரண்டரை வருடகாலம் பங்காளிக் கட்சிகளாக இருந்துள்ளன. அப்போதெல்லாம் மகாவலி அமைச்சின் அரை மந்திரியாகவிருந்தவர் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன். அன்று பெரிதாக எதுவும் அலட்டிக் கொள்ளாமலிருந்த இவர், இப்போது 'துள்ளிக் குதிப்பது' விந்தைதான்.

மேல்கொத்மலைத் திட்டத்தை நாம் இரு முனைகளில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதாவது, இவ்வாறான திட்டங்களைப் பயன்படுத்தி, மலையக மக்களின் தாயகப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று உண்மைகளை நாம் மறந்துவிடக் கூடாது. மௌசாக்கல, காசல்ரீ, விக்டோரியாத் திட்டங்கள் இவற்றுக்குச் சாட்சிகளாகத் திகழ்கின்றன. மலையகத்தில் தமிழ் மக்களின் இனப்பரம்பலைக் குறைக்கும் தீய நோக்கங்களும் இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பின்னாலிருந்ததை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே தமிழ் மக்களின் இனப்பரம்பல் பாதிக்கப்படாதவாறு இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற மலையகக் கட்சிகளின் கோரிக்கையும் எதிர்ப்பும் நியாயமானதே. ஆனால், சப்தநாடிகளாக விளங்கக்கூடிய இவ்வாறான மலையக அபிவிருத்தித் திட்டங்களை முழு அமைச்சுப்பதவிகளும்



பெ. சந்திரசேகரன்

அரை அமைச்சுப் பதவிகளும் பெறுவதற்கான பேரமாகப் பயன்படுத்துவதே மிக வேதனையான விடயமாகும். தமிழ் மக்கள் செறிந்து வாழும் நுவரெலியாவுக்கும் அம்பேகமுவவுக்குமிடையில் தலவாக்கலையில் இருந்து திட்டம் மையம் கொள்வதால் மலையகக் கட்சிகள் மிகக் கெட்டித்தனமாக ஐக்கியப்பட்டு தமது நிகழ்ச்சி நிரலை முன்வைக்க வேண்டும். 1986இல் முதன்முதலாக இத் திட்டத்துக்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதேவேளை மலையகத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களும் மலையக மக்களுக்குப் பயன்தரக் கூடியவையாக அமைந்தால் அதற்கு அர்த்தமற்ற வகையில் எதிர்ப்புத் தெரிவிப்பதும் அர்த்தமற்றது. எனவே மலையகக் கட்சிகள் இது தொடர்பாக ஒன்றிணைந்து ஒரு நிகழ்ச்சி நிரலை முன்வைப்பதே சரியானது.



**அடுத்த வாரம் வரும்**

# பிடிக்காத சினிமா... விரும்பாத காட்சி..!

சமீபத்தில் வாழ்வியல் பயிற்சி முகாம் நடத்துவதற்காக ஹைதராபாத் சென்றிருந்தேன். அப்போது....

கடந்த காலத்தில் ஏற்பட்ட பல காயங்கள் இன்றும் தங்கள் மனதில் வடுவாக இருப்பதாகப் பலர் துயரப்பட்டுக்கொண்டார்கள்! "கடந்த காலத்தின் கசப்பான விஷயங்கள் அவ்வப்போது அப்செட் செய்துவிடுகிறது. அதிலிருந்து மீள என்ன வழி?" என்று அவர்கள் கேட்டார்கள்.

என்னுடைய வாழ்வியல் பயிற்சி முகாம் நிகழ்ச்சிகளில் பல சமயம் என்னைவிட பயிற்சியில் பங்கு கொள்ள வருபவர்கள் தான் அதிகமாகப் பேசுவார்கள்! பேசச் சொல்லி நானும் உற்சாகப்படுத்துவேன். அதனால் நான் அவர்களிடம் இப்படிக் கேட்டேன்:

"உங்கள் மனதில் நீண்ட நாட்களாக ஆறாமல் இருக்கும் காயம்தான் என்ன?"

முதலில் ஓர் இளைஞர் பேசத் துவங்கினார்.

"நானும் என் நண்பனும் சேர்ந்து ஒரு சிவில் காண்ட்ராக்ட் பிஸினஸ் ஆரம்பித்தோம். அப்போது நான் அரசு உத்தியோகத்தில் இருந்ததால், கம்பெனியை என் நண்பன் பெயரிலேயே தொடங்கினேன். வியாபாரமும் குறுகிய காலத்திலேயே சூடு பிடிக்க ஆரம்பித்துவிட்டது. நான் வியாபாரத்தில் முழுக் கவனம் செலுத்துவதற்காக, என் அரசு வேலையைக்கூட ராஜினாமா செய்துவிட்டேன். ஒருநாள் இன்கம் டாக்ஸ் சம்பந்தமாகச் சில விபரங்களைத் திரட்டுவதற்காக, என் நண்பனிடம் கம்பெனியின் கணக்குப் புத்தகங்களைக் கேட்டேன். அதற்கு அவன், "இதோ பார், நீ செய்யும் வேலைக்கு உனக்கு எவ்வளவு சம்பளம் வேண்டுமோ அதைக் கேட்டு வாங்கிக்கொள். கணக்கு வழக்குப் பற்றியெல்லாம் நீ கவலைப்படாதே!" என்று அணுகுண்டுகள் வீசுவது போல வார்த்தைகளை வீசினான். கம்பெனியின் செக் புத்தகத்தில் கையெழுத்திடுவதில் ஆரம்பித்து கம்பெனியின் எல்லா உரிமைகளையும் நண்பனை நம்பி அவன் பெயரிலேயே வைத்திருந்ததால் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை! என் மனைவி மற்றும் குழந்தையின் நகைகள் முதற்கொண்டு எல்லாவற்றையும் விற்று, முதல் போட்டுத் தொடங்கிய என் கம்பெனியிலிருந்து கண்களைத் துடைத்துக் கொண்டு நான் வெளியே வந்து விட்டேன். நான் உழைத்து வியர்வை சிந்தி உருவாக்கிய கம்பெனி, ஒரு சில நிமிடங்களில் என்னிடமிருந்து பறிபோய் விட்டது! இந்தச் சம்பவம் நடந்து பல வருடங்கள் ஆகிவிட்டன. நான் வேறு கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியைத் தொடங்கி இப்போது அது நல்ல இலாபத்தோடு நடந்துகொண்டிருக்கிறது. என்றாலும், என் நண்பன் எனக்கு இழைத்த துரோகத்தை எப்போது நினைத்துப் பார்த்தாலும் என் நெஞ்சு விம்முகிறது! கண்கள் நீர் சொரிகின்றன!"

அடுத்து ஓர் இளம்பெண் சொன்னார்:

"நான் ஒருவரைக் காதலித்தேன். கல்யாணமும் செய்துகொண்டேன். ஆனால், என் மாமியார் மட்டும் கல்யாணத்துக்குப் பிறகும் என்னை விரோதமாகவே பார்த்து வந்தார். என் கல்யாணம் நடந்த சில வாரங்களில் என் புகுந்த வீட்டில் மிகப் பெரிய சோகம் ஒன்று நடந்தது. ஆம்... என் கணவரின் தங்கை விபத்து ஒன்றில் விதவையானார்! நான் வந்த நேரம்தான் இந்த விபத்துக்குக் காரணம் என்று மாமியார் என்னைச் சபிக்க ஆரம்பித்தார்.

ஒருநாள், துக்கம் விசாரிக்க என்



உறவினர்கள் வந்தார்கள். அவர்கள் முன்னால் என் மாமியார், 'தரித்திரம் பிடித்தவளே! நீ அடியெடுத்து வைத்த நேரம்தான் என் வீட்டில் இழவு விழுந்து விட்டது' என்று கோரத்தாண்டவம் ஆடினார். அதுமட்டுமல்ல, 'இந்த வீட்டில் உனக்கு இனி இடமில்லை... உடனே வீட்டைவிட்டு வெளியே போ!' என்றும் என்னைப் பார்த்துக் கத்தினார். அன்றே நானும் என் கணவரும் வீட்டைவிட்டு வெளியே வந்துவிட்டோம்! பிறகு சில வருடம் கழித்து என் மைத்துனர்களுக்குத் திருமணம் நடந்தது. என் கணவர்தான் வீட்டில் முதல் பிள்ளை! என்றாலும், சொந்தத் தம்பியின் திருமணத்துக்கே அவருக்கு அழைப்பு இல்லை! பிறகு, சில வருடம் கழித்து என் மாமனார் நோய்வாய்ப்பட்டார். நான் என் கணவரோடு அவரைப் பார்ப்பதற்குப் போனேன். மரணப் படுக்கையில் இருந்தபோதும் அவர் கோபம் குறையாமலேயே இருந்தது.

'மூதேவி! உன் காற்றுப் பட்டாலே என் புருஷன் இறந்துபோய்விடுவார். நீ முதலில் வெளியே போ' என்றார் மாமியார். நான் வீடு திரும்பியதும் என் கணவரிடம் கதறிக் கதறி அழுதேன். கொஞ்ச நாட்களிலேயே என் மாமனார் இறந்து போனார். வீட்டின் முதற் பிள்ளையான என் கணவருக்கு அவரது அப்பாவைக் கடைசியாக ஒருமுறை பார்க்கும் சந்தர்ப்பம்கூடக் கிடைக்கவில்லை!

இந்தச் சம்பவங்கள் எல்லாம் நடந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன! நான் என் மாமியார் வசிக்கும் ஊரிலிருந்து பல நூறு கிலோ மீற்றர் தள்ளி இருக்கும் ஹைதராபாத்தில் இப்போது என் குழந்தைகளோடும் கணவரோடும் ஓரளவு வசதியாகவே வாழ்கிறேன்... என்றாலும், என் மாமியார் எனக்கு... என்னைவிட என் கணவருக்குச் செய்த அவமானத்தை நினைக்கும்போதெல்லாம் நெஞ்சு குமுறுகிறது! என்ன செய்வது?"

இதே ரீதியில் பலர் தங்களின் நெஞ்சில் இருக்கும் வடுக்களைப் பற்றி சொன்னார்கள்! நான் அவர்களுக்கு நேரடியாகப் பதில் சொல்ல விரும்பவில்லை!

"உங்களுக்குப் பிடிக்காத, போர் அடிக்கும் சினிமா ஒன்றின் பெயர் சொல்லுங்களேன்" என்று கேட்டேன்.

அவர்கள் ஆளாளுக்கு ஒரு பெயர் சொன்னார்கள்.

"ஓகே. இந்தச் சினிமாவின் வீடியோ காஸெட்டைத் தேடிப்பிடித்து வாங்கி, வருகிற ஞாயிற்றுக்கிழமை காலையிலிருந்து ராத்திரி வரை வீடியோவில் திருப்பித் திருப்பிப் போட்டுப் பாருங்கள்" என்றேன்.

"ஐயையோ... என்னால் முடியவே முடியாது! முடிகிற காரியமாக வேறு எதையாவது சொல்லுங்கள்" என்றார்கள் அவர்கள்.

"நண்பன் உங்களுக்குச் செய்த துரோகமும், மாமியார் செய்த கொடுமைகளும்கூட உங்களுக்குப் பிடிக்காத காட்சிகள்தான். பிறகு ஏன் அதை உங்கள் மனத்திரையில் மீண்டும் மீண்டும் ஓட்டிப் பார்க்கிறீர்கள்?"

பிடிக்காத சினிமாவைப் பார்க்க மறுக்கும் நீங்கள்... விரும்பாத அந்த உண்மைக் காட்சிகளை ஏன் மீண்டும் மீண்டும் உங்கள் மனத்திரையில் ஓடவிட்டுப் பார்க்கிறீர்கள்? அதை மறந்துவிடுங்கள். காயம் தானாகவே காய்ந்து உதிர்ந்துவிடும்! என்று சொன்னேன்.

சிறு குழந்தைகள் எப்போதும் கலகலப்பாக இருக்க மிக முக்கிய காரணம், அவர்கள் மனதில் கடந்த காலத்தின் பாரங்கள் எதுவும் இருப்பதில்லை. வேதனை தரும் விஷயங்களை அவர்கள் சில மணி நேரங்களில் மறந்து விடுவார்கள். சந்தோஷமான அனுபவங்களை மட்டும் திரும்பத் திரும்பச் சொல்லி மகிழ்கிறார்கள். நாமும் குழந்தைகள் போல இருக்கப் பழகினால், மனதில் பாதிக்குமேல் பாரம் குறையும் இல்லையா?

ஒரே வாக்கியத்தில் சொல்வதென்றால், கடந்த காலம் நமக்குப் பாடமாக இருக்கவேண்டுமேயொழிய, பாரமாக இருக்க ஒருபோதும் நாம் அனுமதிக்கக்கூடாது!

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 116க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

அப்துல் காதர் அஜீத், 2ஆம் வட்டாரம், எருக்கலம்பிட்டி, மன்னார்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. ச. ஜெயகரன், 69, மாமாங்கம் வீதி, மாமாங்கம், மட்டக்களப்பு.
2. எஸ். ஷஞ்ஜித், 34, லவண்டர் வீதி, திருகோணமலை.
3. எம்.ஜே.எம். ஹிஷாம், 55, சங்கம, சீனக்குடா, திருகோணமலை.
4. திருமதி.எம்.ஆர். பாலேந்திரா. 49, உடங்காவ, கொச்சிக்கடை.
5. நளீமியா நிஸார்தீன், 11, வீட்டுத் திட்டம், கல்பிட்டி.
6. என். குகன், 22, தாமரைக்கேணி வீதி, மட்டக்களப்பு.
7. திருமதி. பி.எஸ். ராணி, பொது நூலகம், சங்கானை.
8. எம்.இஸட்.எம். ஹானபி, எஸ்.எம். வீதி, தர்ஹா நகரம்.
9. திருமதி தெய்வேந்திரராசா, 7ஆம், குறுக்குத் தெரு, வவுனியா.
10. ரஞ்சன் பஸ்டியன், பீட்டர்ஸ் ஒழுங்கை, தெஹிவளை.

## குறுக்கெழுத்துப் போட்டி 118

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ |
| 5 | 6 | ■ | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | ■ | 17 |
| 18 | 19 | ■ | 20 | 21 |
| 22 | ■ | 23 | 24 | 25 |

### இடமிருந்து வலம்

1. மிகச் சிறிய இதயமுள்ள விலங்கு (குழம்பியுள்ளது).
2. ஆதாரம்.
7. சன்னம் என்றும் சொல்லலாம்.
9. இவ்வாறு நடந்திருக்க வேண்டாம்/ வேண்டும் என்று எழும் கவலை (குழம்பியுள்ளது).
14. குஜராத்தில் ஜனனித்த அஹிம்சா வாதி.
18. போதை தரும்.
20. கணித அடையாளம் ஒன்று.
23. வேறுபாடு (குழம்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

1. நவரசங்களில் ஒன்று.
2. நறுமணம் (குழம்பியுள்ளது).
4. மாலை (தலைகீழ்).
8. பூனைக் கண் என்றழைக்கப்படும் நவரத்தினம் (குழம்பியுள்ளது).
11. வேகம் என்றும் சொல்லலாம்.
20. வஞ்சனை.

## குறுக்கெழுத்துப் போட்டி 116 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ப | 2 ணை | ■ | ■ | 3 ஓ |
| 4 ர் | 5 தா | ■ | 6 ப | 7 ம் |
| 8 மா | ■ | 9 ற | 10 ம் | 11 மை |
| ■ | ■ | 12 ம் | 13 ள் | 14 மெ |
| ■ | 15 சி | 16 ப | 17 ம் | 18 ளி |
| 19 த | 20 ப | 21 ம் | 22 ச | ■ |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 03.05.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-118
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.


ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

RATHAA TEXTILE
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

92

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்: ........................
கையொப்பம்: ..................

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 03-05-2005

அனுப்ப வேண்டிய முகவரி-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.


**இந்த வாரம் யாருக்கு சேலை?**
**தர்ஹா நகர் வாசகிக்கு அதிர்ஷ்டம்!** 90

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**எம்.இஸட்.எப்.ஸனூபா**
143/8 எஸ்.எம். வீதி, தர்ஹா நகர்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்புகொண்டு பரிசினைப் பெறலாம்.

# உஷ்.....



நாற்புறமும் தேயிலையால் சூழ்ந்து தலை நடுவினிலே வகிடெடுத்தாற்போல் எழில் ததும்ப மலைகளுக்கு நடுவே ஓடிக்கொண்டிருந்தது அந்தச் சிற்றாறு. அந்தத் தேயிலைத் தோட்டத்து மக்கள் குளிப்பதற்கென்று ஆற்றின் பல இடங்களை தெரிவு செய்து வைத்திருந்தாலும், சித்ரா மாத்திரம் எல்லோரும் குளிக்கும் இடங்களைத் தவிர்த்து சற்று தொலைவில் இருக்கும் பாறை ஒன்றின் மறைவில் சென்று குளிப்பதையே வழக்கமாக்கியிருந்தாள். அன்றும் அப்படித்தான். நண்பகல் பொழுதில் நீரில் இறங்கிக் குளித்துவிட்டு தன் அழகை இயற்கை கண்டு மயங்கிவிடக் கூடாதென்று ஒரு துண்டால் போர்த்திக் கொண்டு உடை மாற்றச் சென்றாள். அருகில் இருக்கும் அரசாங்க பாடசாலையின் சாதாரண தர மாணவி என்றாலும், அழகில் உயர்தரம். சில தேயிலை தொழிலாளர்களுக்கு பணத்தை அள்ளி கொடுக்காவிட்டாலும் பிள்ளைச் செல்வங்களை அள்ளிக் கொடுக்கும் இறைவன் அதிலும் ஒரு சில பெண்பிள்ளைகளுக்கு அழகென்னும் செல்வத்தை அளவிற்கதிகமாகவே கொடுத்து விடுகிறான். அந்த வகையில் இந்த சித்ரா முதலிடம். முழுநிலவு முகத்தில்தான் மூன்றாம் பிறையாய் நுதலும், சிறகடிக்கும் பட்டாம்பூச்சிகளும் என கட்டழகின் பட்டியலை நீட்டலாம்.

அக்கம் பக்கம் யாரும் இல்லாததால் பார்க்க மாட்டார்கள் என்ற துணிச்சலோடும், ஒரு மறைவான இடம் என்பதாலும் போர்த்தியிருந்த துண்டை எடுத்து தலையைத் துவட்டிய பின் உலர்ந்த ஆடையை கையில் எடுத்து மாற்றுவதற்கு தயாரான வேளையில் யாரோ “உஷ்...உஷ்....”என்று அழைக்க திடுக்குற்றவள் மறுபடியும் துண்டால் மேனியை போர்த்திக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தாள். ஆனால் யாரையும் காணவில்லை. “யாராக இருக்கும். யாரும் மறைந்து நின்று நான் குளிப்பதை பார்த்துக் கொண்டிருந்திருப்பார்களோ!” நினைத்தவளுக்கு அச்சமாக இருந்தது. மறுபடியும் ஒருமுறை சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு யாரும் இல்லை என்று ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு உடையை மாற்ற எத்தனித்த அதேவேளை, “உஷ்.....உஷ்...”என்று மறுபடியும் அழைத்தார்கள்.

“ச்சீ....இது அவனாகத்தான் இருக்க வேண்டும். ஒரு கன்னிப் பெண் குளிக்கும் இடத்திற்கு வந்து இப்படி அசிங்கமாக நடந்து கொள்கிறானே! இவனெல்லாம் மனுஷனா?” மனதுக்குள் நினைத்துக் கொண்டவளுக்கு முதல் நாள் நிகழ்ந்த அந்த சம்பவம் ஞாபகத்தில் வந்தது.

பாடசாலை விட்டு வரும் வழியில் இருக்கும் ஒரு பஸ் தரிப்பில் தினசரி சித்ரா வரும் நேரத்தில் வந்து நிற்பான் அவன். இரண்டு வருடங்களுக்கு முன்பு அவனும் பத்தாம் வகுப்பில் கோட்டைவிட்ட காரணத்தால் உள்ளூரிலேயே மரக்கறி செய்வதில் ஈடுபட்டிருந்தான். சும்மா பொழுது போகாத சமயங்களில் இந்த பஸ் தரிப்பில் வந்து அவன் போன்ற ஏனைய சிலரோடு சேர்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருப்பான். இப்படி அரட்டை அடித்துக் கொண்டிருந்த சமயத்தில் எப்படியோ ஒரு நாள் சித்ராவைக் கண்டு மயங்கிவிட்டான். அன்றிலிருந்து சித்ரா தனியாக பாடசாலை விட்டு வரும் சமயத்தில் அவளை முன்னே போக விட்டு பின்னால் இருந்து “உஷ்....உஷ்....”என்று அழைப்பான். சித்ரா இதை கேட்டும் கேளாதது போல் போய் விடுவாள். ஆனால் முதல் நாள் ஏதோ சிந்தனையில் சென்று கொண்டிருந்த சித்ராவை அவன் “உஷ்.....உஷ்....”என்று அழைத்த போது “நீ என்ன ஊமையா? அதென்ன தினமும் நான் போன பின்னால் என்னை உஷ்.....உஷ்.....என்று அழைக்கிறாய்? ஏதாவது பேசணும்னா நேர்ல பேசு. நீ இப்படி கூப்பிடறதை யாராவது பார்த்தா என்ன நினைப்பாங்க” என்றதும் அதெல்லாம் ஒன்றும் நினைக்க மாட்டாங்க, முதல்ல இதை நீங்க படிங்க என்றோர் காதல் கடிதத்தை அவன் நீட்ட, “எனக்கு அப்பவே தெரியும். நீ எதுக்கு என்ன சுத்துறன்னு...இதோ பார். இதுமாதிரியெல்லாம் இனி நடந்துகிட்ட நான் எங்கப்பாகிட்டே சொல்லிவிடுவேன்” கூறி, அவன் கொடுத்த கடிதத்தை அவன் முகத்திலேயே வீசி எரிந்துவிட்டு வந்துவிட்டாள்.

“இப்போது இங்கேயும் வந்து விட்டானே. ஒரு வேளை நேற்று நடந்த சம்பவத்திற்கு பழி வாங்க ஏதாவது செய்து விட வேண்டும் என்று வந்திருப்பானோ” நினைத்தவளுக்கு உடம்பெல்லாம் நடுங்கத் தொடங்கியது. முதல் நாள் கடிதத்தை கிழித்து எரிந்தபோது இருந்த தைரியமும் துணிச்சலும் இப்போது எங்கே போனதென்று தெரியவில்லை. ஆனாலும் தன்மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மேலோங்க வேண்டாத தெய்வங்களை எல்லாம் வேண்டிக் கொண்டு, கொண்டு வந்த ஒரு சேலையால் அருகில் இருந்த செடிகளுக்கு இடையே ஒரு மறைப்பைப் போட்டு துரித கதியில் உடைமாற்றிக்கொண்டாள். துவைத்த துணிகளையும், ஏனைய துணிகளையும் வாளியில் போட்டு எடுத்துக் கொண்டபோது அவள் உடை மாற்றிய கற்பாறையின் மேலிருந்து மீண்டும் அவளை “உஷ்.....உஷ்.....”என்று மறுபடியும் யாரோ அழைத்தபோது “அடடா சுற்று முற்றும் பார்த்தோம் கற்பாறையின் மேல்பக்கம் பார்க்கவில்லையே. கேவலமானவன் மேலிருந்து கொண்டு நான் உடை மாற்றுவதை பார்த்து விட்டானே” என்று வெட்கிப் போனவள் அவனை மனதுக்குள் சபித்தவாறே கற்பாறையின் மேற்பக்க வழியே அவன் நடந்து வந்தபோது கண்ட காட்சியால் அதிர்ந்து சிலையானாள்!

காரணம் அத்தனை நேரமும் அவளை “உஷ்...உஷ்....”என அழைத்தது மாத்திரமில்லாமல் அவளின் மொத்த அழகையும் படமெடுத்த வண்ணம் அங்கே ஒரு கீரியுடன் சண்டை பிடித்துக் கொண்டிருந்தது ஒரு நாகம். கரப்பான் பூச்சிக்கே காட்டுக் கூச்சல் போடும் சித்ரா, பாம்பையும் கீரியையும் கண்டு “ஐயய்யோ! யாராவது காப்பாத்துங்களேன்!” என்று போட்ட சத்தத்தில் தூரத்தில் இருந்து யாரோ ஒருவன் ஓடிவந்தான். உடனே ஒரு கல்லை தூக்கிப் போட்டு இரண்டையும் விரட்டிவிட்டு “இப்போ போங்க என்று பாதை விட்டவனுக்கு ரொம்ப நன்றிங்க ரமேஸ்....நேற்று நடந்தது எதையும் மனசுல வச்சுக்காதீங்க” என்று கூறிவிட்டுப் போனாள். அந்த வார்த்தைக்குப் பின் அந்த தோட்டத்தில் பலரும் “உஷ்...இதையாருக்கும் சொல்லிடாதீங்க. நம்ம வீராசாமி மகன் ரமேஸுக்கும், ராமசாமி மக சித்ராவுக்கும் ஒரு இதுவாம்” என்ற கதையை பரப்ப கதை நிஜமாகியதன் உண்மை ராமசாமிக்கு தெரியவந்துவிட்டது.

“போயும் போயும் ஒரு ஊதாரிக்கா என் மகளை கொடுக்கிறது” என்று காதும் காதும் வைத்தாற் போல் வேறொரு தோட்டத்தில் இருக்கும் உறவினர் மூலம் ஒரு மாப்பிள்ளையை மூக்கும் முழியுமாக இருக்கும் தன் மகள் சித்ராவிற்கு கட்டிவைத்து விட்டார். இப்போ வாயும் வயிறுமா இருக்கும் அவள் போன இடத்தில் இரவும் பகலும் வீட்டுக்குள்ளே “உஷ்...உஷ்...”ன்னு சத்தம் கேட்டுக் கொண்டிருக்கு. இது கணவனும் மனைவியும் பேசிக்கொள்ளும் அந்தரங்க விஷயங்களுக்காக அல்ல, மகள் வாழ்க்கை கண்முன்னே சீரழிந்து போகக்கூடாது என்பதற்காக, கண் காணாத தூரத்திற்கு மாப்பிள்ளை யார் என்ன என்று தெரியாமல் அவசரப்பட்டு கட்டிக் கொடுத்தாரல்லவா ராமசாமி. அந்த மாப்பிள்ளையின் தொழில் இரகசியமல்லவா அது. வீட்டுக்குள் வாழவேண்டிய மகளை வீதியில் வித்தை காட்டி பிழைக்கும் பாம்பாட்டிக்கல்லவா கொடுத்துச் சீரழித்துவிட்டார்!

**-மெய்யன் நட்ராஜ், டோஹா - கட்டார்.**

# சாணக்கியன்

இருண்ட மேகங்கள் திரண்டிருந்த வானமாய் அவள் முகம் கறுத்திருந்ததை வீட்டினுள் நுழையும் போதே கண்டு, இன்று நிச்சயம் ஒரு இடி முழக்கம் வீட்டை இரண்டு படுத்தப் போகிறது என்பதைக் கணித்து விட்டேன் நான்.

மௌனமாகச் சென்று முகம், கை கால்களை அலம்பி சாரத்தினுள் என்னை நுழைத்துக் கொண்டு வந்து கால்களை நீட்டி அமர்ந்து டீ.வி. பார்க்கத் தொடங்கினேன். கண்கள் டீ.வி.யிலும் கவனம் முழுக்க இன்று என்ன இடி இடிக்கப் போகிறது என்பதிலும், அதனை எப்படிச் சமாளிப்பது என்பதிலும் ஓடியது. எதிரியின் தாக்குதல் எந்தத் திசையில் இருந்து, எதனால் நடக்கும் என்பது தெரியாத படைவீரனாய் மனதுக்குள் டென்ஷன் என்னைப் பாடாய்ப் படுத்தியது.

எனக்கென்று பக்கத்து ஸ்டூலில் வந்தமர்ந்தது தேநீர்க் கோப்பை. அதில் பறந்த ஆவி அதன் சூட்டையும் வைத்தவளின் சூட்டையும் சொல்லாமல் சொல்லியது. கடவுளே! முடிந்தால், உனக்குச் சித்தமிருந்தால் இன்றைய யுத்தத்தினை ஒத்தி போடப்பண்ணு என்ற வேண்டுதலுடன் தேநீரை எடுத்து வாயில் வைத்தேன். வைத்த வேகத்தில் “ஸ்ஆஆ” என்று உதறிக் கொண்டேன்.

சரீரென்று வந்த கோபத்தினையும், எரிச்சலையும் கப்பென்று பொத்தி அடக்கிக் கொண்டேன். எங்கே!? நான் கத்த அதுவே யுத்தத்தின் ஆரம்பப் புள்ளியாகி விடுமோ? என்ற முன்னெச்சரிக்கையுடன் ஊதி ஊதித் தேநீரைக் குடித்து முடித்தேன்.

மனதுக்குள் ஒரு சாணக்கியன் வேலை செய்ய ஆரம்பித்தான். என்னவென்று தெரியாத யுத்தத்துக்கு வியூகம் வகுப்பதையும் விட அந்த யுத்த மேகத்தையே கலைத்து விட்டால்!? ஆம் அதுதான் சரி என்ற முடிவுடன் குடித்த தேநீர்க் கோப்பையுடன் குசினிக்குள் சென்று அதனைக் கழுவிக் கொழுவிய படியே என்னவளை நோட்டம் விட்டேன்.

அடுப்பில் எதனையோ வைத்து எரியும் அடுப்புடன் போட்டி



போட்டு எரிவதைப் போல் நின்று கொண்டிருந்தாள். என்னை ஏனென்றும் ஏறெடுக்காமல் அவள் நின்றது என்னுள் ஒரு ஈகோவைத் தூண்டியது. உடனே அதைத் தூக்கி எறிந்து விட்டு மெதுவாக அவளின் பின்புறமாகச் சென்று அவளைக் கட்டியணைத்து பிடறியும் கழுத்தும் காதும் சந்திக்கும் அந்தப் புள்ளியில் என் முகத்தைப் புதைத்தேன். ஆஹா எரிமலையொன்று எவரெஸ்ட் பனிமலையாய் குளிர்ந்து சிலிர்த்தது போல் சிணுங்கினாள். அந்தச் சிலிர்ப்பு அடங்க முன் அவளது அதரங்களைத் திருப்பி என் அதரங்களை அழுத்தி ஏற்றி எடுத்து விட்டு வெற்றி வீரனாய் நிமிர்ந்த நடையுடன் வந்து டீ.வி.யின் முன் அமர்ந்தேன்.

வெட்கமும், சிலிர்ப்பும் அடங்கி குளிர்ந்த பனி மலையில் மலர்ந்த பூவாய் வெளியே வந்தவள் “இஞ்சேப்பா! நீங்க அன்றைக்கு எனக்கு வாங்கின மூக்குத்தியை ஏன் முதல்ல மாமிட்ட காட்டினீங்கள்?”

ஓஹோ இங்கு தான் ஏதோ சிக்கல் இருக்கிறது என்பது புரிய. “ஏனம்மா அப்படிக் கேக்கிறீங்கள்?” என்றேன்.

“இல்லை இன்றைக்கு மாமி வந்தவ. நீங்க மூக்குத்தியை முதல்ல அவட்ட காட்டினதப் பற்றிச் சொன்னா. நீங்க எனக்கு வாங்கினதை யாரிட்டையும் காட்டாம என்னட்ட தந்திருந்தால் இது நீங்க வாங்கித் தந்தது என்று சொல்லிப் பெருமைப் பட்டிருப்பன் தானே! ஆனாலும் நீங்கள் சரியான மோசம்” என்று செல்லக்கோபத்துடன் தன் ஆதங்கத்தை சொல்லிவிட்டு உள்ளே சென்றாள்.

அப்பாடா இதுதான் பிரச்சனையா? ஆனாலும் இந்தப் பெண்களை புரிந்து கொள்ளவே முடியவில்லையே! என்ற ஏக்கத்துடன் ஒரு வழியாக ஒரு முத்தத்துடன் சத்தமின்றி யுத்தமின்றி நிலைமையை சிக்கெடுத்த என் சாணக்கியத்தை நானே மெச்சிக் கொண்டேன்.

**-கேஹரன், ஹாலி - எல.**

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

### உங்கள் கடமைகளை முழுமையாக நிறைவேற்றுங்கள்

ஒருவர் தன் வாழ்க்கையை வாழ முற்படுகையில், சில கடமைகளைச் செய்யவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. உண்மையிலேயே பார்க்கப் போனால், ஒருவர் பிறக்கும் போது சில கடமைகளைச் செய்ய வேண்டும் என்ற எண்ணங்களோடுதான் பிறக்கிறார். பின் நாளடைவில் அது ஒன்றன் பின் ஒன்றாகச் சேர்ந்து தேக்கமடைந்து விடுகிறது. தன்னை உலகிற்கு கொண்டு வந்து, வளர்த்து ஆளாக்கியதற்கு, தன் பெற்றோருக்கு ஒருவர் நன்றிக்கடன் படவேண்டும் என்ற எண்ணமானது உலகில் ஒன்றும் புதியதல்ல. பெற்றோர்களுக்கு இது ஒரு பெரிய பெருமையாகும். வழக்கமாகச் செய்யும் பணியினை கடினமாக்கி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் இது ஒரு ஏற்றுக்கொள்ளக்கூடிய கடமையாகும். ஏன் குழந்தைகள்கூட இவ்வாறு எண்ணலாமே! மேலும் வாழ்க்கையின் கால ஓட்டம் நிற்காமல் தொடரும் போது, மற்றக் கடமைகள் சேர்ந்து, தேக்கமடைகின்றன. - மற்ற மனிதர்களுக்கு, நண்பர்களுக்கு, தான் வசிக்கும் சமூகத்திற்கு, ஏன் இந்த உலகத்திற்குக் கூடத்தான்.

ஒருவர் தன்னுடைய கடமைகளைச் சரிவர செய்யாமலோ அல்லது செய்வதற்கு அனுமதிக்காமலோ விடுவது ஒரு அளவுகடந்த அதிருப்தியூட்டும் செயலாகும்.

- 'மகிழ்ச்சி' எனும் நூலிலிருந்து.

## இளமையில் துள்ளாட்டம் முதுமையில் தள்ளாட்டம்

"அட, நீங்களும் இங்கேதான் இருக்கிறீர்களா?" என்று கேட்டபடி வள்ளியப்பாவை புன்னகையோடு நெருங்கினார் முத்தரசர். இருபுறமும் வெள்ளிப் பூண்களுடன் இருந்த தடியை ஆற்று மணலில் ஊன்றி நடக்கச் சிரமப்பட்டார். வந்து சேர்ந்துவிட்டதை ஒரு சாதனை எனக் கருதத்தக்க வகையில் நீண்ட பெருமூச்செறிந்து, நடுங்கும் கால்களை மடித்து வள்ளியப்பா அருகில் அமர்ந்தார். ஊன்று கோலை வாகாக அருகில் கிடத்திக் கொண்டார். ஒருவாறு இருந்து கொண்டு விட்டதில் பெரும் நிம்மதியடைந்தவராக ஒரு புன்னகையையும் வெளிப்படுத்தினார்.



காலை நீட்டி அமர்ந்தவாறே முத்தரசரின் சிரமங்களையெல்லாம் கவனித்து அவருக்குப் பதில் எதுவும் சொல்லாதிருந்த வள்ளியப்பா, திரும்பவும் ஆற்றைப் பார்த்து "ஹும்" என்று மெல்ல முனகினார்.

தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட முத்தரசர், "வந்து நீண்ட நேரமா?" என்றார்.

அவரது இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் ஆற்றின் சலசலப்பில் லயித்தவராகச் சிறிது நேரம் இருந்தார்

**தருவது முழடில்யன்**

வள்ளியப்பா. பின்னர் தமக்குள்ளே முணு முணுப்பவர் போல, "ஓட்டம், துடிப்பு எல்லாம் அடங்கிவிட்ட நமக்கு காலம் காலமாக எந்தத் தளர்ச்சியுமின்றி ஓட்டமாக ஓடிக்கொண்டிருக்கும் இந்த ஆற்று நீரைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறு மகிழ்ச்சி ஏது....!" என்றார்.

பிறகு, அதிகம் பேசிவிட்டவர் போன்ற களைப்பில் இருமி மூச்சு வாங்கிக்கொண்டார்.

"ம்...ம்... ஒரு பொழுதேனும் இந்தச் சூழலும்.... இங்கிருந்து காற்றையும் சுவாசிக்கா விட்டால் தூக்கம் வராமல் மூச்சு முட்டத் தொடங்கிவிடுகிறது" என்று ஒத்துக்கொண்டார் முத்தரசர்.

இருவரும் மௌனமாக ஆற்றின் அக்கரையைப் பார்த்தபடி அமர்ந்திருந்தனர்.

அக்கரையில் ஆண்களும் பெண்களுமாகப் பலர் நீராடிக் கொண்டிருந்தனர். இளைஞர்கள் மரக்கிளைகளில் ஏறி ஆற்றின் நீர்ப்பரப்பைக் கிழித்து உட்சென்று மேலே மிதந்தனர். மிதந்த அவர்கள் கரங்களில் ஆற்றின் அடிமணல் இருந்தது. அது ஒரு போட்டியாகத் தொடர்ந்தது. அந்தச் சாகசம் கண்டு வியந்தபடியும் தங்களுக்குள் சிரித்தபடியும் நீருக்குள் நுழைந்து விளையாடிய இளம் பெண்கள் வாலிபர்கள் மேலும் மேலும் புரியத் தூண்டுகோலாயிருந்தனர். நீரின் தகதகப்பை மீறி ஒளி வீசியபடி மங்கையரும் ஆற்றில் மிதந்து விளையாடினர்.

அந்த உல்லாசம் கிழவர்களிடமும் தொற்றியது. முத்தரசர் எழுந்தார். "வாரும், ஆற்றில் இறங்கிக் காலையாவது கழுவிவிட்டு வரலாம்."

வள்ளியப்பா அசையாது இருந்தார். "காலை நனைத்து என்ன சுகம் காணப் போகிறோம்? இரும், என்னால் நடக்க முடியாது. இளசுகள் விளையாடட்டும், நம் வயதுக்கு அதைப் பார்க்க மட்டும்தான் முடியும்...." என்றார் சிரித்தபடியே.

இவர் பேச்சைக் காதில் வாங்காதவராக ஆற்றை நோக்கி நடந்து சென்றார் முத்தரசர்.

அவர் கோலை ஊன்றித் தள்ளாடியபடியே நடந்து செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு அக்கரைக்குக் கண்களைச் செலுத்தினார் வள்ளியப்பா.

ஈர ஆடைகளோடு ஆற்றிலிருந்து கரையேறிய பெண்கள், மணல் பொம்மைகள் செய்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். தங்கள் கூந்தலிலிருந்து கழற்றி வைத்த பூக்களை எல்லாம் அந்த பொம்மைகளுக்குச் சூட்டி அழகு பார்த்தார்கள்.

நீருக்குள் வாலிபர்களின் துள்ளல்களும் குறைந்திருந்தது. நீர் மறைப்பிலிருந்து வெளிப்போந்த மங்கையரின் அழகுடல்களை ஆசைதீர மேய்ந்தன அவர்களது கண்கள். துணிச்சலான சில இளைஞர்கள் அவர்களை நோக்கி வேகமாகக் கரையேறவும் முற்பட்டார்கள். அதுகண்டு கூச்சலிட்டபடி மீண்டும் துள்ளிப் பாய்ந்து நீருக்குள் மூழ்கினார்கள் யுவதிகள்.

அவர்கள் பின்னாலேயே வாலிபர்களும் நீருக்குள் மூழ்கி மறைந்தார்கள்.

இப்போது அவர்கள் எங்கே என்று தேடுவதிலும், மறைந்து வந்து நீரினடியில் குறும்புகள் செய்வார்களா என்ற குறுகுறுப்புடனும் பெண்கள் தங்களுக்குள் கைகோர்த்தபடி இன்பப் பரபரப்புடன் காத்திருந்தார்கள்.

இளைஞர்கள் திடீரென மறுகரையில் மிதந்து மருதமரக் கிளைகளில் ஏறி திடுமென ஆற்றில் குதித்தார்கள்.

பெண்கள் தங்களுக்குள் சிரித்தபடி கைகளை வீசி நீந்தத் தொடங்கினார்கள்.

முத்தரசர் கால்களைப் பாதி நனைத்ததும் நனையாததுமாகத் திரும்பி வந்தார். "அப்பப்பா! என்ன குளிர்! உச்சந்தலை வரை சுரீரென்று ஏறுகிறது" என்றபடி வந்தமர்ந்தார்.

வள்ளியப்பா சிரித்தார். "நம்முடைய காலம் இல்லை இது. அதோ பாரும், அவர்களின் காலம்!" லேசாக இருமல் வந்தது அவருக்கு. "இப்படி இருமி இருமிப் பேசும் வயது நமக்கு. குளிரே ஆகாதபோது குளிப்பென்ன வேண்டிக்கிடக்கிறது!"

"ம்!" என்று நீண்ட பெருமூச்சு விட்டார் முத்தரசர்.

"இவர்களைப் போல நாமும் இருந்த காலத்து ஏக்கத்தில் நாம் மறுகுவதை அந்தப் பிள்ளைகள் உணர்வார்களா? நன்றாக விளையாடட்டும். நம்மைப் போல் வயதாகிவிட்டால் அவர்களும் பிறகு கவலைப்பட நேரும்."

வள்ளியப்பா சிரித்தபடியே, "இளமை இவற்றை அறியாது. அறிந்து, அவர்கள் உல்லாச நேரத்தைப் பாழாக்கிக் கொண்டிருக்கவும் வேண்டாம்" என்றார்.

***இனி நினைந்து இரக்கம் ஆகின்று***
***திணி மணல் செய்வுறு பாவைக்குக்***
***கொய் பூத்தைஇ, தண் கயம் ஆடும்***
***மகளிரொடு கை பிணைந்து, தழுவு வழித்***
***தழீஇ, தூங்கு வழித் தூங்கி, மறை எனல்***
***அறியா மாயம் இல் ஆயமொரு***
***உயர்சினை மருதத் துறை உறத் தாழ்ந்து***
***நீர் நணிப் படி கோடு ஏறி, சீர் மிக***
***கரையவர் மருள, திரையகம் பிதிர***
***நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து***
***குளித்து மணற் கொண்ட கல்லா இளமை***
***அளிதோ தானே! யாண்டு உண்டு***
***கொல்லோ***
***தொடித் தலை விழுத் தண்டு ஊன்றி***
***நடுக்குற்று இரும் இடை மிடைந்த சில***
***சொற் பெரு மூதாளரேம் ஆகிய எமக்கே?***

(புறம்: 243)

**நீங்கள் சொல்லுங்கள். என்ன நடக்கிறது இங்கே?**

-நா.பிரியா, மொறகொல்ல.

என்னத்தைச் சொல்லி.....என்னத்தை..... ஹும்ம்.....மனசாட்சியைச் சாகடித்தவர்கள் பேசிக்கொண்டும், எழுதிக்கொண்டுமிருக்கிறார்கள். மனசாட்சி எஞ்சியுள்ள சிலரோ வாய்மூடியுள்ளார்கள்.

**நடிகர்களில் மட்டுமல்லாது பாடகர்களிலும் ஆண்பாடகர்கள் பெறும் முக்கியத்தையும் பிரபல்யத்தையும் பெண் பாடகிகள் பெறுவதில்லையே ஏன்?**

-கி.அருள்ராஜ், கொக்காகலையூர்.

சுசிலா, ஜானகி, சித்ரா, சுஜாதா எல்லாம் எந்த வகையில் குறைந்தார்கள்!......சரி விடுங்கள். சமீபத்தில் வந்த ஐயா படப் பாடல் கேட்டீர்களா..... ஒரு வார்த்தை பேச ஒரு வருசம்....பெண் குரல் பிரதான நாதஸ்வரக்காரர் போல கணீரென்று பல சங்கதிகளைப் பேசி மேற்செல்கிறது. ஆண்குரல் ஒத்தூதும் நாயனக்காரர்போல பின்னால்தானே தொடர்கிறது!

**ஒருவர் தன்னிஷ்டப்படி எல்லாம் உங்களை ஆட்டிப்படைக்கிறார். உங்களால் அவரிடமிருந்து தப்பவும் முடியவில்லை. எதிர்க்கவும் முடியவில்லை என்றால் என்ன செய்வீர்கள்?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

ப்பூ...இதுகூடத் தெரியாமல் வாழ முடியுமா! அவருக்கு நான் மரியாதை அளிப்பதாக நினைத்துக் கொள்வேன். மற்றவர்களைக் குழப்பிக்கொண்டிருக்க வேண்டாம் என்றுதான் எப்போதும் சிரித்தபடி இருக்கச் சொல்கிறார்களா!

**சொந்த மண்ணிலேயே பாகிஸ்தானிடம் இந்தியா தோற்றது ஏன்?**

-எஸ்.பி.போல், கொழும்பு - 11.

அஃப்ரிடி மழை பொழிகிற ஒரு தாக்குதல் களத்தை எதிர்கொள்வதற்கு, அடுத்த அணியின் முதல் பதினைந்து ஓவர்களுக்கு குறைந்தது இரண்டு தற்கொலைப் படையாளிகளாவது பந்துகளை நொறுக்க முன்வர வேண்டும். டிராவிட், டெண்டுல்கர் போன்றோர் முன்னரங்க நிலைகளுக்குச் சென்று மரபுவழிப் போரை ஆரம்பிப்பது படையணியின் நம்பிக்கையைச் சிதறடிப்பதாகவே முடிகிறது. 275க்குக் குறைவான ஓட்டங்களுக்குப் பதிலளிக்கவே மரபான முறைகள் உதவும். முதலில் தற்கொலைக்குத் தயாரான போராளிகளைத் தெரிவு செய்து, வீரமான வார்த்தைகளைச் சொல்லி உஷாரேற்றி அனுப்பிவிட்டுப் பின்னால் இருந்திருக்க வேண்டும் தலைவர்.

அதுதான் வெற்றிப் போர் முறை!

**சந்திரமுகி எப்படி?**

-எஸ்.ரீமா, அக்பர் டவுண்.

ஒரு ரஜினி ரசிகனின் ஏமாற்றம் : "தலைவருக்கு புதிதாகச் செய்து காட்ட எதுவுமில்லையா?"

**மாறாதது எதுவும் இல்லையா?**

-ஹஸீன் றஸ்மின், றஹ்மத்புரம்.




**எது புத்திசாலித்தனம்?**

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

இதை என்னிடம் கேட்காமலிருப்பதும் தான்!

**நெடுங்கணக்கு விட்டு க.....தொட்டு சூ....சொ....என்று சர்ச்சை தொடர்கிறதே! இது எதில் முடியப் போகிறது சிந்தியா?**

-சி.அருண், மட்டக்களப்பு.

பு.....இல்லாமல் போவதில்!

**சிரிக்கும் போது சிந்திக்க முடிவதில்லை. அது ஏன்?**

-பி.எம்.எம்.றிஸ்வி, மீராவோடை - 04.

அடடா, அப்படியா! உங்கள் சிந்தனையால் தினமும் கேட்டுக் கொண்டிருக்கும் மனைவியும் முயற்சித்தாள் உம் மாறவே இல்லையே!

**கிழக்கில் தற்போது நடைபெறும் தாக்குதல்களை அரச படையினர் செய்வதாகவோ, படை முகாம்களுக்குள்ளிலிருந்து வருபவர்கள் செய்வதாகவோ காட்டமாகக் கண்டித்து எழுதுவதை நம் பத்திரிகைகள் கைவிட்டுவிட்டனவே..... ஏன்?**

-இரா.முகுந்தன், கொழும்பு - 05.

சேச்சே...அதில்லை இப்ப பிரச்சினை. கிழக்கு மக்களிடையே உள்ள முக்கியஸ்தர்களையும் நம் பொடியள் போடத் துவங்கியிருக்கிறார்கள். இதை அரசாங்கத்தை, படையினரை எதிர்க்கும் நடவடிக்கைதான் இதுவும் என்று காட்டுவது.... அதுதான் இப்போதைய குழப்பம்! (நம்மவர்கள் செய்யும் ஒவ்வொரு கொலையும் நம் தேசியத்தின் விடுதலைக்காகத்தானிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இப்ப கிழக்கில் ஒரு பொங்கு தலையோ எழுச்சியையோ பிரமாண்டமாய் நடத்திக்காட்டி, தேவையான கொலைகள்தான் இவை என்று மக்களைக் கொண்டே ஆர்ப்பாட்டமாய்க் காட்டிவிட்டார்களென்றால் எவ்வளவு ஆறுதலாயிருக்கும்.....!)

## சிந்தியா பதில்கள்

**நீங்கள் ஜனநாயகவாதியா? சோஷலிஸவாதியா? முதலாளித்துவவாதியா?**

-ரி.அதிசயராஜ், விநாயகபுரம்.

நான் தமிழன்; ஏகப்பிரதிநிதித்துவ வாதி!

**தமிழ்க் கலாசாரம் எது?**

-இ.வதனி, கொழும்பு - 13.

இன்றைய அனுபவத்திலிருந்து என்னால் அறிந்துகொள்ள முடிவது இதைத்தான் :

மாட்டுக்குப் பொங்கல் கொண்டாடிக் கொண்டு மனிதர்களைப் போட்டுத் தள்ளுகிறவர்கள் நாம்!

**மாற்றுச் சிந்தனை ஏன் அவசியம்?**

-க.அஜந்தகுமார், அக்கரைப்பற்று - 07.

நம்முடைய துக்கத்திற்கெல்லாம் வேறு யாரையாவது காரணமாகச் சொல்லிக்கொண்டிருப்பது மனித மனத்தின் இயல்பு. நம்முடைய எந்தத் தன்மை இந்தத் துக்கத்திற்குக் காரணமாக இருக்கிறது என்று யோசித்துப் பார்ப்பது சிலவேளை துக்கத்திற்கு முடிவைக் கொண்டுவரக் கூடும்.

சும்மா ஒரு சுவாரஸ்யத்திற்காக இந்தக் கதையையும் கேளுங்கள் :

விசிறிகள் விற்கும் ஒரு வியாபாரி, தன் விசிறிகளின் பெருமையையும் தனித்தன்மையையும் வானளாவப் புகழ்ந்து கொண்டிருந்தான்.

ஒரு ரூபா கூடப் பெறுமதியில்லாத அந்த விசிறிகளில் அப்படி என்ன விசேஷம் என்று ஆச்சரியப்பட்ட அரசன், அந்த வியாபாரியை அழைத்து விசாரித்தான்.

விசிறி ஒவ்வொன்றும் நூறு ரூபா. அவற்றின் தரத்தை வைத்துப் பார்த்தால் இந்த விலை மிகக் குறைவானது என்றான் வியாபாரி.

அரசனுக்குக் கோபம் வந்தது. "இந்தச் சாதாரண விசிறிக்கா அந்த விலை சொல்கிறாய்? முழு மோசடிக்காரனாக இருக்கிறாயே!" என்றான் அரசன்.

"இல்லை அரசே! இந்த விசிறிகள் நூறு ஆண்டுகள் வரை எந்தப் பழுதுமில்லாமல் உழைக்கக்கூடியவை. இல்லையெனில் நான் அதற்கு முழுப் பொறுப்பும் ஏற்கிறேன்."

ஆச்சரியமடைந்த அரசன், அந்த விசிறிகளில் ஒன்றை வாங்கினான். மூன்றே நாட்களில் அதன் பிடி கழன்றுவிட்டது. ஒரு வாரத்தில் அந்த விசிறியே சிதைந்துபோனது.

ஆத்திரமடைந்த அரசன், வியாபாரியை அழைத்துவரக் கட்டளையிட்டான்.

"முட்டாளே! என்னை ஏமாற்றுமளவுக்குத் தைரியமா உனக்கு? அல்லது பைத்தியக்காரனா நீ? என்று வெடித்தான் அரசன்.

வியாபாரி மிகவும் பணிவோடு, "அரசே என் விசிறி கண்டிப்பாக நூறு ஆண்டுகள் உழைக்கக் கூடியது. அரசருக்குத்தான் விசிறிகள் உபயோகித்துப் பழக்கம் இல்லைப் போலிருக்கிறது....அதுதான் கிழிந்துவிட்டது....." என்றான்.

"அடே, நன்றாயிருக்கிறது. எனக்கு விசிறுவதற்குக் கூடக் கற்பிப்பாய் போலிருக்கிறது. டேய், யாரங்கே!" என்று சத்தமிட்டான் அரசன்.

"தயவுசெய்து கோபப்படாதீர்கள். விசிறி கிழிந்திருக்க எந்த நியாயமுமில்லை. எப்படி விசிறினீர்கள் என்று காட்ட வேண்டும் பிரபு" என்றான் வியாபாரி தாழ்மையோடு.

அரசன் விசிறியை எடுத்தான். சாதாரணமாக ஒருவன் எப்படி விசிறுவானோ அப்படி விசிறிக் காண்பித்தான்.

உடனே வியாபாரி, "எனக்குப் புரிந்துவிட்டது. இதுதான் நடந்திருக்கிறது. நீங்கள் இப்படி விசிறக் கூடாது" என்றான்.

"பின்னே எப்படி விசிறுவது?"

வியாபாரி சொன்னான். "விசிறியை அசையாமல் பிடித்துக்கொள்ள வேண்டும். அதன் முன்னே உங்கள் தலையைத் தான் பக்கவாட்டில் அப்படியும் இப்படியுமாக அசைத்துக்கொள்ள வேண்டும். அப்போது இந்த விசிறி நூறு ஆண்டுகள் உழைக்கும். விசிறியை ஆட்டிய தவறு உங்களுடையதுதான். குற்றம் என் விசிறியுடையதல்ல!"

வேறு வேறு விதமாகச் சிந்திக்க வேறுவேறு விதமான விடைகள் கிடைக்கும் என்பதுதானே உண்மை!




பாகிஸ்தான் அணி சார்பில் 26 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொண்டுள்ள காசிம் ஒமார் எனும் வீரர் பஞ்சாப், உருது, ஆங்கிலம், பிரெஞ்ச் மற்றும் ஸ்வாஹிலி போன்ற மொழிகளில் சரளமாகப் பேசக்கூடியவர். அதே நேரம் இம் மொழிகளில் எழுதவும் படிக்கவும் நன்கு தேர்ச்சி பெற்றவருமாவார்.


கைக் வாட்

இவர், பாகிஸ்தான் அணி சார்பில் கலந்து கொண்டுள்ள 26 டெஸ்ட் போட்டிகளில் 1,502 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். சராசரி 36.63 ஆகும். இதில் 3 சதங்களும் 5 அரைச் சதங்களும் அடங்குகின்றன. டெஸ்ட் போட்டி ஒன்றின்போது இவர் பெற்றுக்கொண்ட ஆகக் கூடுதலான ஓட்ட எண்ணிக்கை 210 ஆகும்.

இதே நேரம் நியூசிலாந்து அணி சார்பில் 61 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள, சிறந்த வீரர்களுள் ஒருவரான பெவன் கொன்டன் என்பவர் பிரபல ஜேஸ் இசைக் குழுவொன்றின் உறுப்பினராவார்.

இவர் ட்ரம்பெட் வாத்தியக் கருவியை இசைப்பதில் திறமை பெற்று விளங்கியதுடன், ஸ்பைக் மிலிகன் எனும் புகழ் பெற்ற ட்ரம்பெட் இசைக் கலைஞரைப் போன்று புகழ் பெற்றும் இருந்துள்ளார்.

இவர் கலந்துகொண்ட 61 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளின்போது, இவர் 3,448 ஓட்டங்களைப் பெற்றுள்ளார் (சராசரி 32.22) இதில் 7 சதங்களும் 17 அரைச் சதங்களும் அடங்கு கின்றன. 176 ஓட்டங்களே டெஸ்ட் போட்டியொன்றின்போது இவர் பெற்ற ஆகக் கூடுதலான ஓட்டங்களாகும்.

பந்துவீச்சில் இவர் 59 விக்கெட்டுக்களை (சராசரி 36.50) கைப்பற்றிள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

***இனி, டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களில் தாடி வைத்தவர்கள் எனப் புகழ் பெற்ற வீரர்கள் பின்வருமாறு:***

டபிள்யூ. ஜே. பிறேஸ், ஜி. பொனர், மைக் ஹென்றிக், மைக் பியர்லி, அப்துல் கதீர், நவ்ஜோத் ரிஸ் பத்து, ஜே. பிளக்ஹெம், கிறேக் செப்பல், விஷென் ரிஸ் பெடி, லென் போர்டர், லோட் ஹெலிஸ், சயிட் அன்வர் (பிற்காலத்தில்) தற்போது இன்சமாம் உல் ஹக், சையிட் அப்ரிடி எனச் சிலர் அடங்குவர்.


***இதே நேரம் கண்ணாடி அணிந்து காணப்பட்டவர்கள் பின்வருமாறு:***

சஹீர் அப்பாஸ், எம்.ஜே.கே. ஸ்மித், டொமி மிச்சேல், மஹாராஜா வியின் க்ராம், க்ளய்வ் லொய்ட், போல் லெட், அன்சுமான் கைக்வட், போல் கிப், பொப் கிறிஸ்தியானி, ரோய் மாஷல், பர்ஸி பென்டர், திலீப் தோஷி, ஜே.என். க்ரோபட், ஜெப் ஹொவார்த், ஜெப் பொய்ளெட், டேவிட் ஸ்டீல், டெரெக் வெல்ஹெம், பிஷென் லிஸ் பெடீ, பீற்றர் வென்டர் மர்வ், ஜீ.வி.ரயிட், வோல்ட்டர் ஹெட்லி, எல்ப் வொலண்டயின், கோர்டன் பிலினிஜ், பில் போவுஸ், ஜெப் கோப், எடீ ஹைமின்ஸ்சஸ், லோரன்ஸ்ரோ, எடீ பார்லோ, பன்கஜ் ரோய், பர்ஸி மென்சல், ரே பிலிப், கிமரே பெனட், அடனியல் விட்டோலி.

***பின்வருமாறு:***

பொப் டேலர், ரோஸ் எட்வர்ட்ஸ், பிரெட் டிட்மஸ், பில் பிலிபித், ஜெப் பின்கல்டன், டெனிஸ் ஏமிஸ், லயன்ஸ் டெனிசன், பிரடி பிரவுன், வோல்ட்டர் எட்லி, வொலிக் ஆம்ஸ்ட்ரோங்.

இதே நேரம், பர்ஸி பென்டர், பில் மீட், வில்பிரெட் ரோட்ஸ் மற்றும் செமுவெல் மொரிஸ்


விட்டோலி

ஆகிய வீரர்கள் பிற்காலத்தில் கண்பார்வை இழந்தவர்களாகக் காணப்பட்டனர்.

விளையாட்டுத் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் இறந்தவர்கள் பின்வருமாறு:

போலோ விளையாட்டில் ஈடுபட்டிருந்தபோது இப்திகார் அலி பதவுதி மாரடைப்பு ஏற்பட்டுக் காலமானார்.

கொல்ப் விளையாட்டில் ஈடுபட்டிருந்த சமயம் பல் வுட்புல் மாரடைப்பு ஏற்பட்டுக் காலமானார்.

பில் மர்டோவ், 1910ஆம் வருடம் அவுஸ்திரேலிய மெல்பர்ன் நகரில் தென்னாபிரிக்க அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியொன்றை பார்த்துக் கொண்டிருந்தபோது பந்து தலையில் பட்டு அந்த இடத்திலேயே காலமானார்.

இந்திய அணி சார்பில் விளையாடிய ராமன் லம்பா விளையாட்டு மைதானத்தில் இருந்த போது பந்து தலையில் பட்டதால் காலமானார்.

அடுத்த வாரம் மேலும் சில கிரிக்கெட் வீரர்களைப் பற்றிப் பார்ப்போம்.

**- மைந்தன்**

## இந்திய அணிக்கு புதிய பயிற்றுவிப்பாளர்

இந்திய அணி தொடர் தோல்விகளைச் சந்தித்துக் கொண்டு வந்த நிலையில் இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் தற்போது ஓய்வு பெற்றுள்ளார். இவரின் இடத்திற்கு அடுத்ததாக யார்? என்று பலர் போட்டியிட்டனர். ஆயினும் இந்திய அணியின் புதிய பயிற்றுவிப்பாளராக ஓய்வுபெற்ற அவுஸ்திரேலிய அணியின் டெஸ்ட் கிரிக்கெட் வீரர் டீன் ஜோன்ஸ் என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 45 வயதான இவர் 52 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றி 3631 (சராசரி 46.55) ஓட்டங்களைக் குவித்த பெருமை உடையவர். 164 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றி 6068 ஓட்டங்களைச் (சராசரி 44.61) சேர்த்தவர். இது பற்றி இவரிடம் கேட்டபோது, நான் 58 தடைவைகள் இந்தியாவுக்கு எதிரான போட்டிகளில் விளையாடியுள்ளேன். இன்று நான் இந்திய அணிக்குப் பயிற்றுவிப்பாளராக வருவதையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இந்திய அணியிலிருந்து



திறமையான ஒரு ஆட்டத்தை வெளிக்கொண்டுவருவதற்குத் தான் சகல முயற்சிகளையும் எடுப்பேன் என்று பெருமிதத்துடன் கூறும் ஜான்ஸ், இந்தியாவுக்கு எதிராக 1986ஆம் ஆண்டு 210 ஓட்டங்களை 8 மணித்தியாலங்கள் 20 நிமிடங்களில் குவித்துச் சாதனை படைத்தவர் என்பதும் குறிப்பிடத் தக்கது. பயிற்றுவிப்பாளர் மாற்றப்பட்டாலாவது இந்திய அணி வெற்றி அடையுமா?

## அடுத்த போட்டியில் பங்குபற்றுவேன்



பாகிஸ்தான் அணியின் அதிவேகப் பந்து வீச்சாளரான சொஹ்ய்ப் அக்தர் கடந்த சில போட்டிகளில் பாகிஸ்தான் அணி சார்பாக விளையாடுவதற்கு ஐ.சி.சி. தடை விதித்தது. இத் தடையினை ஐ.சி.சி.ஆனது தற்போது இத்தடையினை நீக்கியுள்ளது என்பது பாக்கிஸ்தான் இரசிகர்களுக்கு இனிப்பான செய்தி ஒன்றே. 29 வயதான சொஹ்ய்ப் அக்தார் 144 டெஸ்ட் விக்கெட்டுக்களையும் 186 ஒரு நாள் சர்வ்தேச விக்கெட்டுகளையும் பெற்றுளார். தடை நீக்கிய பின்பு இவர் முதலாவது முறையாக அடுத்த .மாதம் இடம்பெறவுள்ள மேற்கிந்திய அணிக்கெதிரான போட்டியில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.




சிவன் எழுதும்
திக்.... திக்...
தொடர்
நள்ளிரவு
மல்லிகை
வெகுவிரைவில்
எதிர்பாருங்கள
உங்கள் முரசில்



## எந்த கிழமையில் பிறந்தீர்கள்?

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமீ J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

### ஆதிக்கம் 8 : பிறந்த கிழமை புதன்

அட்டாவதானி என்பது எட்டு விடயங்களை ஒரே நேரத்தில் செய்யக்கூடியவர்கள். புதன் புகழுக்கும் மங்கலத்திற்கும் உரிய உயரிய கிழமை. இந்தச் சிறப்புக்களைக் கொண்ட எண் 8 இல் புதன்கிழமையில் பிறந்த நீங்கள் கோபக்குணம் உடையவராக இருப்பீர்கள். கோபம் என்பது நெருப்பு என்பதை உணரமாட்டீர்கள். நீங்கள் கோபம் உடையவராக இருப்பதனால் உங்கள் உறவினர்களும் நண்பர்களும் உங்களோடு பழகுவதற்குத் தயங்குவார்கள். எதற்கெடுத்தாலும் கோபப்படுகின்றவர்கள்தான் நீங்கள்.

கோபம் உள்ள இடத்தில் நல்ல குணம் இருக்கும் என்பார்கள். இதற்கேற்ப கோபம் தணிந்தவுடன் சாந்தமாக நடந்துகொள்வீர்கள்.

பிறருக்கு உதவி செய்வதில் அதிக நாட்டம் உடையவராக நீங்கள் இருப்பீர்கள். அதிலும் கஷ்டப்படுகின்றவர்களுக்கு உதவி செய்வதில் மிகுந்த விருப்பமுள்ளவராக விளங்குவீர்கள். நல்ல மனம் உள்ளவராக நீங்கள் இருப்பதனால் உங்களுக்கு எந்தக் குறையும் ஏற்படாது. நீங்கள் ஒரு காரியத்தைச் செய்ய நினைத்தால் தள்ளிப் போடமாட்டீர்கள். வீண் சோம்பல் காரணமாகக் காலத்தைக் கடத்த மாட்டீர்கள். காரியத்தை நல்ல முறையில் செய்து முடிக்கும் வரைக்கும் அதன் பொருட்டுத் தான் செயற்படுவீர்கள்.

வீண் பேச்சு உங்களுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தும். அதனால் வீண் பேச்சை நீங்கள் தவிர்ப்பது நன்மை தரும். சிலருடன் வீண் பேச்சுப் பேசி சண்டை கூட செய்துகொள்ளும் நிலைமைக்குப் போவீர்கள். இதற்குக் காரணம் உங்களிடம் காணப்படும் கோபம் ஆகும். ஒன்று நடந்த பிறகுதான் வருந்துவீர்கள். இதனால் பயன் இல்லை. மழையில் நனைந்த பிறகு குடைபிடிப்பதால் பயன் என்ன?

கல்வி விஷயத்தைப் பொறுத்தவரையில் உங்களுக்கு முன்னேற்றம் நிகழாது. தொடர்ந்து படித்து முன்னேறக்கூடிய பாக்கியம் உங்களுக்கு இல்லை. இதனால் நீங்கள் சிரமப்பட்டுத்தான் முன்னேறுவீர்கள். கஷ்டப்பட்டுத்தான் பணம் சம்பாதிக்க வேண்டிவரும். அடிக்கடி வெளியூர் செல்ல வேண்டிய சூழ்நிலை உங்களுக்கு உருவாகும்.

நீங்கள் தொழில் செய்யும் ஆரம்ப காலத்தில் பல்வேறு கஷ்டங்களையும், சிரமங்களையும் அனுபவிக்க வேண்டிவரும். வேலை செய்பவர்களுடன் ஒத்துப்போகவோ அல்லது ஒத்துழைக்கவோ மாட்டீர்கள். உங்களுடைய வீண் பேச்சு, முன்கோபம் காரணமாகத் தகராறுகள் ஏற்பட இடமுண்டு. இதனால் ஓரிடத்தில் நிலைத்து தொழில் செய்யமாட்டீர்கள். பல இடங்களிலும் மாறி மாறித் தொழில் செய்வீர்கள். இதனால் வருமானம் குறையும். துன்பப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவீர்கள். மேற்குறிப்பிட்ட துரதிர்ஷ்டமான நிலை வாழ்க்கை முழுவதும் நிலைக்காது; தொடராது. உங்கள் குறையினை நீங்கள் உணரும் வரைக்குத்தான் இந்த நிலை உருவாகும். நீங்கள் உங்களை தெரிந்துகொண்டபின் உங்கள் கிரக சோதிட நிலை மாறும். இதற்கு நீங்கள் 30 வயதை அடைய வேண்டும். 30 வயதிலிருந்துதான் தொழில் முறையில் இலாபமோ வருமானமோ முன்னேற்றமோ ஏற்படும்.

31 வயது ஆரம்பித்து 40 வயது வரை உங்களுடைய வருமானம் படிப்படியாக உயர்ந்து செல்லும். 41 வயது தொடக்கம் 50 வயது வரை வருமானம் குறிப்பிடும்படியாக இருந்தாலும், இடையிடையே கஷ்டங்களும் தோன்றத்தான் செய்யும். நீங்கள் சமாளித்துவிடுவீர்கள். 51 வயது தொடக்கம் 60 வயது வரை வருமானம் சமநிலையில் இருக்கும். இருந்தாலும் ஆயுள் வரை சுகமாகவும் சந்தோசமாகவும் வாழக்கூடிய யோகம் உங்களுடையது.

12 வயதிலும் 48 வயதிலும் கண்டம் ஏற்படும். தீங்குகள் ஏற்படாது. அவ்வப்போது தடிமன், தலைவலி என்பன ஏற்பட்டுக் குணமாகும். 12 வயது தொடக்கம் 45 வயது வரை உங்களுக்குச் சிறுநீர் சம்பந்தமான நோய் ஏற்படும். பின்னர் குணமாகிவிடும். 46 வயதில் இருந்து அஜீரணம், வயிற்றுவலி ஏற்பட்டுக் குணமாகும். இதன் பின்னர் நீங்கள் மரணிக்கும் வரையிலும் எந்தவித நோய்களும் ஏற்படாது. நீங்கள் பழுப்பு நிறமான அல்லது சாம்பல் நிறமுடைய சர்ட் அணிந்தால் யோகத்தைத் தரும்.

வெளிர்நீல நீண்ட சதுரக்கல் பதித்த வெள்ளி மோதிரம் அணியுங்கள். உங்களுக்கு வாழ்க்கையில் வெற்றிகளையும், நல்ல வருமானங்களையும், சிறப்புகளையும் ஏற்படுத்தக்கூடிய அதிர்ஷ்ட எண் ஐந்து. எனவே ஒரு மாதத்தில் வரக்கூடிய 5, 14, 23 திகதிகளில் நீங்கள் செய்கின்ற அல்லது ஆரம்பிக்கின்ற எந்தக் காரியமானாலும் வெற்றியினைத் தரும். இந்தத் திகதிகள் நீங்கள் பிறந்த புதன்கிழமையில் அமையுமாக இருந்தால் இதன் பலன் பன்மடங்காகும் என்பது நிச்சயமாகும்.

நீங்கள் வசிக்கின்ற இல்லத்தின் எண் ஒற்றை எண்ணாக அமைந்திருந்தால் வீடும் உங்களுக்கு அதிர்ஷ்டத்தைத் தேடித் தரும். ஆகவே ஆதிக்க எண் 8ஐயும் புதன் கிழமையினையும் ஜாதகமாகக் கொண்ட நீங்கள் வாழ்க்கையில் சகல வெற்றிகளையும் பெற என் நல்லாசிகள்.

கோபக் குணம் எண் எட்டோடு புதன் சேர்ந்தால் உண்டாகும். சாந்தக் குணம் நீர் கொண்டால் உந்தன் பலன் அதிர்ஷ்டமாகும்.

**அடுத்த வாரம் ஆதிக்கம் 8 வியாழக்கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# நெப்போலியன் போனபார்ட் (1769 - 1821)

சென்ற வாரத் தொடர்ச்சி.....

## உலகை வியக்க வைத்தவர்கள்

ஆயினும் 1804இல் அவர் தம்மைத் தாமே பிரான்ஸின் பேரரசராக்கிக் கொண்டார். மேலும் சகோதரர் மூவரை ஐரோப்பிய அரசுகளின் அரியணையில் அமர்த்தினார். இச் செயல்களைக் கண்டு பிரெஞ்சுக் குடியரசுவாதிகள் வெகுண்டனர். அவை பிரெஞ்சுப் புரட்சியின் குறிக்கோள்களையே சிதைத்து விட்டதாக அவர்கள் கருதினர்.

ஆயினும் நெப்போலியனின் உண்மையான இடர்ப்பாடுகள் அயல்நாட்டுப் போர்களினாலேயே எழுந்தன.

நெப்போலியன் 1802இல் ஏமியன்சில் இங்கிலாந்துடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அது பத்தாண்டுகளாகத் தொடர்ந்து நிகழ்ந்துவந்த போர்களுக்குப் பிறகு பிரான்சுக்கு ஓய்வளித்தது. ஆயினும் அடுத்த ஆண்டே அவ்வுடன்படிக்கை முறிந்தது. இங்கிலாந்துடனும் அதன் நட்பு நாடுகளுடனும் நீண்ட காலப் போர் தொடங்கியது. நெப்போலியனின் படைகள் நிலத்தில் வெற்றிகளைக் குவித்த போதிலும், இங்கிலாந்தைத் தோற்கடிப்பதற்கு அதன் கப்பற் படையை முறியடிக்க வேண்டியிருந்தது. ஆனால் 1805இல் ட்ரா.:.பால்கர் போரில் ஆங்கிலேய கப்பற் படை மாபெரும் வெற்றி பெற்றது. ஆகவே, இங்கிலாந்தின் கடல் வலிமை குலையவில்லை. ட்ரா.:. பால்கர் போருக்கு ஆறு வாரங்கள் கழித்து நெப்போலியன் (ஆஸ்டர் லிட்ஸில் ஆஸ்திரிய "ரஷ்ய"ப் படைகளை முறியடித்து) மாபெரும் வெற்றி பெற்ற போதிலும், கடற் போரில் அவர் அடைந்த தோல்விக்கு அதனால் ஈடுசெய்ய இயலவில்லை.



1808இல் நெப்போலியன் பிரான்ஸை ஒரு நீண்ட பயனற்ற போரில் மூடத்தனமாக ஈடுபடுத்தினார். அப் போரில் பிரெஞ்சுப் படைகள் ஐபீரியத் தீபகற்பத்தில் நீண்டகாலமாக அழுந்திக் கிடந்தன. ஆயினும், நெப்போலியனின் மாபெரும் தவறு அவரது ரஷ்யப் படையெடுப்பே. 1807இல் நெப்போலியன் ரஷ்ய மன்னரைச் சந்தித்தார். டில்சிட் உடன்படிக்கையின்படி இருவரும் அணையா நட்புறவு கொள்ள இசைந்தனர். ஆனால் அந்நட்புறவு நாளடைவில் நலிவுற்றது. ஜூன் 1812இல் நெப்போலியன் தமது பெரும் படையுடன் ரஷ்யாவினுள் நுழைந்தார்.

அதன் விளைவு அனைவர்க்கும் தெரிந்தவையே. ரஷ்யப் படைகள் நெப்போலியனுடன் நேரில் பொருதுவதைத் தவிர்த்தன. ஆகவே நெப்போலியன் விரைவாக முன்னேற முடிந்தது. செப்டம்பரில் அவர் மாஸ்கோவைக் கைப்பற்றினார். ஆயினும் ரஷ்யர் நகரைக் கொளுத்தி விட்டனர். அதன் பெரும் பகுதி அழிந்து விட்டது. 5 வாரங்கள் மாஸ்கோவில் தங்கிவிட்டு ரஷ்யர்கள் பணிந்து அமைதி வேண்டுவார்களென்று வீணாக நம்பி, இறுதியில் நெப்போலியன் பின்வாங்கத் தீர்மானித்தார்.

ஆனால், அதற்குள்ளாகக் காலம் கடந்து விட்டது. ரஷ்யப் படைகளின் தாக்குதல்களும், ரஷ்யாவின் குளிர்காலத்தின் கடுமையும், பிரெஞ்சுப் படைகளின் உணவுப் பொருள் பற்றாக்குறையும் ஒன்று சேர்ந்து பின்வாங்கிய பிரெஞ்சுப் படைகளை நிலை குலைந்து ஓடச் செய்தன. நெப்போலியன் பெரும்படையில் பத்தில் ஒரு பகுதியினரே ரஷ்யாவிலிருந்து உயிருடன் வெளியேறினர்.

ஆஸ்திரியா, பிரஷ்யா போன்ற பிற ஐரோப்பிய நாடுகள் பிரெஞ்சு ஆதிக்கத்தைத் தகர்த்தெறிய அதுவே தருணமென்பதை உணர்ந்தன. அவை ஒன்று சேர்ந்து நெப்போலியனை எதிர்த்தன. அக்டோபர் 1813 இல் லீப்சிக் போரில் நெப்போலியன் மற்றொரு மாபெரும் தோல்வியைத் தழுவினார். அடுத்த ஆண்டு அவர் அரியணை துறந்தார். இத்தாலியக் கரைக்கப்பாலுள்ள சிறிய எல்பா தீவுக்கு அவர் கடத்தப்பட்டார்.

1815இல் நெப்போலியன் எல்பாவிலிருந்து தப்பி, பிரான்ஸ் திரும்பினார். அங்கு மக்கள் அவரை வரவேற்று மீண்டும் ஆட்சியில் அமர்த்தினர். ஆனால், பிற ஐரோப்பிய அரசுகள் உடனே அவர் மீது போர் தொடுத்தன. மீண்டும் ஆட்சிக்கு வந்த நூறு நாட்களுக்குப் பிறகு வாட்டர்லூ போரில் இறுதியாக முறியடிக்கப்பட்டார். வாட்டர்லூ போருக்குப் பிறகு ஆங்கிலேயர் அவரைத் தெற்கு அட்லாண்டிக் பெருங்கடலிலுள்ள செயின்ட் ஹெலினா எனும் சிறிய தீவில் சிறைப்படுத்தினர். 1821 இல் அவர் அங்கே புற்று நோயினால் இறந்தார்.

நெப்போலியன் படைத்துறை வாழ்க்கை வியத்தகு புதிராக இருக்கிறது. படைத்திறன் சூழ்ச்சியில் அவரது அறிவு மிளிர்கின்றது. அதை மட்டும் வைத்து அவரை மதிப்பிடுவோமானால் அவரை எதிர்காலத்துக்குமுரிய மிக உயர்ந்த படைத்தளபதியாகக் கருதலாம். ஆனால் போர்த்திறன் நடவடிக்கைகளில் அவர் நம்ப முடியாத பெருந்தவறுகளைச் செய்தார். எகிப்து, ரஷ்யா ஆகிய நாடுகளின் மீது அவர் படையெடுத்ததை எடுத்துக்காட்டாகக் கூறலாம். அவருடைய போர் நடவடிக்கைத் தவறுகள் எவ்வளவு அதிர்ச்சி தருபவையாக இருக்கின்றனவென்றால், நெப்போலியனுக்குப் படைத்துறைத் தலைவர்களுள் முதலிடம் தர இயலாது. இந்த இரண்டாம் கருத்து தவறானதா? இல்லை. அழிவு தரும் தவறுகளைத் தவிர்க்கும் திறமை ஒரு படைத் தளபதியின் சிறப்புக்கு அளவுகோல். மகா அலெக்சாந்தர், ஜெங்கிஸ்கான், தாமர்லேன் போன்ற பெரும் தளபதிகளைப் பற்றி இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. அவர்களுடைய படைகள் ஒரு போதும் தோல்வியடையவில்லை.

(வியப்புக்கள் தொடரும்....)

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
-காதில பூ கந்தசாமி-

சம்பந்தா சம்பந்தமில்லாமல் பிரச்சினைகளைச் சம்பந்தமில்லாதவையிற்ர சம்பந்தமில்லாம சம்பந்தப்படுத்திப் பேசுவது இப்ப சம்பிரதாயமா போயிட்டுது. சமரசமில்லாத பொதுக் கட்டமைப்பு சம்பந்தமாக சம்பந்தமானவரிட்ட பேசியிருக்கிறா கிறிஸ்ரினா ரொக்கா. அப்படி என்னதான் சம்பந்தமானவரிட்ட பேசினவ எண்டதை இங்கிலீஷில சொன்னா அவ்வளவு நல்லா இருக்காது எண்டிட்டு சம்பந்தமானவர் டபிள் பி ஒன் சிக்காரருக்கு கொடுத்த பேட்டியை அப்பிடியே எங்கட டபிள் சி ஒன் பிக்கு திருப்பிப் போட்டால் எப்படி வருமெண்டதுதான் எனக்கு யோசனை. டபிள் சி ஒன் பி எண்டதும் என்னடா புதுசா இருக்கெண்டு யோசிச்சுப் போடாதேங்கோ. டபிள் பி ஒன் சி யை எப்பிடி சொல்லிறியளோ அதே போலத் தான் டபிள் சி ஒன் பி யையும் சொல்லவேணும். அதாவது சி.சி.பி. எண்டு நினைச்சுக் கொள்ளுங்கோ. இனி ஸ்டேஷனில இருந்து கேள்விகள தொடுப்பம்.

**கா.பூ** :- ஹலோ! சம்பந்தமானவரோ...... நாங்கள் டபிள் சி ஒன் பி இல் இருந்து கதைக்கிறம். நீங்கள் ரொக்காவோட பேசின விஷயங்கள புலம்பெயர்ந் திருக்கிற எங்கட சனத்துக்கு விளங்கப்படுத்த வேணும்.

**சம்** :- முதலில சி.சி.பி.யைப் பற்றி நாம் கேள்விப்பட்டதில்லை. ஆனாலும், புலம்பெயர்ந்தவர்கள் கேக்கினமெண்டால் புலம்பித்தானே.... மன்னிக்கவும்..... பேசித்தானே ஆகணும். உங்கட கேள்விய கேளுங்கோ.

**கா.பூ** :- தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பிரதி இராஜாங்கச் செயலாளரை நீங்கள் சந்திக்கப் போனபோது அவா என்ன பேசினவ?

**சம்** :- ஹலோ கமிங் சிட் டவுன் எண்டு சொன்னவ. கதிரையில்லையோ எண்டு திரும்பிப் பாத்துப்போட்டு டவுன் எண்டு சொன்னதையும் பொருட்படுத்தாமல் சீட்டிண்ட அப்புல இருந்து கொண்டன். பாவம் துணைக்கு வந்த பென்ஸ் தம்பி அப்பையும், டவுனையும் விளங்கிக் கொள்ளாம எனக்குப் பக்கத்திலயே இருந்துபோட்டார்.

**கா.பூ** :- அதக் கேக்கயில்லை நான். ஏனெண்டால் அவா காலுக்கு மேல் கால் போட்டு ஸ்டைலா இருந்திருப்பா. நீங்கள் பவ்வியமாகப் பதுங்குமாப்போல கதிரையின்ர நுனியில தொங்கியிருப்பியள் என்பது எனக்குத் தெரியும். அதை விடுங்கோ! பொலிடிக்ஸ் என்ன பேசினியள் எண்டு சொல்லுங்கோ.

**சம்** :- பொலிடிக்ஸ் எண்டு ஒண்டையும் பேச யில்ல. பொதுக் கட்டமைப்பைப் பற்றித்தான் பேசினம். அவா சொன்ன விஷயங்கள் புதிய தலையிடியை தந்திருக்கு.

**கா.பூ** :- தலையிடி தாற அளவுக்கு அப்பிடி என்ன கேட்டவ?

**சம்** :- புலிகள் தொடர்ந்தும் அரசியல் வேலைத்திட்டத்துக்குள்ள இருக்கவேணுமாம். அதுமட்டுமில்லாம பொதுக் கட்டமைப்புக்கு புலிகளை இணங்கவைக்க வேணுமாம் எண்டுதான் சொன்னவ.

**கா.பூ** :- இந்த ரெண்டு கோரிக்கைகளிலயும் உங்களுக்குத் தலையிடியைத் தந்தது எது?

**சம்** :- பொதுக் கட்டமைப்புக்கு வாங்கோ எண்டு புலிகளிற்ர கேக்கலாம். அரசியல் நீரோட்டத் துக்குள்ளேயே இருங்கோவெண்டதை எப்படிக் கேக்கிறது? துவக்கு தூக்கிப் பழகினவைக்கு பேன தூக்கிப் பழக முடியாது தானே?

**கா.பூ** :- அது சரி! ஜே.வி.பி. புலிகளைப் பற்றி மனித உரிமைகள் சம்பந்தமாக அவாவிட்ட போட்டுக் குடுத்திருக்கினமாம். அதப் பத்தி ஏதாவது சொன்னவவா?

**சம்** :- ஓமோம்.....ஆனால் புலிகளின்ர மனித உரிமைகளைப் பற்றிப் பேச ஜே.வி.பி.க்கு என்ன அருகதை இருக்கெண்டு அழுத்தம் திருத்தமா சொல்லிப்போட்டம். இவ்விதமாக நான் சொன்னதற்கு ஒரு காரணம், புலிகள் மனித உரிமைகளை மீறினம் எண்டதை நான் மறுத்துப் பேசயில்லை எண்டதை அவா புரிஞ்சுக்கொள்ள வேணும் எண்டதுதான்.

**கா.பூ** :- நீங்கள் பொதுக் கட்டமைப்பு தொடர்பாக என்ன விதமான வேண்டுகோளை முன்வைத்தீர்கள்?

**சம்** :- எங்களைப் பொறுத்தவரைக்கும் பொதுக் கட்டமைப்பாக இருந்தாலும் சின்னதா ஒரு ஓலைக் குடில் போடுறதாக இருந்தாலும் புலிகளோட பேசுங்கோ எண்டதை திரும்பவும் வலியுறுத்தி இருக்கிறம். அதுபோக அரசாங்கத் தரப்பை எப்படி எண்டாலும் சம்மதிக்க வைக்கவேணும் எண்டதையும் அவ்விதமான உதவியை அமெரிக்கா செய்யமுடியும் எண்டதையும் அழுத்தம் திருத்தமாய் சொல்லியிருக்கிறம்.

**கா.பூ** :- இவ்விதமாக நீங்கள் சொன்னத அவா அவ்விதமாகவே புரிஞ்சு கொண்டிருப்பா எண்டதை எவ்விதம் நீங்கள் நம்புகிறீர்கள்?

**சம்** :- பாத்தியளோ கா.பூ! இவ்விதம் அவ்விதம் எண்டு நான் அடிக்கடி பாவிக்கும் வசனங்களை நீங்கள் பழகிக் கொண்டியள் எண்டதைப் போலத்தான் பலவிதமாக நான் பேசினதுகளை அவ்விதமே அவா விளங்கிக் கொண்டிருப்பா எண்டு இவ்விதம் நான் சொல்லக் கூடியதாக உள்ளது.

**கா.பூ** :- அவ்விதம் நடந்தால் நல்லதுதான். ஆனால் ஏதோ ஒண்டு இடிக்குமாப் போல இருக்கே. அதாவது கூட வந்தவர் தன்ர இங்கிலீஷ் புலமையை காட்டயில்லையோ!

**சம்** :- காட்டினவர் காட்டினவர். இன்னம் கொஞ்சம் நேரம் கிடைச்சிருந்தால் கிறிஸ்ரினா ரொக்காவுக்கே இங்கிலீஷ் கிளாஸ் எடுத்திருப்பார். நல்ல நேரமாக அது நடக்காம போயிட்டுது.

**கா.பூ** :- வேலைவெட்டியில்லாத உங்கட நேரத்தை சி.சி.பி.க்காக சின்னதா யூஸ் பண்ணினதுக்கு நன்றிங்கோ! பாய்.....பாய்......!

யாவும் கலப்படமற்ற கற்பனை

# இந்த வாரம் உங்கள் பலன்

(28.04.2005 தொடங்கி 04.05.2005 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

மேடம்- சூரியன், வெள்ளி, மிதுனம் - சனி, கன்னி - வியாழன், கேது, கும்பம் - செவ்வாய், மீனம் - புதன், இராகு.
சந்திரன் - தனு, மகரம், கும்பம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நிலை மாற்றம், செலவுமிகுதி, கடன் படல், வீண் மனஸ்தாபம், குடும்பப் பொறுப்பு, உறவினர் கலகம், உத்தியோக சிரமம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் நன்மை, உயர்ந்த நிலை, கௌரவம், பெரியோர் சகாயம், வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு, உத்தியோக கவலை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் மேன்மை, பொருள் வரவு, பெரியோர் சகாயம், மனக்குறை நீங்கும், குடும்பக் கஷ்டம், உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் பலிதம், பொருள் விரயம், அந்நியர் நட்பு, செலவதிகம், குடும்பக் கவலை, உறவினர் தொல்லை, உத்தியோக சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.) தொழில் அலைச்சல், செலவு மிகுதி, துயர் அதிகம், வெளியிட பயணம், மனக் குழப்பம், குடும்ப நன்மை, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் மேன்மை, காரியானு கூலம், பெரியோர் சகாயம், இனசன நன்மை, குடும்ப பாரம், உத்தியோக மாற்றம், மனக் கலக்கம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் சிரமம், செலவதிகம், கடன் தொல்லை, மனக்குறையதிகம், பிராயணமிகுதி, குடும்பத் தொல்லை, திடீர் குழப்பம், உத்தியோக கவலை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் மந்தம், வீண்செலவு, மனக் கவலை, பெரியோர் சகாயம், குடும்ப மகிழ்ச்சி, உறவினர் உதவி, உத்தியோக குழப்பம், வீண் மனஸ்தாபம், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 05.**

**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் பலிதம், பொருள் வரவு, அந்நியர் நட்பு, மனக்குறை நீங்கும், பிரயாண மிகுதி, தேக சுகம் பாதிப்பு, உத்தியோக உயர்ச்சி, பதவி மாற்றம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் மேன்மை, பொருள் பேறு, மனக்குறை நீங்கும், குடும்ப சுகம், உத்தியோக மாற்றம், மனக் குழப்பம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் அலைச்சல், செலவு மிகுதி, உயர்ந்த நிலை, வெளியார் தொல்லை, குடும்பக் கலகம், உத்தியோக சிறப்பு, மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**மீனம் :** (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும், பெரியோர் சகாயம், குடும்பக் கஷ்டம், பிள்ளைகளால் செலவு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**


Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)

# நன்றியுள்ள



நாய்களைப் பொதுவாக நாம் நன்றியுள்ள மிருகமாகக் கருதுகிறோம். அந்த வகையில் இங்கு காணப்படும் நாயானது மிகப் பெரிய நன்றியுடையது. இங்குள்ள நாய், உலகிலே அதிக உயரமும் நீளமும் உள்ள நாய் என பதியப்பட்டுள்ளது. அப்படி என்ன பெரிய உயரம் என்றால், 105.41 செ.மீ. உயரம். (41.5 அங்குலம்) அதே போல் மூக்கு நுனியிலிருந்து இதன் வால் வரையான நீளம் 231.14 செ.மீ. (91 அங்குலம்) இது சாதாரண நாய்களின் உயரத்தைவிட கிட்டத்தட்ட 3 மடங்கு பெரியதாகும். இந் நாயின் உரிமையாளரான சார்ள்ஸ் டோட்மேன் என்பவர் இந் நாயைப் பற்றிக் குறிப்பிடும் போது, "ஆரம்பத்தில் இது சாதாரண நாய்கள் போல் உயரமாக இருந்தாலும், நாள் செல்லச் செல்ல இதன் உயரம் அதிகரித்தது என்னை மிகவும் வியக்க வைத்தது" என்று கூறுகிறார். நன்றி, உயரத்தில் மட்டுமில்லாமல் குணத்தில் இருந்தாலும் சரி.

படத்தில் இருப்பவர் ஏதோ ஒரு ஏவுகணையைக் கையில் தூக்கியிருக்கிறார் என்று நினைக்கத் தோன்றுகிறதா? இல்லவேயில்லை. இவர் பிரித்தானியாவைச் சேர்ந்த சாதாரண ஒரு விவசாயி. இவரின் தோட்டத்தில் விளைந்த மிகப் பெரிய வெள்ளரிக்காயே இது. இது 12.4 கிலோ கிறாம் எடையுடையது. இவ் வெள்ளரிக்காயானது 'தேசிய இராட்சத மரக்கறி செம்பியன் சிப் போட்டியில்' முதலிடத்தை வகித்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. ஆளுக்கேற்ற வகையில் வெள்ளரிக்காயும் உள்ளது இங்கு சிறப்பம்சம்.






பாம்பென்றால் எல்லோருக்கும் பயம்தான். (சூப்பர் ஸ்டாருக்கும் கூட) இங்கு காணப்படும் பாம்பு வீசேட அம்சங்கள் பொருந்திய பாம்பு. அதாவது உலகில் மிகக் கூடிய காலம் வாழ்ந்த பாம்பு. அண்ணளவாக இப் பாம்பு 40 வருடங்களும், 3 மாதங்களும் வாழ்ந்துள்ளது. மலைப் பாம்பு வகையைச் சேர்ந்த இப்பாம்பு தற்போது உயிருடன் இல்லாவிட்டாலும், உயிரோடு இருந்த காலத்தில் இப் பாம்பானது அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்திலுள்ள ஒரு மிருகக்காட்சிச் சாலையில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படமே இது. வயது போன நிலையிலும் பாம்பின் இளமைத் தோற்றத்தையே படம் பிரதிபலிக்கிறது.

## பா.....பா.....பா.....ம்.....பு...

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



சுவிஸில் வசிக்கும் உதயராஜ் - ஜெயவாணி தம்பதிகளின் செல்வப் புதல்வி தரணிகா தனது 1ஆவது பிறந்தநாளை 29.04.2005இல் இலங்கையில் உள்ள தனது அப்பம்மா வீட்டில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா - அம்மா, இலங்கையில் வசிக்கும் அப்பம்மா, சித்தப்பா சுதிறாச், அம்மப்பா, அம்மமமா, பெரியம்மா ஜெயாளினி, குட்டி அப்பப்பா, குட்டி அப்பம்மா, அத்தைமார், ராஜேஸ்வரன் மாமா, அத்தை, மச்சாள்மார், பெரியப்பாமார், பெரியம்மமாமார், மாமாமார், அத்தைமார், சித்திமார், சித்தப்பாமார், அப்பப்பாமார், அப்பம்மாமார், அம்மப்பாமார், அம்மம்மாமார், பூட்டிமார், அண்ணாமார், அக்காமார், ஸ்ரீமாமா, தங்கா அத்தை, லக்சிகா மச்சாள் (சுவிஸ்), சந்திரன் பெரியப்பா, தயாழினி பெரியம்மா, அபிஷா அக்கா (ஜேர்மனி), ஜெயகாந்தன் மாமா (கனடா), குணேஸ் மாமா (லண்டன்), குணாளன் பெரியப்பா குடும்பம் (லண்டன்), சுரேஸ் பெரியப்பா குடும்பம் (ஜேர்மனி) மகேந்திரலிங்கம் மாமா குடும்பம் (நோர்வே), இரத்தினசிகாமணி தாத்தா குடும்பம் (சுவிஸ்) மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று நலமுடன் பல்லாண்டு காலம் வாழ்கவென மனமார வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
அம்மப்பா தங்கலிங்கம்
517, ரத்தினபுரம், கிளிநொச்சி.

செல்வி தரணிகா
29.04.2005

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து



அலெக்ஸ் /21.04.2005

சித்தங்கேணி - சங்கானையைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை (Adliswil) வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரன் (குணா) - சுஜீவா தம்பதிகளின் செல்வப் புதல்வன் அலெக்ஸ் (Alex) தனது முதலாவது பிறந்தநாளை 21.04.2005 அன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா - அம்மா, இலங்கையில் இருக்கும் அம்மம்மா, பாட்டி, சுவிஸிலிருக்கும் அப்பம்மா, பெரியப்பாமார் - பெரியம்மாமார், சித்தப்பாமார் - சித்திமார், மாமாமார், அத்தைமார், அக்காமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் பேரன்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: அப்பா குணா, அட்லிஸ்வீல், சுவிஸ்.